44260

செய்தக்காதிறு மரக்காயர்

# திருமண வாழ்த்து


பதிப்பாளர்

S. முஹம்மது ஹுஸைன் நயினார்

பி. ஏ. (மதராஸ்), எம். ஏ., எல் எல். பி. (அலிகார்), பிஹெச். டி. (லண்டன்)

பேராசிரியர், அறபி, பார்ஸி, உறுது பகுதியின் தலைவர்

சென்னைப் பல்கலைக்கழகம்



வெளியிட்டவர்

Mrs. சுல்தானா அப்துல்லாஹ், எம். ஏ., பி.டி.

95, சான்தோம் பெரியசாலை

மயிலாப்பூர், மதராஸ்—4

பதிப்புரிமை ] 1953 [illegible]

முதற் பதிப்பு 1953

நூரி பிரஸ்
54, மெயின் ரோடு
இராயபுரம், மதராஸ்

புத்தகம் கிடைக்கும் இடம்

எஸ். வாஸன் கம்பெனி

மயிலாப்பூர், மதராஸ்

# செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து

## உள்ளுறை

| | | |
|---|---|---|
| நூலாராய்ச்சி | ... | i—xii |
| நூல் | ... | 1—31 |
| கடவுள் வாழ்த்து | ... | 1 |
| தசாங்கம் | ... | 2 |
| பாட்டுடைத்தலைவன் வரலாறு | ... | 3—6 |
| நிச்சிதார்த்தம் | ... | 7—8 |
| பந்தற்கால் முகூர்த்தமும் மணவறை அலங்காரமும் | ... | 9—11 |
| மணமகன் அலங்காரம் | ... | 12—13 |
| பவனி வருதல், மகளிர் கூற்று | ... | 13—21 |
| மணமகன் மணவறை சேர்தல் | ... | 22—23 |
| மணமகள் அலங்காரமும் மணவறை சேர்த்தலும் | ... | 23—24 |
| மணமக்களை வியந்து உரைத்தல் | ... | 25—26 |
| மைத்துனர் நகையாடல் | ... | 26—27 |
| வரிசை வழங்கல் | ... | 28—30 |
| வாழ்த்துரை | ... | 31 |
| குறிப்புரை | ... | 33—34 |
| அரும்பதவுரை | ... | 35—36 |

# திருமண வாழ்த்து

## நூலாராய்ச்சி

இந் நூல் சீதக்காதி வள்ளலாரின் திருமண வரலாற்றை நயமுற எடுத்துக் கூறுகின்றது. இதனால், அவர் குடும்பத்தின் பெருமையும், செல்வமும் நன்கு தெரிவதுடன், அக்காலத்திலுள்ள தமிழர்நாகரிகமும், பழக்க வழக்கங்களும் ஒருவாறு புலனாகின்றன.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பர் இராமாயணத்தைக் காப்பியமாகப் பாடினர் என்பர். அவர் காலத்திற்குப் பின் பெருங் காப்பியங்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை அதிகமாக இல்லை. சிறுகாப்பியங்களே மிகுதியாக இயற்றப்பட்டு வந்தன. பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பின் அம்மானை என்று சொல்லப்படும் சொற்சீரடிகளில் அமைந்த பாவினங்கள் தோன்ற ஆரம்பித்தன. அவை இரண்டு அடிக் கண்ணிகளால் ஆக்கப்பட்டவை. ஒவ்வோர் அடியும் நான்கு சீராய் வருவன. அதே காலத்தில் தான் பள்ளு, சிந்து ஆகிய நூல் வகைகளும் தோன்றின.

மேலே சொன்ன பாவினங்கள் வழக்கில் வரு முன்னர், செய்யுள் இயற்றுபவர், தமிழர்நாகரிகத்துக்குப் புறம்பான கருத்துக்களையும், சொற்களையும், தம் செய்யுளில் கையாள மாட்டார். அவ்விதம் சேர்த்துப் பாடப்பட்ட நூலை ஏனைய புலவர்கள் குற்றமற்ற தென்று ஏற்றுக்கொள்ளார். அக் காரணத்தாலே தமிழ்க் காவியங்களுள் வந்துள்ள கருத்துக்களும், சொற்றொடர்களும், ஏறக்குறைய ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. ஆனால், காலப்போக்கில் தமிழ்ப் புலவர்கள் தம் செந்தமிழ் நடையைக் கலப்பற்றதாக வைத்துக் காப்பாற்ற இயலவில்லை.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டிற்கு மேல் இந்தியாவில் முஸ்லிம்களின் நாகரிகமும், பழக்கவழக்கங்களும் எங்கும் பரவி வந்தன. அவற்றை விளக்கக்கூடிய பல புதிய சொற்களும், கருத்துக்களும் தமிழில் வழங்க ஆரம்பித்தன. அவற்றையும் சேர்த்துப் புலவர்கள் நூல்கள் இயற்றினர். அவ் வகையில் அம்மானை, பள்ளு, சிந்து, நாட்டியக்கலை முதலியன வெளி வந்தன. அவற்றில் வடசொற்கள் விரவியும், உலக வழக்குச் சொற்களும், திசைச் சொற்களும் ஆங்கங்கே அமைந்தும், பழமொழிகள் இடையிடையே சேர்ந்தும் எளிதிற் பொருள் புலப்படும் இனிய நடை அமைந்தும் விளங்கிய காரணத்தால் பொது மக்கள் அவற்றைக் கேட்டு மகிழ்ந்தும் மனப்பாடம் செய்து உவப்புடன் பாடியும் வந்தனர்.

சீதக்காதி பேரில் திருமண வாழ்த்து என்ற நூல் மேலே குறிக்கப்பட்ட அம்மானை வகையில் பாடப்பட்டிருக்கிறது. அதன் ஆசிரியர் உமறு கத்தாப் புலவர் என்று ஏட்டில் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் உமறு கத்தாப் என்ற புலவர் இருந்ததாகத் தெரியவில்லை. உமறு என்று ஒரு புலவர் இருந்தார். அவர் சீறுப்புராணம் பாடியிருக்கிறார். அவர்க்குக் கத்தாப் என்ற விசேடப் பெயர் இல்லை. கத்தாப் என்பது உமறு இப்னு அல்-கத்தாப் (கத்தாபின் மகன் உமறு) என்ற பெயரின் ஒரு பகுதி. உமறு-இப்னு அல்-கத்தாப் என்பது முகம்மதுநபி அவர்களுக்குப் பின் இரண்டாம் கலீபாவாக வந்தவருடைய பெயர்.

கத்தாப் என்ற அறபிப்பதம் பேச்சு வன்மை என்ற பொருளைக் குறிக்கும். உமறுவின் தந்தையாகிய கத்தாப் வன்மையாகவும், சொல்லழுத்தமாகவும் பேசுபவராகையால் அப் பெயரை அவருக்கு அறபியர் சூட்டியிருக்கலாம்.

தமிழ் நாட்டில் இஸ்லாம் பரவிய பின், உமறு இப்னு அல் கத்தாப் கலீபாவின் பெருமையைப் பாராட்டிய தமிழ் முஸ்லிம்கள் அவரை 'உமறுகத்தாப்' என்று வழக்கத்தில் பேசி வந்திருக்கிறார்கள். அதனால், 'கத்தாப்' என்பது கலீபா உமறுக்குச் சிறப்புப் பெயராக எண்ணும்படி இருக்கிறது.



அறியாதவர் அதைச் சிறப்புப் பெயரென்றே கருதியுமிருக்கலாம். உண்மையில், கலீபா உமறுவின் சிறப்புப் பெயர் அல்பாரூக் (பகுத்துப்பார்ப்பவர்) என்பது.

தமிழ் நாட்டில் உமறுப்புலவர் சீறுப்புராணம் என்ற அழகிய காப்பியத்தைப் பாடியிருப்பதனால், சிலர் புலவரின் வாக்கு வன்மையை மெச்சி அவரை உமறுகத்தாப் என்று அழைத்து வந்திருக்கலாம். அக்காரணத்தால் அப் பெயர் உமறுப் புலவரைக் குறிக்கும்; அவரே இந்த நூலைப் பாடியிருக்கலாம் என்று சிலர் கருதலாம். ஆனால், கல்யாண வாழ்த்தின் நடையை உற்று நோக்குபவர், தமிழ்க் காவியங்களில் நன்கு பயிற்சி பெற்ற உமறுப்புலவர் வாக்கு என்று திட்டமாகச் சொல்லத் தயங்குவர்; ஆனால், பல இடங்களில் உயர்ந்த நடையாக இருக்கிற தென்பதையும் மறுக்கமாட்டார்.

திருமண வாழ்த்தின் ஏட்டுப்பிரதி நமக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கீழக்கரையில் கிடைத்தது. அதில் சில இதழ்கள் காணப்படவில்லை. எஞ்சியிருக்கிற ஏடுகளிலும் சில வரிகளைச் செல்லரித்துவிட்டன. இந்த வாழ்த்து நெடுங்காலமாக மக்களிடையே வாய்மொழியாக வழங்கியும் இருக்கலாம். பிற்காலத்தில் குறைந்த கல்வியறிவுடையவர் ஒருவர் எழுதியிருக்க வேண்டும்; அதனால் எழுத்துப் பிழைகள் அதிகம் ஏற்பட்டிருக்க்லாம் என்று தெரிகிறது. மற்றொரு ஏடு கிடைக்கும்வரை இந்த நூலை உமறுப்புலவர்தாம் பாடினார் என்று திட்டமாகச் சொல்ல இடமில்லை.

வேறொரு வகையில் ஆராயும்போது உமறுப் புலவர் திருமண வாழ்த்தைப் பாடியிருக்க மாட்டாரென்று புலனாகின்றது. புலவருக்கும் வள்ளலாருக்கும் எங்ஙனம் நட்பு ஏற்பட்டதென்ற விவரத்தைக் கூறுங் கர்ண பரம்பரையான கதையைக் கவனிக்கும்போது வள்ளலாரின் கல்யாண காலத்தில் அவரைப் புலவர் அறிந்திருப்பரோ என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. எட்டையா புரத்தில் இளம் பிராயத்தினராயிருந்த உமறுப்புலவர் அப்போது வள்ளலாரைத் தெரிந்திருக்க மாட்டார் என்றே சொல்லலாம். வள்ளலாருக்கும்

புலவருக்கும் அதிக வயது வித்தியாச மிருந்ததென்று பல வகைக் காரணங்களால் அறிகிறோம். முக்கியமானதோர் காரணம் வருமாறு: புலவர் சீறாப் புராணத்தை இயற்றுவதற்கு வள்ளலார் காரணமாயிருந்தாலும் புராணம் பாடப்பட்டபோது வள்ளல் புகழுடம்பு அடைந்திருப்பார் என்று நன்கு தெரிகிறது. ஏனெனில், சீறாப்புராணத்தில் வள்ளலார் பெயர் எங்கும் காணப்படவில்லை. நூலை ஆதரித்த வள்ளல் அபுல்காஸிம் மரக்காயர் பெயர்தான் கூறப்படுகிறது. ஆனால், வள்ளலாரின் காலத்துக்கு முன் வபாத்தான சதக்கத்துல்லா வலி அவர்களைக் குருவென்று சீறாப் புராணத்தின் கடவுள் வாழ்த்தில் புலவர் பாடுகிறார். வலி அவர்கள் அக்காலத்தில் முஸ்லிம்களுக்கிடையே சிறந்த ஞானியாகவும், இஸ்லாம் மார்க்கத்தில் மக்கள் பயிலுவதற்கு அரும்பாடு பட்டுப் புத்துணர்ச்சியை ஊட்டிவந்த பெரியாராகவும் இருந்த காரணத்தாலும், நபி அவர்களின் சரிதையில் சில பாகத்தை வலி அவர்களின் மூலம் கற்றறிந்த காரணத்தாலும் குரு வென்று வணக்கம் செலுத்தியிருப்பார் என்று கொள்ளவேண்டும். வள்ளலார் கலியாண காலத்திற்குப் பின்னர் வாணிகத்தில் பெரும் பொருள் சேகரித்திருப்பார். அக்காலத்தில் அவர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்திருப்பாராகையால் நொண்டி நாடகத்தில் கூறியபடி புலவர் கூட்டத்தார் எல்லாம் கல்யாணகாலத்துக்குப் பிறகுதான் வள்ளலாரைத் தெரிந்திருப்பர். அக்குழுவில் உமறுப்புலவர் தலை சிறந்து விளங்கியிருப்பார் எனலாம்.

சீதக்காதியின் குடும்பம் நெடுங்காலமாகக் கீழக்கரையில் வாழ்ந்து வந்ததனால் அக் குடும்பத்தாருடன் அடுத்துப் பழகி நட்புக்கொண்டிருந்தவரும், அக்குடும்பத்தின் பழங்காலச் சிறப்பையும், பெருமையையும் நன்கு தெரிந்தவருமான புலவர் ஒருவர்தாம் திருமண வாழ்த்தைப் பாடியிருக்கவேண்டும். அவர் பெயர் இன்னதென்று தெரியவில்லை.

மனித வாழ்க்கையில் கல்யாணம் எப்பொழுதும் மிகவும் முக்கியமான அம்சமாய் இருக்கின்றது. தமிழர்நாகரிகத்தில் மணம்புரிதல் மிக்க சிறப்பாகவே கொண்டாடப்பட்டு வருகிறது.



மணமக்களைக் குறித்து வாழ்த்துப் பாடுவது தமிழர் மரபு. இவ் வாழ்த்து நூலில் கீழ்க்கண்ட முறைமை அறியப்படுகிறது.

வாழ்த்தின் ஆரம்பத்தில் தெய்வ வணக்கம் செலுத்திய பின் தசாங்கம் கூறி மணமகனுடைய குடும்பத்தின் சிறப்பையும் பெருமையையும் எடுத்துச்சொல்லி, நிச்சிதார்த்த விவரமும் மணமகனின் குணம், ஒழுக்கம், பெருமை இவையும், மணமகன் அலங்காரமும் ஊர்வலச் சிறப்பும், பவனி வரும்போது எழுவகைப் பருவ மாதரின் எழுச்சியும் பேச்சும், கல்யாணப் பந்தல், மணவறை ஆகியவற்றின் அலங்காரமும், மணமகளுக்கு ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கிற விவரமும், தாலி கட்டுதலும், மைத்துனர் போராட்டமும், வரிசை அளித்தலும் ஆகியவற்றைச் சிறப்புறக் கூறி மணமக்கள் இருவருக்கும் வாழ்த்துச் சொல்வதோடு முடிவுறுகின்றது.

## தசாங்கம்

பாட்டுடைத் தலைவனுக்கு உரிய தசாங்கம் கூறும் கண்ணிகளுள் நான்கு கண்ணிகள் எழுதிய ஏடு இல்லை. மலை, நதி, யானை, கொடி, முரசு என்பனவற்றைப் பாராட்டுகிறார். நதியைப் பாராட்டுகையில் முத்தும் நிதியும் நிறைந்ததென்று புகழ்கின்றார். முரசைச் சொல்லும் பகுதியில் சேர, சோழ, பாண்டியர்களை வெல்லக்கூடிய சேனையை உடையவரென்று வாழ்த்துகின்றார்.

## குலப் பெருமை

பாட்டுடைத் தலைவனாகிய சீதக்காதியைப் பாராட்டுகையில் அவர் குலத்தில் தோன்றிய பல பெரியார் செய்த அருமைச் செயல்கள் அவர் செய்தனவாக ஏற்றிச் சொல்லப்படுகின்றன. அங்ஙனம் அரசர்களையும் பிரபுக்களையும் புகழுமிடத்து அவரவர் முன்னோர்களுடைய செயல்களை அவர்கள் மேல் ஏற்றிப் புகழ்தல் புலவர்கள் மரபு. அவ் வகையில் மதுரைப் பாண்டியன்

வள்ளலாருக்கு ஒரு விருந்தளித்து சாணத்தால் எச்சில் தெளித்ததனால், பாண்டியனுக்கு வள்ளலாரும் ஒரு விருந் தளித்து அதற்குப் பின் விருந்துண்ட கூடத்தை எரித்த விவரத்தை,

"ஏதென்றீர் சாணக மிட்டாற்போ மெங்களெச்சில்
கூதொன்று முங்களெச்சில் சுட்டாற்போ மென்றதுங்கன்"

என்றவாறு புலப்படுத்தியது, பாண்டியன் மகளைக் கல்யாணம் செய்துகொண்டது, மழவனைக்காத்தது, நானூறு குதிரைக்கு மார்பேற்ற செட்டிகளைச் சிறை மீட்டது, கோமுட்டிகளைச் சிறை மீட்டது, ஆரியரை அரியாசனத்தில் வைத்தது, கம்மியரைத் தம் மகவாய்க் காத்தது, விரை நகர் மாவலியைக் காத்தது, சாணார்தமைக் காத்தது முதலியவற்றைச் சீதக் காதி செயல்களாக அவர்மேல் ஏற்றிக் கூறுதல் காண்க. அச் செய்திகளின் விவரம் விளங்காமையால் குறிப்புரை எழுதக்கூடவில்லை. நூல் வெளி வந்த பின்னர் விவரம் தெரிந்த பெரியார் அச் செய்திகளை விளக்க முன் வருவார்களென்று எதிர் பார்க்கிறோம்.

சீதக்காதி குடும்பத்தார் பல நாடுகளுடன் வாணிகம் செய்து வந்த பல தேசங்களின் பெயர்கள் கூறப்படுகின்றன. அந்நாடுகளில் கிடைக்கக்கூடிய பொருள் வகைகளுள் அம்பர், குங்குமப்பூ, பன்னீர், நாணயங்கள் முதலியன சொல்லப்பட் டிருக்கின்றன.

## மணமகன் ஒழுக்கம்

சீதக்காதி இஸ்லாமியக் கொள்கையின்படி வாழ்க்கை நடத்துதல், வேதியர், கற்றோர், பகீர் ஆகியவர்களை ஆத ரித்தல், வீரம், கருணை, வாய்மை, அழகு, அறிவு, பொறை, நிறை முதலிய குணங்கள் உடையராயிருத்தல் காரணமாக, தபோதனன், கலிக்கங்குலுக்கோர் சூரியன், வெம்புலி, ரண கேசரி, கண்ணன், அரிச்சந்திரன், மன்மதன், அகத்தியன், தருமன், சுபசோபனன் என்று பாராட்டுகின்றார் புலவர்.



மேலே சொன்னவிதமாக மணமகனாகிய சீதக்காதியின் சிறப்பை எடுத்தோதி நிச்சிதார்த்தம் செய்து, முகூர்த்தக் கால் நாட்டின விவரம் சொல்லப்படுகிறது.

## பந்தற் சிறப்பு

பற்பலவிதமாகச் சிங்காரிக்கப்பட்ட கல்யாணப் பந்தலின் அலங்காரம் மிக்க அழகாகச் சொல்லப்படுகிறது. செம் பொன், வெள்ளி, வச்சிரம், மரகதம், தங்கத் தகடு, மாணிக்கம், புருடராகம் ஆகியவற்றின் சரங்களை பத்திபத்தியாய்த் தூக்கி முன் முகப்பில் வேய்ந்து, மல்லிகை, முல்லை, சண்பகம், பிச்சி, வெண்டாமரை, செந்தாமரை, இருள்வாசி, செவ்வந்தி, கொன்றை, செவ்வாம்பல், மாதுளம்பூ, நீலோற்பலம் ஆகிய மலர்களால் கட்டப்பட்ட சரங்களைத் தொடுத்துப் பந்தரிடமெல் லாம் விதானித்து, தென்னம் பாளை, கதலித்தாறு, இளநீர்ப் பைங்குலை, எலுமிச்சம் பழம், கொழிஞ்சிப் பழம், வாழைப் பழம், தமரத்தம் பழம், பலாவின் கனி முதலியவற்றைத் தூக்கி, கரும்பு, கதலி, கமுகு ஆகியவற்றைத் தூண்கள்தோறும் சேர்த்தி, மேகவன்னப்பட்டு, வீரவாளிச் சேலை, ருத்ரவன்னி, சந்திர வன்னி, சூர்யபடம், பொற்சரிகைக் கம்பிக்கரைச் சேலை ஆகிய இவற்றை வன்னவன்னமாகக் கொய்து அலங்கரித்து, மணவறையில் சிங்காசனம் அமைத்தனர்.

நவரத்ன விளக்கும், தூண்டாமணி விளக்கும், தூக்கு விளக்கும், குத்துவிளக்கும், சித்திர விளக்கும் ஏற்றி, மணவறை முன் பொன்னிறை குடத்தில் பூம்பாளை சாய்த்து வைத்தனர்.

மேலே சொன்னவிதமாக அலங்கரிக்கப்பட்ட கல்யாணப் பந்தலை ஊர்மக்கள் வந்து பார்க்கும் இயல்பை மிகவும் அழகாக எடுத்துரைக்கும் பகுதிகள் இருக்கின்றன.

"மாகத் தளாவு மணிக்கா வணம்பார்த்துப்
போகக்கா லேறுத பொன்னனையா ரோர்கோடி"

"வஞ்சியிடை தள்ளாட வந்துபசுங் கிள்ளையொடுங்
கொஞ்சிவிளை யாடிநிற்குங் கொம்பனையா ரோர்கோடி"

முதலிய கண்ணிகளில் கூறியிருத்தல் காண்க.

## மணமகன் அலங்காரம்

மணமகன் நீராடி ஆடை அணிகளை அணிவதாகக் கூறும் கண்ணிகளில், அவருக்குரிய அலங்காரப்பொருள்கள் பல சொல்லப்படுகின்றன.

அவை—பசும்பொன்னுடை, வன்னச்சுளிகை நிசார், பொன்னரைஞாண், வச்ராங்கிச் சோடு, பச்சை மணி உதர பந்தனம், வச்சிர வாகுவலயம், வாகு பந்தனம், வயிரத் துரு, ரத்ன கங்கணம், ரத்ன கரபந்தம், தண்டரள மாலிகை, தங்கச் சரப்பளி, கண்டசரம், பொன் பதக்கம், மாணிக்க மாலை, சருவந்து, முடிமீது வயிரத்துரு, பூச்செண்டு என்பன.

வாசனைத் திரவியங்கள்: பொன்னம்பர், கஸ்தூரி, பூம் பன்னீர், சந்தனம், தென்னம் புழுகு, சவ்வாது முதலியன.

## பவனிச் சிறப்பு

மணமகன் பவனி வரும்போது அவருடன் அரசர்மக்கள், வில்பிடித்த தொட்டியர், வடிவாள் எடுத்த குதிரை ராவுத்தர், கட்டியக்காரர், வித்துவாங்கிசர், பாவாணர், நல்லிசையாளர், சாமரை வீசுவோர், வாத்தியக்காரர், நட்டுவன்மார், பரத நாட்டியம் புரியும் மாதர், ஆலத்தி யெடுக்கும் மாதர் என்பவர்கள் சென்றதாகச் சொல்லியிருக்கிறார்.

அப் பகுதியில் திமிலி, தடாரி, தப்பு, வீருணம், பேரிகை, பம்பை, பெரு முரசு, மல்லாரி, பூரிகை, நாதசுரம், ஆனைமேல் பேரி, ஒட்டகைமேல் டம்மானம், குதிரையின்மேல் டம்மானம், நவுரி, கொம்பு, வெண்சங்கு, மத்தளம், வீணை, தண்டை வாத்தியம், கயிலாச வீணை, காமாட்சி வீணை, ருத்ர வீணை, உடுக்கை என்னும் வாத்திய வகைகளும், கல்யாணி, காம்போதி, கொண்டல்சொரிமேகக் குறிஞ்சி, சங்கராபரணம், தோடி, வராளி, தன்னியாசி, கௌரி முதலிய ராக வகைகளும், வயிரப் பொற் குடை, பவளச்செழுங் குடை, செம்பொற்குடை, வெள்ளி வெண் குடை முதலிய குடை வகைகளும் சொல்லப் படுகின்றன.



தங்கத் தீவட்டி, வெள்ளித் தீவட்டி, ஆறுகால் பந்தம், ஏணிவிளக்கு, இரத விளக்கு, பாணி விளக்கு, சூல விளக்கு, ஐந்துகால் விளக்கு முதலிய விளக்குவகைகளும் இப்பகுதியில் சொல்லப்படுகின்றன.

மணமகன் ஊர்வலம் வருமுன் வீதிகளிலெல்லாம் தோரணங்கள் நாட்டி, தூபதீபங்கள் எடுத்துப் பூரண கும்பம் வைத்துப் பன்னீர் தெளித்து வைக்கப்பட்ட விவரம் பவனிச் சிறப்பை அழகுறச் செய்கின்றது.

எழுவகைப் பருவ மாதரும் மணமகனாகிய செய்தக்காதி மகராசன் பவனி வருவதைக் கண்டு எதிர்போய்நின்று வியந்து உரைக்கும் பகுதி மிக்க நயமுடையதாக அமைந்துளது. மண மகனைப் பார்த்து

பொருமானை காத்தினிய பொன்மானை ஓடியெய்து
திருமானை வைத்தபுயன் சீமான்

என்றும்,

இவர்க்கான்......இந்திரன் காண்
தவறாத வாய்மை யரிச்சந்திரன் காண்

என்றும் பலவாறு பாராட்டுகின்றனர்.

பீரங்கி, சத்த வெடி, கும்ப வெடி, கலச வெடி, அம்பு வெடி, இரட்டை வெடி, பூச்சக்ரவாணம், மாச்சக்ர வாணம், ஆகாச வாணம், படை வாணம், குமார வாணம், எலி வாணம், பாம்பு வாணம், பூத வாணம், பரிசை வாணம், வெண்சாமரை வாணம், கப்பல் வாணம், குதிரை வாணம், கூடைப் பெரு வாணம், மயில் வாணம், கும்ப வாணம், சிரட்டை வாணம், குண்டணி வாணம் முதலிய வாணங்களின் வகைகளும் சொல்லப்படுகின்றன.

மணமகளுக்கு ஆடை அணிகளைக் கூறும் பகுதியில் அவருக்குரிய அலங்காரப்பொருள்கள் பல சொல்லப்படுகின்றன. அவை: சரிகைப்பூம்பட்டு, மாணிக்கப் பொற்கட்டோடு அமைந்த வச்ர மணிச்சட்டை, திருச்சூளி, பிறை, திரு, பச்சை வச்சிர

நீலக்கல் பதித்த சுட்டிவட்டம், அலுக்கத்து, மரகதப்பூக் கொப்புமணி, அரசிலைப் பூத்தொங்கல், ஒன்னப்பூ, ஈத்தங்காய்ச் செம்பவளப் பொன்சரவி, சரப்பளி, தும்பிப்பதக்கம், இளிப் பதக்கம், ஆளிமுகத்தாளிவில்லை, கொத்துவடம், தோள்மூடி, புஜபந்தனம், வளைமணி அட்டியல், முன்கைவளை, ரத்னசரிமுந்து, சந்துக்காறை, பொற்கடையம், கற்கட்டு வச்சிரம், தண்டை, சிலம்பு, சதங்கை, தங்கப்பாடகம், மேல்முடிச்சுச் சங்கிலி, கட்டு சரம், பொற்பீலி, காலாழி, மெட்டு, குப்பாயம் ஆகியவையாம்.

மணமகளின் அலங்காரம் சொல்லப்படுகிற பகுதியைச் சேர்ந்த சில ஏடுகள் இல்லை. அதனால் ஆபரண விவரம் விரிவாக் எழுத முடியவில்லை.

சீதக்காதி திருமண வாழ்த்தில் உள்ள விவரங்கள் எல்லாம் அக் காலத்திலுள்ள தமிழ் மக்களின் நாகரிகத்தைத் தெரிவிப்பதனோடு முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையேயுள்ள பழக்க வழக்கங்களையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இவ் விருகூட்டத்தாரும் இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருவதனால், நாள் செல்லச் செல்ல அவர்களின் பழக்க வழக்கங்களுள் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இந்துக்கள் முஸ்லிம்களின் பழக்கங்களையும், முஸ்லிம்கள் இந்துக்களின் பழக்கங்களையும் கைக் கொண்டனர். அதனால், இந்திய நாகரிகம் (Indian culture) தோன்ற ஆரம்பித்தது. அவ்வித நாகரிகம் வட இந்தியாவில் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து வெளியாகிறது. ஆனால், தென்னிந்தியாவில் முக்கியமாகத் தமிழ் நாட்டில் அவ்விதக் கலப்பு நாகரிகம், கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே வழக்கில் வந்திருக்கிறது. தென் இந்தியாவில் மேற்குக் கரையிலும், கிழக்குக் கரையிலும் உள்ள துறைமுகப் பட்டினங்களுக்கு வாணிகம் செய்யத் தொன்றுதொட்டு வந்துகொண்டிருந்த அறபியர் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாம் தோன்றிய காலத்திலிருந்து இந் நாட்டில் குடியேறி, சாத்விக முறையில் முகம்மது நபி அவர்களின் பொன்மொழிகளை மக்களுக்குப் போதிக்கலாயினர். முதலில் அவர்கள் எண்ணிக்கை மிகக் குறைந்திருந்தது. நாளடைவில் இந் நாட்டுப் பெண்களை மணந்து இல்லறம் நடத்தியதனால் முஸ்லிம்களின் தொகை பெருகியது. இங்குத் தங்கிய முஸ்லிம்கள் கல்யாணத்தின் போது இந்துக்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றினர். அவற்றுள் சில வற்றை ஈண்டுக் குறிக்கின்றோம்.



நிச்சிதார்த்தம் செய்தல், கல்யாணப்பந்தல், மணவறை அலங்கரித்தல், மாப்பிள்ளையின் அலங்காரம், பவனி வருதல், மேள வாத்தியம், வாண வேடிக்கை, வெற்றிலை பாக்கு பழம் முதலியன வழங்குதல், நாட்டியக் கச்சேரி, குரவையிடுதல், தாலி கட்டுதல் முதலிய இந் நாட்டுப் பழக்கங்களை முஸ்லிம்கள் கைக் கொண்டனர். மணமகளுக்குக் காதிலும், மூக்கிலும் ஆபரணம் இடுவதும், பெண்ணுக்குச் சீர் கொடுப்பதும் இந்துக்களின் வழக்கம். மாப்பிள்ளையின் கையாலே பெண்ணுக்குத் தாலி கட்ட வேண்டுமென்ற வழக்கமும் இந்துக்களிடையே உள்ளது. சீதக்காதி தம்முடைய கையாலே மணமகளுக்குத் தாலி கட்டினாரென்று திருமண வாழ்த்தில் கூறப்படுகிறது. இதனால், தமிழ் நாட்டில் சில பகுதிகளில் வசித்து வந்த முஸ்லிம்கள் அப்பழக்கத்தைப் பின்பற்றி வந்தார்களென்று தெரிகிறது. ஆனால், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து முஸ்லிம்கள் மேலே சொன்ன பழக்க வழக்கங்களுள் நாட்டியக்கச்சேரி, மேளவாத்தியம், மாப்பிள்ளை கையாலே பெண்ணுக்குத் தாலி கட்டுவது முதலிய பழக்கங்களை அறவே கை விட்டுள்ளனர்.

இந்த நூலை இயற்றிய ஆசிரியர் வர்ணனை செய்வதில் திறமையுடையவரென்பதும், ஆண், பெண் இருதிறத்தாருடைய ஆடை, அணி வகைகளை மிக அறிந்தவரென்பதும், தமிழர் நாகரிகத்தில் நல்ல பயிற்சியுடையவரென்பதும், கருத்துக்களை இடமறிந்து வெளியிடுபவரென்பதும் நன்கு விளங்குகின்றன.

திருமணவாழ்த்துள் சொல்லப்பட்ட ஆடை, அணி, வாத்தியம், தீவட்டி, விளக்கு, வெடி, வாணம் முதலிய வகைகளை யெல்லாம் இக் காலத்திலுள்ள தமிழ் மக்கள் அனை

வரும் அறிந்திருக்க முடியாது. அவற்றை ஆராய்ந்து, விவரமான குறிப்பு எழுதியும், படம் வரைந்தும் ஒரு நூல் வெளியிட்டால் தமிழர்நாகரிகம், பழக்கம், செல்வம் முதலியவற்றை அறிந்து கொள்ள உதவியா யிருக்கு மென்று எண்ணுகிறோம்.

சென்னை
15-4-53 } S. முஹம்மது ஹுஸைன் நயினார்

# செய்தக்காதிறு மரக்காயர்

## திருமண வாழ்த்து

எட்டையபுரம் உமறுகத்தாப் புலவர் பாடியது

1 கார்கொண்ட ஞாலம் ககனதி யும்பலவும்
ஏர்கொண் டமைத்த இறையொருவ னைப்பணிவாம்

2 சீர்மேவு செல்வச் சிறப்பாகி எப்பொருட்கும்
பேர்மேவி நின்ற பெரியோனைப் போற்றிசெய்வாம்

3 முத்தொளியில் வந்த முகம்மது றசூல்நபி○யை
நித்தலுமே நெஞ்சில் நினைந்து துதிப்பாமே

4 தாயிற் கருணைவைத்த தற்பரனைப் போற்றிசெய்வான்
வாயிற்கல் வைத்தஅபூ வக்கர்○ பதம்பணிவாம்

5 விண்பாத்த வெங்கதிரோன் மெய்கறுப்பச் செங்கமலக்
கண்பார்த் தருள்உமறு கத்தாப்○ சரண்நினைவாம்

6 வேதப் பொருள்தெரிந்து மிக்கபுவி யிற்சிறக்க
ஓதும்உது மானை○எம துள்ளந் தனில்நினைவாம்

7 வாட்டிறத்தால் சேர்ந்த மருவார் குறும்படக்கும்
ஆட்டிறத்தால் மிக்க அலியார்○ பதம்பணிவாம்

8 ஆதி நபிமகளார்க் கன்பா மகவான
நீதி அசன்உசைனை○ நித்தலுமே போற்றிசெய்வாம்

9 தகையதின் எல்லாம் தழைக்கப் புவியில்வந்த
முகையதீன்○ செய்ய முளரிப் பதம்பணிவாம்

10 கருங்கொண்ட லார்சர்க் கரைமழை பெய்யவந்த
பெருங்கொண்டல் வாவா○ பிரசமலர்த் தாள்பணிவாழ்

11 நிதக்கத்துள் ளாக்குபிறர்* நெஞ்சம் பிளக்கவரும்
சதக்கத்துல் லா○உபய தாமரைத்தாள் போற்றிசெய்வாம்

12 ஒருவ னருள்பெற் றுலகில்ஒலி* யாகவந்த [வாம்
தருமுதலி யார்லெவ்வை○ தாமரைத்தாள் போற்றிசெய்

13 மாகாலம் வந்த மறைப்பொருளைத் தான்விளக்கும்
சேகாலி லெவ்வை○ செழுங்கமலத் தாள்பணிவாம்

14 நல்லோர் பெரியோர்கள் நாயனருள் பெற்றிருந்த
எல்லோர் தமையும் இதயந் தனில்நினைவாம்

15 மானபரன் செய்ய வகுதா பதிக்கிறைவன்1
தான பரன்பெரிய தம்பி○ வரபாலன்

16 நன்மை விசயரகு நாதப் பெரியதம்பி○
தன்மபரி பாலன் தமிழ்க்காய லாதிபதி

17 பூபன் பெரியதம்பி புத்திரன்செய் தக்காதி
சோபன வாழ்த்தும் சுகவாழ்த்தும் வாழ்த்துகிறேன்

18 செங்கமலை மார்பிற் சிறந்தசெய் தக்காதி
மங்கள வாழ்த்தும் மணவாழ்த்தும் வாழ்த்துகிறேன்

## தசாங்கம் 2

19 தேனைத் தகர்த்திடையே திங்கட்கோட் டாலுழக்கி
வானைத் தடவும் மணிமரக தக்கிரியான்

20 நிரைகொழிக்கும் முத்தும் நிதியும் திரைக்கரத்தால்
கரைகொழிக்கும் செல்வக் கறுப்பாறு காவலவன்3

21–24–ஆம் கண்ணிகள் எழுதிய ஏடு இல்லை

25 மெய்ப்பர் தயமுரைக்கும் மேவார் சிரம்பிடுங்கிக்
கைப்பந் தடிக்குங் கரடவெள்ளை யானையினன்

26 மீனைக் கொடிப்புலியை வில்லைவென்று மேவலர்கள்
சேனைத் திரள்முறிக்குஞ் சிங்கக் கொடிவேந்தன்

27 தெம்முனைகல் யாணஞ் சிறந்தகொடை யென்றியம்பும்
மும்முரசு நின்று முழங்குமணி வாயிலினன்

## பாட்டுடைத் தலைவன் வரலாறு

28 மனந்தனிலுஞ் சொல்லுகின்ற வாய்மையிலும்
[நித்திரைசெயும்
அனந்தரிலும் அல்லாவி* ஞணைமற வாதபிரான்

29 முந்துதமிழ்க் கீர்த்தி முடிமேற் றிரண்டதெனச்
சந்த்ரகலை யொன்றுஞ் சறுவந்து* மாமுடியான்

30 மெச்சுபுகழ் மாறன் விருந்தளித்துச் சாணகத்தால்
எச்சில்தெளித் தானென் றிதயந் தனில்நினைந்து

31 மீனவற்கு நாமும் விருந்தளிக்க வேணுமென்று
தானைமன்ன ரெல்லாந் தலைவாசல் காத்துநிற்பப்

32 பொன்கூடந் தன்னிற் புருடரா கத்தளத்தில்
தென்கூட லாதிபனைச் சிங்கா சனத்தில்வைத்துச்

33 செங்கனகப் பள்ளயம்பொற் சேனைக்கால் மிதில்வைத்துப்
பங்கயக்கை பூசநறும் பன்னீர் மிகச்சொரிந்து

34 கன்னல்முத்தும் வேயின்முத்தும் கஞ்சமுத்தும்
[பூகமுத்துஞ்
செந்நெல்முத்துந் தந்திமுத்துந் தெங்கின்முத்தும்
[சங்கின் முத்தும்

35 விலைமதியா நாகமுத்தும் மீனின்முத்து மானின்முத்தும்
அலைகடலி லாணிமுத்தும் அன்னமா கச்சொரிந்து

36 மாணிக்கம் பச்சை வயிரம் வயிடூர்யங்
காணிக்கை யான கறியாக வேபரப்பி

37–40–ஆம் கண்ணிகள் எழுதிய ஏடு இல்லை

41 நீமருந்தி யிச்சில்வைத்த நித்திலத்தி னெச்சிலுக்கு
நாய்பிணங்கு தென்றுபுகழ் நாட்டுபிர தாபதுங்கன்

42 கைதவனுங் கேட்டுக் களிகூர்ந்த தென்றதற்பின்
மைதவழுங் கூடமதை வன்னிக் கமுதாக்க

43 ஏதென்றீர் சாணக மிட்டாற்போ மெங்களெச்சில்
சூதொன்று முங்களெச்சில் சுட்டாற்போ மென்றதுங்கன்

44 நாணித் தலைகவிழ்ந்த நன்மாறன் பொன்மார்பில்
மாணிக்கங் கொண்டெறிந்த வச்ரா யுத்பாணி

45 பாண்டியன்முன் வந்துநின்று பாவடிகை யாலழுத்தத்
தாண்டுபரி மீதேறுஞ் சங்க்ராம கெம்பீரன்

46 பின்னிற்கு மாரனெனும் பேரரசு மாறனவன்
முன்னிற்கு மாரனென மூவுலகுங் கீர்த்திபெற்றோன்

47 மைவருக்கஞ் சூழ்சோலை மாமதுரைப் பாண்டியர்கள்
ஐவருக்கு மாறாக ஆறும்பேர் கொண்டபிரான்

48 நிலமகளுஞ் சயமகளும் நிற்ப வழுதிசெல்வக்
குலமகளைக் கைப்பிடித்துக் கொண்ட மணவாளன்

49 வேனீட்டுஞ் செங்கை விறல்வழுதி தன்கொலுவில்
கானீட்டும் வாசல் கடந்தானை மீதுவந்தோன்

50 மாறடங்கார் போற்றும் வழுதி மனையாட்டி
வீறடங்க வேலைக்கு வேல்கொண்ட தாட்டிகன்

51 விருப்பினு லைங்காதம் மீனவன்பெண் வீடுமட்டுங்
கருப்பினுல் பந்தலிட்டுக் கல்யாணம் செய்தபிரான்

52 தொழுவில்(?) மாற்றலர்கள் சுற்றப் படைக்கலத்தால்
மழவன் றனைக்காத்து மாநிலத்தில் வைத்தபிரான்

53 மட்டில்லா நானூறு வாசிக்கு மார்பேற்ற
செட்டிகளை யன்று சிறைமீட்ட புண்ணியவான்

54 செட்டி சிறைமீட்டுத் தென்னிலங்கை தன்னிலுங்கோ
முட்டி சிறைமீட்டு மூவுலகும் பேர்படைத்தோன்

55 வாரிதனி லேறியந்த வங்கம்விட்டி லங்கைபிடித்
தாரியனை மிக்கா யரியா சனத்தில்வைத்தோன்

56 தங்கிகரி லைந்துவகைச் சாதியெனு மாந்தையில்வாழ்
கம்மியரைத் தன்மகவாய்க் காக்கு மபிமானி

57 பாண்டிக் கரையளித்துப் பட்டினவ ரைப்புரந்து
நீண்டக் கரையாரை நிர்த்தாளி யாகவென்றோன்



58 சேரன் குடையெடுப்பத் தென்னன்கொடி யேந்திடவார்த்
தாரன் துகிலெடுப்பச் சங்கப் புகழெடுத்தோன்

59 பாரைமுழு தாளும் பராசர் கொண்டாட
வீரைநகர் மாவலியைக் காத்த விறல்வேந்தன்

60 அமரரா னோர்க ளடங்கலுங்கொண் டாடவென்று
சமரகோ லாகலனைத் தற்காத்துத் தாபநித்தோன்

61 வெல்வீரர் மேவலரை வீறடக்கி முக்குவர்க்கு
நல்வீர மும்மூக்கும் நாக்கும் படைத்தபிரான்

62 ஆறு கரிகன் 'அடைக்கலங்காத் தோன்'வலங்கைச்
சாணர் தமைக்காக்குந் தர்ம பரிபாலன்

63 தென்மண் டலமுஞ் செழித்தசெம்பி நன்னாடும்[4]
பொன்மண் டலமும் புரக்குந் துரைப்பெருமான்

64 எண்டிசையும் போற்று மிரதக் கினைறுடனே
தண்டரள வாரிச் சலாபத் துறையுமுள்ளோன்

65 வந்தாடத் தோகை மயிலாடக் கொம்பாடுஞ்
சந்தாட விக்கிறைவன் தாதாடும் பூம்புயத்தான்

66 சொன்னாடும் பொன்னாடுஞ் சோனாடும் மேனாடும்
எந்நாடுங் கொண்ட இறைவன்வச்ர நன்னாடன்[5]

67 பேறாக வந்த பெரியதம்பி தன்புகழை
மாறாம லேவளர்க்க வந்தசெய்தக் காதிமன்னன்

68 பிந்தாத செல்வப் பெரியதம்பி கண்மணியாய்
மந்தார தாருவென வந்தசெய்தக் காதிமன்னன்

69 தரணி புகழ்பெரிய தம்பிவரத் தாலுதித்த
கருணைமுகி லானசெய்தக் காதி நரபாலன்

70 வங்களம்கர் நாடம் மலையாள முச்சீனம்
சிங்களம் மராடம் தெலுங்கு குருநாடம்

71 கலிங்கம் குசலம் கவுதம்த்ரி கூடம்
குலிங்கம் கடாரம் குடகம் துளுநாடம்

72 மாகரைநல் ஈழமச்சை மஞ்சம்பாஞ் சாலம்டில்லி
ஆகரை கபாடம் அயோத்தி கலியாணம்

73 பல்லவம்காம் பீலிமக்கம் பப்பரவம் குச்சரியங்
கொல்லமாச் சீனம்கண்டி கொங்கணம் தாரிசப்ரு

74 கிட்டா மலாக்காயிஸ் கிரீஸு பிராஞ்சுலாந்தா
அட்டாள திக்கிலும்கிள் ளாக்கைச் செலுத்துபிரான்

75 சீனத் திருந்துவந்த சீனம்ப ரங்குவிக்க
மானத்து முத்துமொலி வாரிமுத்த முந்தெறிப்ப

76 மரகதம் வச்ரம் வயிடூர்யம் நீலம்
அரவின் மணிபுஷ்ப ராகங்கோ மேதகமும்

77 பைகோவை யிற்செம் பதுமரா கம்பவளம்
கைகோவை யாகவிலை காட்டியொரு பாற்குவிக்க

78 ஈழத்திற் கிட்டாலி லேற்றிவந்த கப்பலர்க்கு
வேழத் திரள்களெல்லாம் வீதிதொறுஞ் சேர்த்துநிற்ப

79 அச்சைனும்? மித் தேசத் தரசர் வரவிடுத்த
பச்சைப் பரிகளைப்பல் பந்திபந்தி யாய்நிரைப்ப

80 வங்காள நாவி மலாக்காக்கஸ் தூரியம்பர்*
கொங்காருங் காசறையுங் குங்குமப்பூப் பன்னீரும்

81 சந்திரமும் மோகரமுஞ்* சம்பூறும் பல்லங்கியும்
வந்ததங்கக் காசும் மலிந்தகுதி ரைக்குளம்பும்

82 வெள்ளித்தகட் டவ்வாசு மிக்கரூ பாயிறையால்
அள்ளிப் பலதிசையும் அட்டகிரி போல்குவிக்கத்

83 தெண்டிரையிற் பொன்னுாபல் தேசத்துப்
[பொன்னும்வரக்
கண்டுகளி கூருங் கருணை கடாட்சமுகில்

## நிச்சிதார்த்தம்

84 தேடும் புகழ்க்கவிதைச் செந்தமிழோர்க் கீந்துதவும்
நாடும் விசையரகு நாதப் பெரியதம்பி

85 தேசம் புகழ்செய்தக் காதியெனும் பூபதிக்குக்
காசினியி லின்பக் கலியாண மென்றுசொல்லி

86 மண்ணரசர் போற்றுகின்ற மன்னியகெம் பீரனுக்குப்
பெண்பேசிக் கொண்ட பெருமை தனைப்புகல்வாம்

87 பிரச மலர்மாலைப் பெற்றோர் மனையகத்தில்
வரிசைக் கிளையோரும் மற்றோருஞ் சேர்ந்திருந்து

88 வில்லமையும் வாணுதலார் வேளைனுஞ்செய் தக்காதி
வல்லமை பேசும் வகையதனைக் கேளுமினி

89 ஆதி யொருபொருளை அஞ்சுவக்தும்* தப்பாமல்
நீதி யுடன் வணங்கு கேமமற வாதபிரான்

90 செப்பரிய ஹஜ்ஜு* வண்மை செய்கின்ற சக்காத்து*
முப்பது நோன்பும்* முடிக்குந் தபோதனன்காண்

91 அய்யா நபுல்நோன்பும்* ஆசுரு நன்னோன்பும்*
நையாமல் ஆசார நன்னோன்பு நோற்பவன்காண்

92 வேதியர்க்குங் கற்றோர்க்கும் மிக்கோர்க்கும் பக்கீர்க்கும்*
சாதி யெவர்க்கும்அன்ன சத்ரம் வளர்ப்பவன்காண்

93 புவிநாலு திக்கும் புகழெலாங் கொண்டாடும்
கவிநா வலவர்கலிக் கங்குலுக்கோர் சூரியன்காண்

94 பாரனைத்தும் போற்றும் பராபரசர் கொண்டாட
வீரவிக்ர மாறனென வெற்றிகொண்ட வெம்புலிகாண்

95 கோரப் பறங்கி குலங்களெல்லாம் வேரறுத்துச்
சூரத் தனமிகுத்த சுத்தரண கேசரிகாண்

96 இரணிய கெர்ப்ப இரவிகுல ராசன்
தரணி புகழுந் தனுக்கோடி காத்தமுகில்

97 மகபதிக்ரீ டாதிபதி ம...............பதி
செகபதிந ராதிபதி செ.,.............பதி

98 மூவுலகை யாளும் முடிமன்னர் போற்றவந்த
தேவைரகு நாதேந்த்ரன் சிந்தை களிகூர

99 அட்டகச மன்னமத யானைத் திரள்கோடி
வட்ட மிடுங்கவன வாசித் திரள்கோடி

100 ஆரங்கி யாகஅண்ட கூடந் தகர்த்திடிக்கும்
பீரங்கி கோடி பிடிகோடி தேர்கோடி

101 பச்சைக் கடகம் பரியகலிக் கத்துருய்*
வச்சிரப் பந்தி வயிடூரி யக்கடுக்கன்

102 சீனச் சுருட்டுச்* சிவந்தசக லாத்து*வெகு
மானச் சுளிகையங்கி* வச்ராங்கி* பொற்சோடு

103 உச்சிதமாய்க் கட்டி யுரகத் துடன்கொடுக்க
மெச்சி யிவன் கிக்காஹ்* வேந்தனென வேமகிழ்ந்து

104 தண்டிகைமுன் பின்வெள்ளைச் சாமரைகா ளாஞ்சிகுஞ்சம்
அண்ட முகடுடைய ஆனைமேற் பேரிகையும்

105 நரகசின்ன மென்..............லை
குரகதமே நாகசர..............கயும்

106 சொல்லரிய சாமித் துரோககண்ட தண்டயமும்
வல்லமையாய் நல்க வரிசைபெற்ற மன்னவன்காண்

107 வேலிக் கடல்புடைசூழ் மேதினியோர் கொண்டாடத்
தாலிக்கு வேலி சத்தசமுத் ராதிபன்காண்

108 முரசு முழங்குமணி முன்றிலான் மன்னர்க்
கரசுநிலை யிட்ட அதிகமரி யாதையன்காண்

109 ஆசானு பாகன் அ.....................த
தேசாதி பத்தியமுஞ் சிங்கா........... காண்

110 செல்வத் துரைமகன்காண் சேவகன்காண் சீவகன்காண்
பல்லக் கரசர் பணியும் பதாம்புயன்காண்



111 பூமே லிருக்குமொரு பொன்னின்விளக் கேந்திரண்டு
மாமேரு வென்ன வளர்ந்தெழுந்த திண்புயன்காண்

112 ஆவின் வடிவு மனக........மணி வடிவும்
காவின் கொடைவடிவும் காட்டு........புயன்காண்

113 கடுத்துச் சினந்த... ...........கதிர்வாள்
எடுத்துக் கொடுவித் திருகை சிவந்தவன்காண்

114 சொல்வழுவப........ரான் துய்யகுமு தம்செனிக்க
நல்வசனத் தெள்ளமுத நல்குமுக சந்திரன்காண்

115 அருண கிரணவிம்ப வம்புயம்போல் யாவருக்கும்
கருணை குடியிருந்த கண்ணன்காண் கன்னன்காண்

116 வாளுக்கு வீமன்காண் வாய்மையரிச் சந்திரன்காண்
ஆளுக்கு மன்மதன்காண் அறிவுக் ககத்தியன்காண்

117 பொறைக்குத் தருமன்காண் புந்திக்கு மந்திரிகாண்
நிறைக்கும் பெருஞ்செல்வ நித்யசுப சோபனன்காண்

118 கூறுச் சரக்குவிலை கூறிநிச மாய்மதிக்கும்
மாறுச் சவுபாக்ய வர்த்தக சிரோமணிகாண்

119 இன்ன தன்மை யாகவந்த எங்கள்பெரு மானெனவே
சொன்னவுட னேபொருந்திச் சோபனமென் றேமகிழ்ந்து

120 தம்பி விசைந்துவெகு சந்தோட மாச்செனவே
செம்மை யுடன்வலது செங்கை கொடுத்தபின்பு

## பந்தற்கால் முகூர்த்தமும் மணவறை அலங்காரமும்

121 ஓதும் பெரியோரும் உற்றோரும் பெற்றோரும்
ஏதமில்லா நன்னா ளிதுவே முகிழ்த்தமென்று

122 மேள முழங்க விருதுசின்ன மார்ப்பரிக்கத்
தாள மதிரத் தவில்முரசு தாம்கறங்க

123 ஏத்தரிய நல்லோரு மெல்லோருங் கையேந்திப்
பாத்திகா* வோதிப் பரிந்து துவா*வோதி

124 நானிலமெல் லாமதிக்க நன்முகிழ்த்த வேளை தனில்
காணுலவு செம்பவளக் காலெடுத்து நாட்டினரே

125 மறுக்கலவாச் செம்பொன் வளைபரப்பி வெள்ளியினல்
குறுக்கு வளைய தன்மேற் கொண்டு பரப்பினரே

126 வச்ர மிழைத்து வரிச்சுக் களைப்பரப்பிப்
பச்சை மரகதத்தால் பல்கணிவா யில்வகுத்துச்

127 செங்கனகக் கம்பியினல் சேர வகுந்திறுக்கித்
தங்கத்தகட் டால்வேய்ந்து சாளரங்கள் தாம்வகுத்தார்

128 மாணிக்கத் தாலே மணிக்கொடுங்கை தான்சேர்த்து
ஆணித் தரள மணியணியாய்த் தூக்கினரே

129 நீல மணியும் நிறைந்தகோ மேதகமுங்
கோலவயி டூரியத்தின் கோவையுடன் தூக்கினரே

130 பொங்கொளிசேர் கின்ற புருடரா கச்சரமும்
எங்குமொளி வீசு மிலங்குபவ ளச்சரமும்

131 பதுமரா கச்சரமும் பத்திபத்தி யாய்த்தூக்கி
நிதிகுலவு முன்முகப்பு நித்திலத்தில் வேய்ந்தனரே

132 மல்லிகையுஞ் செம்பகமும் வாய்ந்தகுட மல்லிகையும்
முல்லையொடு பிச்சி முறைமுறையாய் முன்தூக்கிச்

133 செங்கழுநீர் வெண்டாமரை செந்தாமரை பைங்கமலத்
தங்குமலர் பாதிரிமந் தார மிருள்வாசி

134 செவ்வந்தி பொற்கொன்றை செவ்வாம்பல் மாதுளம்பூ
அவ்வந்தி நேர்மலர்ந்த அழகியநீ லோற்பலமும்

135 இந்தமல ரெல்லாம் இசைந்தசர மாய்த்தொடுத்துப்
பந்தரிட மெல்லாம் பரிந்துவிதா னித்தனரே

136 பூங்கமுகின் பாளைதென்னம் பூவிரியுங் காவிரியும்
தேங்கதலித் தாறுநிரை செவ்விளநீர்ப் பைங்குலையும்

137 மிச்சமென்று கூறுமெலு மிச்சம் பழத்துடனே
இச்சகங்கொண் டாடுங்கொ ளுஞ்சிப் பழம்பலாக்காய் (?)



138 வாழைப் பழமும் வளர்தமரத் தம்பழமும்
கூழைப் பலாவின் குடக்கனியுந் தூக்கினரே

139 பொற்குடம்போல் வாய்குவிந்த பூமாது ளங்கனியும்
பற்பலசிங் காரமதாய்ப் பந்தரெங்குந் தூக்கினரே

140 கரும்புடனே பைங்கதலி காய்க்கமுகு கொண்டாடும்
சுரும்புலவச் செம்பவளத் தூண்கடோறுஞ் சேர்த்தினரே

141 மேகவண்ணப் பட்டுடனே வீரவா ளிச்சேலை
வாகுபெற ருத்ரவன்னி வாழ்சந்த்ர வன்னியுடன்

142 மாந்தளிர்போற் பூத்தொழிலின் வன்னமிகு சூர்யபடம்
காந்திபெறும் பொற்சரிகைக் கம்பிக் கரைச்சேலை

143 வண்ணவண்ண மாக வகைவகையே கொய்துகொய்து
மின்னொளிசேர் காவணத்தை மிக்கா யலங்கரித்தார்

144 வந்தநவ ரத்ன மணவறையில் வெண்கிரணச்
சந்த்ரகலைச் சிங்கா சனமு மமைத்தனரே

145 தேகங் குளிரச் சிறுகொண்டல் வீசிவரப்
பாகங்க டோறும் பலசா ளரம்வகுத்தார்

146 பக்கமெல்லாங் கோடி பகலோ னுதித்ததென
மிக்கநவ ரத்ன விளக்கெல்லாம் நின்றொளிரத்

147 தூண்டா மணிவிளக்குந் தூக்குவிளக் குஞ்சிறப்பக்
கூண்டா யிரங்கோடிக் குத்துவிளக் கேற்றினரே

148 தாரா கணங்கூடிச் சந்திரனைச் சூழ்ந்ததுபோல்
சீராச னஞ்சூழ்ந்த சித்ரவிளக் கேற்றினரே

149 வன்ன மணியால் வகுத்த மணவறைமுன்
பொன்னி னிறைகுடத்தின் பூம்பாளை சாய்த்துவைத்தார்

150 பைங்கேழ்ச்சிங் காசனமுன் பாவைதிகழ் காவணத்தில்
சிங்காரம் பார்க்கவந்த தேன்மொழியா ரோர்கோடி

151 கொண்டாடு மேனகைபோற் கோகனகை போலவந்த
வண்டாடுங் கோதை மடந்தையர்க ளோர்கோடி

152 மாகத் தளாவு மணிக்கா வணம்பார்த்துப்
போகக்கா லேறுத பொன்னனையா ரோர்கோடி

153 வெண்குளிர்சந்த் ரோதயம்போல் மேவியசிங் காசனத்தைக்
கண்குளிரப் பார்க்கவந்த கன்னியர்க ளோர்கோடி

154 கட்டாணி முத்தாற் கனகத்தாற் செய்துவைத்த
வட்டாவை யேந்திநிற்கும் மாதர் சதகோடி

155 செப்பேந்திப் பூவேந்திச் சித்திரம்போல் நின்றிலங்கக்
கொப்பேந் திளமடவா ரோரா யிரங்கோடி

156 வஞ்சியிடை தள்ளாட வந்துபசுங் கிள்ளையொடுங்
கொஞ்சிவிளை யாடிநிற்குங் கொம்பனையா ரோர்கோடி

157 இந்த வகையா யிலங்குமணக் காவணத்தை
விந்தைவிந்தை யாக விதானித் திருந்ததற்பின்

## மணமகன் அலங்காரம்

158 அன்னைபிதா சுற்ற மனைவருமொன் றாய்க்கூடி
மன்னர் திலகம் வருதைமண்ட லாதிபதி

159 சற்புருஷ னுயசெய்தக் காதியெனும் பூபதிக்குங்
கற்புடைய மாதினுக்குங் கல்யாணஞ் செய்யவென்று

160 சம்பங்கிப் பூந்தயிலம் தான்முடியிற் கோதியம்பொற்
கும்ப நிறையுங் குளிர்மஞ்ச னஞ்சொரிந்தார்

161 பூந்துகிலா வீரம் புலரப் புலர்த்தியபின்
வாய்ந்தபசும் பொன்னுடை வர்க்கந் தெரிந்தெடுத்து

162 வன்னச் சுளிகை வரிசை நிசாரணிந்து
பொன்னினரை ஞாணும்வச்ரப் பூட்டுமுருக் காணியிட்டுப்

163 பொன்னம்பர் கஸ்தூரி பூம்பன்னீர் சந்தனமும்
தென்னர் புழுகுசவா* தெல்லாம் புயத்தணிந்து

164 தோற்றுமணி வச்ராங்கிச் சோடணிந்து மேதினியோர்
போற்றி விலைமதியாப் பொன்னினடுக் கட்டிறுக்கிப்



165 பச்சை மணியுதர பந்தனமுஞ் சேர்ந்திலங்கும்
வச்சிரத்தி னுலிழைத்த வாகுவல யம்புனைந்து

166 வாகுபந்த னம்பூட்டி வயிரத் துரு* அணிந்து
நாகரிகக் கைமேலே ரத்னகங்க ணம்புனைந்து

167 சிவரத்னத் தாலிழைத்த செய்யவீர வாளியிட்டுக்
காவையொத்த கைமேல் கரபந்த னந்தரித்துத்

168 தண்டரள மாலிகையுந் தங்கச் சரப்பளியும்
கண்டசர மும்பொற் கனபதக்க முந்தரித்து

169 மாணிக்க மாலையுடன் குங்குமத்தார் மார்பிலணிந்
தாணிக்கு வேளெனக்கண் ணடி நிழல்பார்த்து

170 விசுசரு வந்து*முடி மீதுகவ ரத்தினத்தின்
வாசிங்கம் பூட்டி வயிரத் துருநிறுத்திப்

171 பொன்னூர மாலையிட்டுப் பூச்செண்டு கைப்பிடித்து
மின்னூர் குரவையிட வெள்ளானை யேறினனே

## பவனி வருதல்

172 விடவரவி னுடனெளிய மிகுவடவை கெட இடறு
தடவிகட கெறுவமதத் தவளவெள்ளை யானையினன்

173 கொடியவிட வரவுபடக் குவடிடிய வடவைகெடத்
தொடுகடலி னகடுடையத் தோன்றுவெள்ளை யானையினன்

174 மொகுமொகென அளிகுலவு முதிருமத சலமொழுகு
விகடரண முககலனை வெள்ளானை யேறினனே

175 திடதிடென.........கடவிகட செயவிசய
தடகாட மடையொழுகு தவளவெள்ளை யானையினன்

176 தடவிகட காடகடத் தவனமது மொகுமொகெனத்
தடவிகட காடகடத் தவள வெள்ளை யானையினன்

177–184 ஆம் கண்ணிகள் எழுதிய இரண்டேடுகள் இல்லை.

185 பிரசமுறு வாகைப் பெருந்தொடையல் சூடிவெற்றி
அரசர்மக்கள் கோடிவெள்ளை யானை தனைச் சூழ்ந்துவர

186 ஆணியல்பு காட்டி அலகம்பு சேர்சுரிகை
தூணியும்வில் லும்பிடித்துத் தொட்டியர்பல் கோடிவரக்

187 கேடகஞ்செங் கோடி கிரணவடி வாளெடுத்துக்
கோடையிடிபோல் கோடி குதிரைரா வுத்தர்வரக்

188 கட்டியக் காரர் கனவிருது கூறிவரப்
பட்டவித் வாங்கிசர் பலதிசையுங் கொண்டாடச்

189 சந்திரனைச் சூழ்ந்துவருந் தாரா கணம்போல
முந்து கிளைஞர் மொகுமொகெனச் சூழ்ந்துவரத்

190 திமிலி தடாரி திடுமன் கனகதப்புக்
குமுறும் பதலை குடமுழவு வீராணம்

191 பேரிகை பம்பை பெருமுரசு மல்லாரி
பூரிகை நாகசுரம் பொங்குகடல் போல்முழங்க

192 ஆனைமேற் பேரி அதிருமிடி போற்கறங்கக்
கூனல்முது கொட்டையின்மேற் கொண்டடம்மா னம்மதிர

193 எற்றுங் குதிரை யிடம்மானந் தான்கலிப்ப
வெற்றிநா கேசமென(?) மேளமிக வார்ப்பரிப்பத்

194 தாரை நமரிகொம்பு சத்தமிடு மெக்காளம்
வீரகரு ணாவாங்கா வெண்சங்க முந்தொனிப்ப

195 முத்துக் குடையு முழுவயிரப் பொற்குடையும்
பத்தியொளி வீசு பவளச் செழுங்குடையும்

196 செம்பொற் குடையுந் திகழும்வெள்ளி வெண்குடையும்
சம்பத்தில் வந்துபுவி தாங்காச் சமுத்திரமும்

197 சுற்று நிரைத்துவரத் தூயசிங்க கேதனமும்
அற்றமில்லா வீரவெள்ளை யானை நெடுங்கொடியும்

198 பக்கம் பிடிக்கப் பலபேருந் தாம்சூழத்
தக்கவியன் மத்தளங்கைத் தாள முழங்கிவர

199 வாய்ச்சங்கு தித்திசுர மண்டலமுங் கின்னரமும்
வேய்ச்சங் கிதமுமுக வீணை தண்டை வாத்தியமும்



200 வீணை கயிலாச வீணையிசை காமாட்சி
வீணைருத்ர வீணை விளங்குகிற பாவுடனே

201 சரமண் டலமுடுக்கை சந்த்ரவளை யங்குளிற
நரமண் டலம்புகழும் நல்லிசையார் தாம்வணங்கத்

202 தாளம் வழுவாமற் சங்கீதந் தான்கறங்க
மேளம் வழுவாமல் வீதிதொறுந் தான்முழங்கக்

203 கண்டாரா கத்துடனே கல்யாணி காம்போதி
கொண்டல்சொரி மேகக் குறிஞ்சிசங்க ராபரணம்

204 தோடி வராளி சுத்ததன்னி யாசிகௌரி
பாடிசுதி கூடியிசைப் பாடகர்முன் பாடிவரச்

205 சத்த தளத்திலெழு தாள முழங்கிவர
ஒத்தகுச் சரிதி யுயரசக் கனிவுடனே

206 பரத முறை தப்பாது பவுரிக்கேற்பக்
கரதலத்தில் நட்டுவன்மார் கைத்தாள மொத்திடவே

207 நெருங்குஞ் சிலம்பாட நீள்சதங்கை தானாட
மருங்குதுவண் டாட மயிலார் நடமாடத்

208 தங்கத்தீ வட்டி தயங்குவெள்ளித் தீவட்டி
கங்குல் பகலாக்கு மாறுகால் பந்தமுடன்

209 ஏணி விளக்கும் ரதவிளக்குந் தன்னுடனே
பாணி விளக்கும் பகல்விளக்கும் நின்றிலங்கச்

210 சூல விளக்குந் துலங்கைந்து கால்விளக்கும்
ஞாலம் விளக்கும் பகலாமெனவிலக

211 பத்தியொளி வீசும் பகல்வத்தி நின்றெரிரத்
தத்துதிரை போலுபய சாமரைக டாமிரட்டப்

212 பாவாடை முன்விரிக்கப் பஞ்சவண்ணத் தால்விளங்கும்
பாவாடை வீசவியற் பாவாணர் கொண்டாட

213 எங்கும் புகழ்வெள்ளை யானைப் பிடரேற்றி
மங்களஞ்செய் தூரைவல மாகவரு வேளைதனில்

214 வச்ரத் திருநாட்டு மன்னவன்செய் தக்காதி
பச்சைப் பரியான் பவனிவரும் வீதியெல்லாம்

215 தோரணங்கள் நாட்டிடுவார் தூபதீ பங்கள்வைப்பார்
பூரணகும் பம்பதிப்பார் பூம்பன்னீ ரால்தெளிப்பார்

216 வான்முகட்டுத் தோயும் மகமேரு நாட்டிடுவார்
தேன்முழக்கும் பூங்குறிஞ்சி தெருக்க ளலங்கரிப்பார்

217 இருகுரும்பை போலுமுலை யேந்திழையா ராடுதற்குத்
திருகுகம்பை நாட்டித் தெருவை யலங்கரிப்பார்

218 மெல்லியதண் புட்ப விமானங்கள் தம்முடனே
சொல்லரிய நீண்மகர தோரணங்கள் நாட்டிடுவார்

219 கைவந்த சித்திரத்தாற் கண்களிக்கச் செய்துவைத்த
பௌவந்தத் திற்சூத்ரப் பதுமைபிடித் தாட்டிடுவார் ?

220 ஆசைகொள்ளு மின்னு ரவரவர்கள் தாங்கூடி
வாசல்தொறும் நெய்விளக்கீ வைத்துநிறை கும்பம்
[வைப்பார்

221 கன்னல் நடுவார் கமுகு நிரைத்திடுவார்
அன்னமென வந்துசெம்பொன் னுலத்தி யேந்திடுவார்

222 ஏருலவு தென்காய லெங்கள்செய் தக்காதிமன்னன்
பாருலகில் யானைப் பவனிவர மாதரெல்லாம்

223 பாடகங்கள் பூஞ்சிலம்பு பங்கயத்தாள் மீதணிந்து
சூடகஞ்சேர் காந்தளங்கை சுற்று மணியணிந்து

224 பட்டுடைமின் னார்பவனி பார்க்கில்மதன் வாளிநெஞ்சில்
பட்டுடையு மென்றுமுலைப் பாரமிசை வாரணிவர்

225 நாணைவிட்டு மங்கலப்பொன் னுணணிந்து கையரத்தால்
சாணைவைத்த வாள்போல் தடங்கணுக்கு மையெழுதிப்

226 பொற்சரிகை மேலணிந்த பூம்பட்டு முந்திதனில்
பொற்சரிகை தொங்கலிடைப் பொய்யினில்மெய்
[யாயணிந்து



227 சித்தசன்பைந் தேனுறையுஞ் செம்பவள மீதிலொரு
முத்த ரும்பினபோல் மூக்குத்தி முத்தணிவார்

228 பொன்மலைமேல் வெள்ளிப் புரிகிடந்து தாழுதல்போல்
வன்முலைமேல் முத்து வடங்கள் கிடந்தாட

229 மாலாழி நீந்த வகையறியா மங்கைநல்லார்
காலாழி பூட்டியபின் கையாழி யிட்டனரே

230 தங்கச் சவடிகளுந் தாவிழைத்த பொற்பணியும்
பொங்குநவ ரத்னவொளிப் பூடணமும் மேற்புனைந்தார்

231 மச்சு ளிருக்கும் மடவார்கள் கோத்தமுத்துக்
குச்சு ளிருக்கும் குளனு லணியாடச் (?)

232 சொல்லரிய பட்டுச் சுளிகைரவிக் கைபணிந்து
எல்லமையுங் கொம்பனையா ரெல்லோருந் தாம்கூடி

233 கொங்கைமேல் சந்தனக் குழம்பணிந்து குங்குமத்தைச்
செங்கரந்தால் வாங்கித் திருக்கழுத்தின் மேல்பூசி

234 முல்லையிருள் வாசி முகிழ்மல் லிகைகொழுந்து
அல்லனைய கூந்தற் கழகா யலங்கரித்துச்

235 சாரும் பவளந் தனைச்சிவப்பக் காய்ச்சினபோல்
சேரும் படிபாக்குத் தின்று சிறப்பாகத்

236 திலக மணிந்து திரும்பத் திரும்பியணிந்
திலகுவிரல் சேப்ப இருகண் சிவந்திடுவார்

237 மொய்குழலை நன்றாய் முடித்து முடித்தவிழ்த்துப்
பய்யமணிக் கண்ணாடி பார்த்துச் சினந்தெறிவார்

238 பொற்கடகம் பூட்டிப் புரிவளையா ரெல்லோரும்
கற்கடக மெல்லாங் கனராசி வெண்கொடிசேர் (?)

239 கன்னனென வந்தசெய்தக் காதிமக ராசனம்பாய்
வன்னமணி வீதி வரும்பவனி கண்டெதிர்போய்க்

240 கயங்காத செம்பொற் கரத்தா மரைகடுப்ப
முயங்கா தெழுந்த முகத்தா மரைமலர்கள்

241 மேடை மிசையுமொளிர் வெண்புரிசைச் செச்சையினும்
தேடரிய பொற்சிகரத் தெற்றியினு நின்றேறி

242 உப்பரிகை மீது முயர்மா ளிகைமீதும்
செப்பரிய பொன்மாடத் தின்முகப்புஞ் சேர்ந்துநின்று

### மகளிர் கூற்று

243 நன்மதிலை யொட்டியதில் நாடிவைத்து நாணிநின்று
தென்மதுரைக் கோனணங்கு சிங்கமோ வென்றுசொல்வார்

244 சாளரங்க ளோறும்வெகு சந்த்ரோத யங்களென்ன
வாளரங்கொள் கண்ணார் வதனம்வைத்துப் பார்த்து [நிற்பார்

245 மாறன் மகட்கு மணவாள னாகியின்பப்
பேறுதவுஞ் செங்கை பிடிக்கவந்தா னென்பாரும்

246 இவர் காகான்* என்பாரும் இந்திரன்கா ணென்பாரும்
தவறாத வாய்மையரிச் சந்திரன்கா ணென்பாரும்

247 செஞ்சந் தனங்களபம் தேனொழுகுங் கொங்கைநல்லார்
அஞ்சம்பு கொண்டுவரு மடல்மதனன் காணுமென்பார்

248 மின்னினிடை தள்ளாட வெண்டுகில்போய் நிற்பாரும்
வன்னவளை போய்க்கை வளைக்கிரங்கி நிற்பாரும்

249 தாளழகைக் கண்டு தலைநாணி நிற்பாரும்
தோளழகைக் கண்டு துடிதுடித்து நிற்பாரும்

250 சீருலவப் பொங்குந் திருவடிவைப் பார்க்கவென்றே
காரிகையார் கண்ணைக் கடன்வாங்கிக் கொள்வாரும்

251 கர்ணனென்ற பேரைவிழி காட்டுமென்று சொல்வாரும
வர்ணமணி மார்பில் மதிமயங்கி வீழ்வாரும்

252 கந்தனிவ னென்பாரைக் கையமர்த்தித் தையல்நல்லார்
செந்தலைச் செல்வர்க்குச் சிங்கவிரு தென்றுரைப்பார்

253 வானாட் டரசு மகபதியொப் பாமடவீர்
காநாட்டு வேந்தர்பிரான் கண்ணாட்ட மெத்தவென்பார்

254 காமனென்பார் காமனுக்குக் கங்குல்மத யானையல்லால்
பான்மொழியீர் வெள்ளைப் பருப்பதமே தென்றுரைப்பார்



255 அன்ன நடையீ ரரிகே தனன்வருதைக்
கன்னன் பெரியதம்பி கண்ணின்மணி காணும் என்பார்

256 சேலை கவர்ந்தெமது சிந்தைகவர்ந் தானெனினும்
மாலை வழங்க மனமிலைகாண் என்பாரும்

257 பொருமானை காத்தினிய பொன்மானை ஓடியெய்து
திருமானை வைத்தபுயன் சீமானைப் பாரும் என்பார்

258 பச்சைப் பரியானைப் பண்ணைப் பரித்தானை
இச்சைப் படியே இனிப்பாரும் என்பாரும்

259 காலழகை வெள்ளானைக் காது மறைத்ததெனச்
சேலழகாங் கண்ணார் சினந்துருக்கிப் பார்ப்பாரும்

260 நேராந் தொடையை நிசார்*மறைத்துக் கொண்டதுகாண்
பாரா யிதுவும் பகைநமக்கே என்றுசொல்வார்

261 இடையழகைப் பொன்னரைஞா ணீண்டுசுற்றிக் கொண்ட [தென்றே
படைவிழியீர் மெய்ந்நாணைப் பார்க்கவிட்டீர் என்பாரும்

262 வரைமார்பைக் குங்குமப்பூ மாலை மறைத்ததென்றே
விரைவாகி மாலை வெளியாக்கி விட்டதென்பார்

263 தார்ப்புயத்தைச் செஞ்சந் தனம்ஒளித்துக் கொண்ட [தென்றே
வார்திகழும் பூணார் மணித்தனங்கள் காட்டிநின்றீர்

264 கண்டசர மெங்கோன் கழுத்தை மறைத்ததென்றே
விண்ட சரமாக மேலாடை நின்றதென்பார்

265 துலங்கும் வயிரத் துருமுடியைச்* சூழ்ந்ததென்றே
இலங்கும் பெருங்காத லென்னமுடி யாதுநின்றீர்

266 மாலைக் குழல்சரிய வச்சிரப்பொற் கொப்பசைய
ஓலைக் குழையாடி ஓடிவந்து பார்ப்பாரும்

267 செல்லுலவு செந்தூள் திரளால் தெரியாமல்
மெல்ல விழிமேல் விரலடுக்கிப் பார்ப்பாரும்

268 தரிக்குஞ் சவாது* மணம் தான்வீச வந்ததெல்லாம்
பரிக்குமிதழ்ச் செங்கமலப் பாவைமணம் வேண்டிஎன்பார்

269 கஸ்தூரி வாசமெழு காதமட்டும் வீசுகம்மை
முத்தாரப் பூண்முலையார் முகமட்டும் என்றுரைப்பார்

270 ஓங்குசனங் காணநம்மை ஓடாதிப் போதானை
தூங்கலென நின்று துரிதநடை பாரும் என்பார்

271 வெற்றிப் பகலோனை மேக மறைத்ததெனக்
கொற்றக் குடைமறைத்துக் கொள்ளுமோ என்றயர்வார்

272 வந்தானை மூர்க்க மதயானை முன்னடக்க
முந்தானை விட்டு முலையானை காட்டிநிற்பார்

273 வாய்மழலைப் பிள்ளை மதிபோலும் பேதையர்கள்
தாயர்தமைக் குங்குமப்பூத் தார்வாங்கித் தாரும் என்பார்

274 உண்டில்லை யென்னுமிடை யொன்றியுமொன் றுய்ச்சோர
வெண்டரளஞ் சேர்பெதும்பை மின்னார்கள் சூழ்ந்துவர

275 வண்டணுகாச் செவ்வாய் மலரவிழுந் தாமரைபோல்
கண்டமட மங்கையர்கள் கண்குளிரப் பார்த்துநிற்பார்

276 கரிக்கொம்பு போலுமுலைக் கண்மடந்தை மார்கூடி
நரிக்கொம்பு முள்ள நயக்கார னென்பாரும்

277 அங்கசன்போ ராடு மரிவைமார் கும்பமுலை
எங்கும் பசுந்தேன் இனங்கறுக்க வந்துநிற்பார்

278 திக்கில்மதன் செங்கோல் செலுத்தத் தெரிவைநல்லார்
கைக்களிறே நாங்கள் பிடிகாணு நில்லுமென்பார்

279 விரவி அமுதெடுத்த வெண்பாற் கடல்நிகர்ப்பப்
பெருகுசுகங் கண்டுவந்த பேரிளம்பெண் ணார்சூழ

280 இவ்வாறு மின்னா ரியம்பவகு தைக்கதிபன்
அவ்வீதி விட்டங் கடுத்ததொரு வீதிவந்தான்

281 ஓங்குபீ ரங்கி * உருமேறு போல்முழங்கத்
தாங்கிய துண் டுக்குழலுஞ் சத்தவெடி யும்மதிரக்



282 கும்பவெடி செந்தீக் குடுக்கைக் கலசவெடி
அம்புவெடி பூமி யதிரு மிரட்டைவெடி

283 கைக்குழலும் பட்டைக் கனகுழலாந் தாய்க்குழலும்
ஒக்கமருந் திட்டோ ரொருமுகமா கத்தீர

284 பூச்சக்ர வாணமெல்லாம் பொற்பூச் சிதறுநபோல்
மாச்சக்ர வாணநெடு வானி லொளிபரப்ப

285 மோகார மண்ட முகடுடைத்துச் சிந்துதல்போல்
ஆகாச வாணத் தடங்குகண்டங் கொப்புளிப்பக்

286 கொம்படைப்புச் சக்கரமும் கூட்டு மிசுக்குடனே
அம்பரத்தில் கெம்பி யடர்ந்தேறுஞ் சக்கரமும்

287 கொல்லும் படைவாணம் குமாரவா ணத்துடனே
செல்லும் எலிவாணஞ் சீறும்பாம் பின்வாணம்

288 பூதவா ணங்கள் பொரும்பரிசை வாணமுடன்
வீதிநிறை யச்சொரியும் வெண்சா மரைவாணம்

289 மைபூத்த விண்ணில் மணிநீலம் வீழ்வனபோல்
கையிற் பிடித்தநிலாக் காயாம்பூச் சிந்தினவே

290 கப்பல்வா ணங்கள் கனகுதிரை வாணமுடன்
குப்பல்குப்ப லாய்ச்சொரியும் கூடைப் பெருவாணம்

291 ஆடுமயில் வாண மதிருநிலாச் சக்கரமும்
தேடுகும்ப வாணஞ் சிரட்டைவா ணத்துடனே

292 மண்டு விசிறிகளும் வாய்த்த நிலாவெடியும்
குண்டணி வாணங் குறித்தகம்பத் தூடுசெல்ல

293 ஒருகோடி சூரியர்க ளோடித் திரிவனபோல்
திருகாடிக் கம்பத் திரியெல்லாம் நின்றொளிர

294 நிரைத்த படைக்கு நிலாவெறியு மேழ்கடல்போல்
இரைத்து டபீரென் றிடியேறு போல்முழங்கக்

295 கம்பவா ணக்காட்சி கண்டு களிகூர்ந்து
செர்பொன்முடி பூலோகத் தேவேந்த்ரன் வந்தனனே

296 கல்விக் கருணைக் கடல்பெரிய தம்பிபெற்ற
செல்வன்வந்தா னென்றுவெற்றிச் சின்னம் பணிமாற

297–304–ஆம் கண்ணிகள் எழுதிய இரண்டேடுகள் இல்லை

305 சந்தா டவிசுரபி சங்கநிதி பத்மநிதி
சிந்தா மணியெனப்பொற் சின்னம் பணிமாறப்

306 பாவடிவைக் கூடற் பதிவடிவே லான்றேட்பூஞ்
சேவடிவைத் தோனெனப்பொற் சின்னம பணிமாற

307 உறைவாங்கு வாட்கை யுடன்வாங்கி யொன்னலரைத்
திறைவாங்கும் போசனெனச் சின்னம் பணிமாற

308 வங்காரக் கொங்கையர்க்கு மணமாலை நல்குமெனச்
சிங்காரக் காரனெனச் சின்னம் பணிமாற

309 வெங்களிற்று மேலவர்கள் வெம்போர் கடந்தவெற்றிச்
சிங்கம்வந்தா னென்றுசெம்பொற் சின்னம் பணிமாறக்

310 குங்குமத்தார் பூண்டு குவலயத்தார் போற்றுநல்ல
சிங்கம்வந்தா னென்றுவெற்றிச் சின்னம் பணிமாற

311 இன்னபடி சின்ன மியம்பிட்டு வெள்ளானை
தன்னை யிறங்கித் தருகா வணத்தில்வர

மணமகன் மணவறை சேர்தல்

312 வாய்த்த மணவாளன் வந்தா னெனமகிழ்ந்து
சேத்த மலரடியார் சிற்றடியா ரையேவ

313 மாரன் ரதியென்ன மங்கையரிந்த் ராணியென்ன
ஆரமணி கற்பூர மாலத்தி தானெடுத்தார்

314 மங்களவாக் யம்படைத்த மாப்பிள்ளைரா சேந்த்ரனுக்குப்
பங்கயப்பூந் தாள்நடக்கப் பாவாடை யிட்டனரே

315 இட்டபா வாடையின்மே லேகியரி யாசனத்தே
அட்டமங்க ளம்மார்ப்ப ஆண்மகன் வீற்றிருந்தான்

316 சிங்கா சனத்திருந்த செல்வமண வாளனுக்கு
மங்கா வுதிரூப மானோர் எதிர்நடந்து



317 பாதாம் புயம்விளக்கிப் பன்னீர் மிகச்சொரிந்து
பீதாம் பரத்தாற் பிரசமலர்த் தாள்துடைத்துச்

318 செய்யு முறைமை செய்துவெற்றிச் சிற்றடியார்
மெய்யில் வெயர்வரும்ப மீள நடந்ததற்பின்

மணமகள் அலங்காரமும் மணவறை சேர்த்தலும்

319 சுந்தரஞ்சேர் பூங்கொடியைத் தோழிமா ரெல்லோரும்
வந்து மனமகிழ்ந்து மஞ்சனநன் னீராட்டிப்

320 பொன்னுக் கலங்காரம் பொன்னினால் செய்ததென்னத்
தன்னிகரில் லாத சரிகைப்பூம் பட்டுடுத்திப்

321 பாணிக்கு மேலழகு பாணித்து வைத்ததென்ன
மாணிக்கப் பொற்கட்டு வச்ரமணிச் சட்டையிட்டுக்

322 கூந்தல் தனையொழுங்காய்க் கோதி மலர்முடித்துச்
சேந்த கரத்திற் றிருச்சூளி யந்தரித்துக்

323 கன்னல் மொழிமடவார் கற்புடைக் காரிகைக்குப்
பின்னல் தரித்துப் பிறையுந் திருவும்வைத்துப்

324 பற்பரா கத்துடனே பச்சைவச் சிரநீலக்
கற்பதித்த சுட்டிவட்டங் கட்டி யலங்கரித்து

325 மணியினலுக் குத்து மரகதப்பூக் கொப்புமணி
அணிஞ்சுலுக்கி யாவும் அரசிலைப்பூத் தொங்கலுடன்

326 ஒன்னப்பூ வச்ர முபயகண் ணாடியொத்த
கன்னத்தில் நின்றிலங்கக் காதுக் கணிந்தனரே

327 இன்னவிலை யென்றுரையா வித்தங்காச் செம்பவளப்
பொன்னசர விக்கோவைப் பூட்டுஞ் சரப்பளியும்

328 தும்பிப் பதக்கம் துலங்குங் இளிப்பதக்கம்
அம்புவியெல் லாமதிக்கும் ஆளிமுகத் தாளிவில்லை

329 வன்னிக்குஞ் செங்கனக மாராடிக் கொத்துவடம்
கன்னிக் கமுகனைய கந்தரத்தின் மீதணிந்து

330 பொன்னரிசு தோள்முடி புசபந்த னத்துடனே
தன்னிகரில் லாவளையுந் தரத்துமணி யட்டியலும்

331 முன்கைவளை ரத்னசரி முந்துரந்து காறையுடன்
மின்மருவு பொன்மணியும் மேவுபச்சைப் பொற்கடையம்

332 திக்கெட்டு மொன்றுகிச் செப்பி விலைமதியாக்
கற்கட்டு வச்ரங் கரமதனி லேயணிந்தார்

333—336- ஆம் கண்ணிகள் எழுதிய ஏடு இல்லை

337 தண்டை சிலம்பு சதங்கைதங்கப் பாடகமும்
வெண்டரளந் தாரகைபோல் மேல்முடிச்சுச் சங்கிலியும்

338 கட்டுசரம் பொற்பிலி காலாழி செம்பொன்னும்
மெட்டு மயிலடிகால் மெல்விரலில் தூக்கினரே

339 காவடர்ந்த மாவிடத்திற் காய்த்துப் பசந்தபிஞ்சு
மாவடுவை வென்ற வரிவிழிக்கு மையெழுதிப்

340 பொன்னுக் கணிகலனும் பொன்னமுதை மற்றுமின்னார்
கண்மெணச்சில் தீண்டாமல் கஸ்தூரி யாற்பூசித்

341 துலங்கிஅச ருப்*பூத் தொடையல்கட்டிப் பொன்போல்
அலங்கரித்துக் குப்பாய மன்பாக வேபோற்றி

342 அருந்துநிபோற் கற்புடைய அன்னநடை மின்னரசைத்
திருந்துமட மாதர் சிறப்பித்து வைத்தபின்னர்ப

343 பந்தலிலே மிக்கநகர்ப் பார்த்திபரு மாதுலரும்
தந்தையரும் நல்லோருஞ் சாதிப் பெரியோரும்

344 கற்றவரும் வேதியரும் காலியா*ரும் வந்திருந்து
குற்றமில் லாத குறித்தமுகிழ்த் தந்தனிலே

345 சொல்லரிதாங் கொத்துவா* வோதிப் பொருளிசைத்து
வல்ல மிசுறு மொகரா* எழுதினரே

346 நிக்கா வெழுதி நிலைறந்த களரியெல்லாம்
ஒக்கவே பாத்திகா ஓதிப் புகழ்ந்தபின்பு



347 சிவிவைத்த பாக்குஞ் சிறந்தவெள்ளை வெற்றிலையும்
நாவி சவாது* நறும்புழுகு சந்தனமும்

348 வெள்ளிமின்வட் டாவில் விளங்குதங்க வட்டாவில்
அள்ளிஅள்ளிக் கையால் அவரவர்க்கே தாம்கொடுத்தார்

349 உலமாக்கள்* ஆலிம்கள்* ஓதுகின்ற வேதியர்க்கும்
அலமாப்புத் தீரப்பொன் னாடை மிகக்கொடுத்தார்

350 செவ்வி முதியோர்க்குந் தீனோர்க்கு மாதுலர்க்கும்
இவ்வரிசை யெல்லாம் இயல்பாகச் செய்ததற்பின்

351 பூப்பிள்ளை நிர்த்தமிடு பொன்மணிச்சிங் காசனத்தை
மாப்பிள்ளை ராயன் மகிழ்ந்திருக்க மாதரசைப்

352 பொற்சரோ ருகமானைப் போற்றருமை மாதுலனால்
கற்புடைய மாதைக் கணவன்வல மாகவைத்தார்6

353 கன்னிகையும் வந்து கணவன் வலத்திருக்க
மின்னிடையா ரெல்லோரும் விழிகுளிரப் பார்த்துரைப்பார்

## மணமக்களை வியந்து உரைத்தல்

354 பெண்ணழகைப் பாரும் பெருவிரலைப் பாருமிரு
கண்ணழகைப் பாருமிரு கையழகைப் பாருமென்பார்

355 பெண்பெற்ற பேறும் பெருமான் றனைக்காணக்
கண்பெற்ற பேறுமின்று கண்டோம் எனமகிழ்வார்

356 திருமானைக் காணவரு சிந்தை களிகூரப்
பெருமானைக் காணநல்ல பேறுபெற்றோ மென்பாரும்

357 மின்னழகு மின்னை விரும்புந் துரைப்பெருமான்
தன்னழகைப் பாருஞ் சமானஞ் சமானமென்பார்

358 கன்னி யழகுங் கணவனழ கும்பார்க்கப்
பின்னு மிருநாட்டம் பெற்றிலோம் நாமென்பார்

359 வல்லமண வாளன் மதயானை கைப்பிடிக்கும்
செல்வம் படிந்த திருவடிவைப் பாருமென்பார்

360 கூர்த்தடங்கண் மானழகுங் கொற்றவனார் தம்மழகும்
பார்த்து நமக்கதிக பாக்கியங் காணென்பார்

361 செல்வந் தழைப்பீர் சிறப்பாக வாழ்ந்திருப்பீர்
மல்வளர்ந்த திண்புயத்து மைந்தரனே கம்பெறுவீர்

362 தேனையும் மன்னர் திலகனையும் தாம்போற்றி
மானை நிகர்விழியார் வாழ்த்தித் துவா*3வாதிக்

363 குணமாக வெல்லோருங் கூடிக் குரவையிட[7]
மணவாளன் றன்கையால் மங்கலியங் கட்டினரே[8]

364 ஆள்வீரன் ரத்னமணி யாசனத்தி னின்றிறங்கி
வாள்போல் விழிநுதலில் வட்டப் பணமழுத்தி

365–368-ஆம் கண்ணிகள் எழுதிய ஏடு இல்லை

## மைத்துனர் நகையாடல்

369 தாள்பிடிக்கு மொன்னார் தளத்திலொரு சிங்கமென்றால்
வாள்பிடிக்கக் கூசுவதேன் வாருமென்பார்
[மைத்துனர்கள்

370 ஏவாகள் நாயகமா மெங்கள் மணவாளன்
பூவாளைக் கையில் பொருந்தப் பிடியுமென்பார்

371 மைத்துனன்மார் செங்கிரண வாள்பிடியும் என்றுசொல்லச்
சித்தமகி ழச்சரசம் செப்பக் களிகூர்ந்து

372 பின்ன மெவரைப் பிளக்கு...........மது
முன்னமே வாளின் முனைநோக்கும் என்றுரைத்தார்

373 மையலிலே சிந்தையுறு மாற்றலரை வென்றவரோ
கையிலே வாள்பிடிக்கக் காணோம் எனவுரைப்பார்

374 மதிகொண் டடையாரை வென்றமண வாளன்
கதிர்கொண்ட கூரிலைவாள் கையிற் பிடியுமென்பார்

375 மாற்றலரை வெல்லுவது மாத்திரமல் லாமலெம்முன்
கோற்றொடிகை வாள்பிடிக்கக் கூடுமோ என்றுரைப்பார்



376 மைத்துனன்மா ரிந்த வழக்குரைக்க மாறாத
சுத்த ரணவீரத் தோழர் மறுத்துரைப்பார்

377 தென்னவனை வென்றரண சிங்கமெங்கோ னிச்சிறிய
கன்னியர்கள் முன்னே கதிர்வாள் பிடிப்பதென்பார்

378 கோதைவடி வேலெடுத்த கொற்றவனென் றெண்ணாமல்
பேதையர்கை வாளைப் பிடியு மெனவுரைத்தீர்

379 கடவா ரணந்தகர்த்த கைவாளை வீரனையும்
மடவார்கள் முன்னே வடிவாள் பிடியுமென்றீர்

380 என்ன இவர்க ளியம்ப மனமகிழ்ந்து
மன்னவர்கோன் கீர்த்தி வழங்குந் துரைப்பெருமான்

381 பூவையர்கள் செவ்வாய் புதைத்துக் குரவையிடக
காவலவன் செங்கதிர்வாள் கையிற் பிடித்தனரே

382 மங்கையர்க்குங் காதில் வரிசைபல உள்ளதெல்லாம்
சங்கைபெறச் சொல்லித் தடக்கைவாள் வாங்கினரே

383 வாகைக் கதிர்வடிவாள் வாங்கியபின் மானையண்ணல்
பாகை திருப்பிப் பகருவார் பாவைநல்லார்

384 நன்மைமண வாளனையும் நங்கையையும் கண்குளிரப்
பொன்மயி லார்கள் புகழ்ந்து புகலலுற்றார்

385 பேர்பெறுவீர் வாழ்வு பெறுவீர் மகப்பெறுவீர்
சீர்பெறுவீர் எல்லாச் சிறப்பு மிகப்பெறுவீர்

386 என்றுமிக வாழ்த்தி யிதயங் குளிர்ந்தமின்னார்
மன்றல் மகிழ்நயத்து மன்னனைப்பார்த் தேதுசொல்வார்

387 சோதிக் கிரணத் துலங்குமணித் தொட்டிலிலே
சாதிக்கு நாயகனாய்த் தான்வளர்ந்த மன்னவன்காண்

388 பொன்னாரு மண்டபத்தில் பூப்பந்தல் நன்னிழலில்
மின்னார்கள் பாராட்ட மிக்காய் வளர்ந்தவன்காண்

389 சந்த்ரவத னன்பெரிய தம்பிமாக் காயனவன்
மைந்தனெனப் பெற்று வளர்த்த மறப்புலிகாண்

390 அய்யமற வன்னைசுற்ற மன்பாக முன்னாளில்
செய்ததவ மொன்றாய்த் திரண்ட முழுமணிகாண்

391 பொருதா மடழுந்தவொன்னார் போர்க்களத்தி லேயே
விருதாது வாரவரை விருதுகண்ட மன்னவன் காண்

392 மருவார்கள் கண்டு வணங்கமருக் கூந்தல்
மருவாருங் கொங்கையர்சேர் மார்க்கண்ட ஞனவன்காண்

393 ஐயனைக்கண் டிவ்வா றதிசயித்து மங்கைநல்லார்
கையெடுத்து மூக்கில்வைத்துக் கன்னியைப்பார்த் தென்
[சொலுவார்

394 செம்பதுமம் விட்டுச் சிறந்தநவ ரத்னமொளிர்
ஐம்பொன்மதில் வீட்டில்வந்த அரும்பொருளைப் பாரு
[மென்பார்

395 காதழகு மூக்கழகுங் கண்ணழகும் வெண்ணகையும்
சீதமணி வாயழகுஞ் செங்கமலங் காணு மென்பார்

396 கந்தரமுந் தோளழகுங் கையழகு மெய்யழகும்
சுந்தரமும் வேறுவமை சொல்லவரி தென்றுரைப்பார்

397–404–ஆம் கண்ணிகள் எழுதிய இரண்டு ஏடுகள் இல்லை.

## வரிசை வழங்கல்

405 விறுப்பாறு பாய்கடலில் வியாபாரி யாகுமெங்கள்
கறுப்பாறு காவலவன் காணுங் கறுப்பாறும்

406 ஆர்கலியுந் தீர்ப்பதாக யாகவீ ரொக்கமொரு (?)
தூர்கலிய மும்வகுதை யூர்ககபா ணந்திகழும் (?)

407 மோகரங்கள் வாரி முயன்று வரும்படகும்
சாகரங்கு லாவிவச்ரந் தாங்கி வருஞ்சுலுப்பும்

408 மதிச்சோங்கு பச்சை மரகதத்தாள் கொண்டுவரும்
புதுச்சோங்கு செந்நெல் பொருப்பொன்று தோணிகளும்

409 உண்மையுடன் வெள்ளி உருப்பியா ஏற்றிவரும்
வண்மைபெறு கின்ற வளமும்வள மாய்க்கொடுத்தார்



410 வீடாத செம்பொன்மணி வீடுங் கொடுத்துநிதம்
நாடா துலாநிகழும் நல்லவெள்ளை வாரணமும்

411 கடக்குமலை வீசு கடலை யெடுத்துறிஞ்சும
நடக்குமலை போலவரும் நல்லவெள்ளை வாரணமும்

412 கவடிகள்மெய் பாயக் கவடிவைத்துத் தாவும்
கவடிவைத்துத் தாவுங் (?) காமர் குரகதமும்

413 முந்து பதுமை குடியிருக்கும் மொய்ம்பனுக்குத்
தந்தச் சிவிகை தனிச்சிவிகை யுங்கொடுத்தார்

414 நாடோறுங் கீர்த்திகொண்டு நானிலத்தில் நாவலர்கள்
ஈடேற வந்தவனுக் கேறுகன தண்டிகையும்

415 சருவந்து* பூமுடியும் தங்கச் சரப்பளியும்
பருவந்தப் பாதுதவிர் பாங்கான தோள்மூடி

416 முன்கை முதாரி முழுவயிரப் பொற்கடகம்
நன்குபெறு செம்பொன் நவரத்ன மாலிகையும்

417 துய்யகதிர் முத்துத் துருய்*பதக்கம் கண்டசரம்
செய்யவிர லாழியருஞ் செம்பொன்னால் தோள்வளையும்

418 மாணிக்கச் சட்டை வரும்பொற் கபாய்கள்*மற்றும்
பூணத் தகுவதெல்லாம் பொற்பாக வேகொடுத்தார்

419 வரிசைபெற வாங்கும் வரும்பெரிய கத்திவட்டப்
பரிசை யுடனே பருவாளுங் கைக்கொடுத்தார்

420 நீளுமுனை காட்டியெழு நேரிசமுங் கைவேலும்
ஆளு முனைச்சுரிகை ஆயுதமுந் தாங்கொடுத்தார்

421 வேளாஞ் சினேகவடி வேந்தர்முடி வேந்தனெனக்
காளாஞ்சி குஞ்சங் கனமிகுவெண் சாமரமும்

422 பொன்னிட் டகப்பை புதுச்சித்ர வெள்ளிமிடா
மன்னுமிரு கால்சேர் மணிவயிரப் பாக்குவெட்டி

423 செம்பொற் கரண்டகமும் சீவிவைத்துத் தான்முடியும்
பைம்பொன்முடி சீருமுதல் பாங்காக வேகொடுத்தார்

424 விற்பூட்டுப் பெட்டகமும் மேவியொளி சேர்கனகப்
பொற்பூட்டுப் பூட்டிப் பொருந்துநிலைப் பெட்டகமும்

425 வெள்ளியினால் குத்து விளக்குடன்வெண் பட்டுமெத்தை
கொள்ளுந் தழுவணையும் கூறுசப்ரக் கொள்கையுடன்

426 கூறிய பொற்கொட்டுக் கூடைதங்கச் சட்டுவமும்
வீறிய காந்தியெங்கும் வீசுவெள்ளி வெண்குடமும்

427 பொன்னரிக்கஞ் சட்டி புதுச்சித்ர வெள்ளிமிடா
மன்னு சிறுகுடங்கள் வாய்குவிந்த பொற்கலசம்

428 மாந்தளிர்செம் பட்டு வருமேக வர்ணியுடன்
ஏந்துபுள்ளிப் பட்டோ டிளமா துளிர்சேலை

429 இச்சைக் கினிதா யிசைந்த மணிக்கிணங்கிப்
பச்சைக் கிளியுமந்தப் பஞ்சவர்ணப் பூங்கிளியும்

430 பலமணிக ளிட்டாடும் பல்லாங் குழியுமின்னோர்
நலமணையி லாடும் நவரத்ன வம்மணையும்

431 உமிழும் படிக்கம் உயர்படிக்க முங்கலமும்
கமலப் படிக்கம் காளாஞ்சிச் சேனெய்க்கலம்

432 கட்டிவருஞ் செம்பவளக் கட்டில்தலை காணிமெத்தை
இட்டமக லாதே யிருக்கவந்த பாக்கியரும்

433 தாளடியில் நின்று தலைபணிந்து வேலைசெய்ய
ஆளடியா ராயிரமும் ஆணடியா ராயிரமும்

434 செப்புங்கைதய லார்நினைந்த சிவரத்னம் வைக்குமுத்துச்
செப்புந் தாலா*வும் செய்யபொன்னின் வட்டாவும்

435 சிந்தைமகிழ் கின்றதந்தச் சீப்புஞ் சிணுக்கரியும்
வந்தவரைத் தன்னிடத்தில் வைக்கும்நல்ல சர்கொலியும்

436 நாக்குத் திருந்துமொழி நங்கையருங் கொங்கைகொண்டு
மூக்குத் திருந்த முழுமணிப்பொற் கெண்டிகளும்

437 பெய்தக்கால் காந்தி பெருகுதங்கப் பள்ளையம் போற்
செய்தக்கால் நன்மையெனச் சேனைக்கா லுங்கொடுத்தார்



438 பூங்கா வனமும் புதியதென்னஞ் சோலைகளும்
நீங்காமல் மங்கையர்கள் நீராடும் வாவிகளும்

439 பாலுக் கெருமை பசுமாடும் ஆடுகளும்
மேலுக்கு மேலுமெண்ணி விறுபெறத் தாய கொடுத்தார்

440 வையம் மகிழ்ந்திடநன் மாமனொழுந்திருந்து
செய்யும் வரிசையெல்லாம் செய்தோம் எனக்கொடுத்தார்[9]

## வாழ்த்துரை

441 இந்த வரிசைபெற்ற ஏந்திழையு மன்னவரும்
மைந்தர்பதி னாறும் வகையாகப் பெற்றெடுப்பீர்

442 பொன்னு மணியும் பொருந்துதல்போ லேபொருந்தி
எந்நிலமுந் தான்வாழ எப்போதும் வாழ்ந்திருப்பீர்

443 நன்றி பெறுவீர் நயம்பெறுவீர் ஆண்பெறுவீர்
என்றுந் துனியாவில்* ஈமான்* மிகப்பெறுவீர்

444 குன்றில் விளக்காய்க் குலவிளக்காய் ஓங்கிநிலை
நின்ற பெரும்புவிமேல் நீடூழி வாழ்ந்திருப்பீர்

445 துய்ய ஈசுபு° துணையாம் சுலைகா°போல்
வய்யநடு எந்நாளும் அன்பாக வாழ்ந்திருப்பீர்

446 சுலைமா° னன்னபியும் தோகைபல் கீசையும்°போல்
அலையாத செல்வமொடும் அழகாக வாழ்ந்திருப்பீர்

447 மன்றுட்ட முள்ள மகம்மது° கதீஜா°போல்
நன்று யிருவீரும் நலமாக வாழ்ந்திருப்பீர்

448 விளங்கும்அலி யுல்லாவும்° வீவிபாத்து முத்தை°[யும்போல்
வளங்குலவ மேன்மேலும் வாகுபெற வாழ்ந்திருப்பீர்.[10]

# திருமணவாழ்த்து

## குறிப்புரை

1. வகுதாபதிக்கிறைவன்—வகுதாபதிக்கு அரசன். சீதக்காதி வள்ளலை வகுதாபதிக்கு அரசன் என்று சிறப்பாகக் கூறியுள்ளார். வகுதா என்பது வகுதை என்றும் வழங்கும். இப்பெயர் பக்தாது (بغداد) நகரைக் குறிக்கிறது. அந் நகர் அறுநூறு வருடகாலம் அப்பாஸ் கலீபாக்களின் தலைநகரமாக விளங்கியது. முஸ்லிம்களுள் பலர் பக்தாதுபட்டினத்திலிருந்து தமிழ்நாட்டில் குடியேறியதாகச் சொல்லப்படுகிறது. அங்ஙனம் குடியேறியவர்கள் தம் பெயருக்கு முன் வகுதை என்று சேர்த்துக் கொள்வது வழக்கம். சீதக்காதியின் முன்னோர்கள் பக்தாது நகரத்திலிருந்து தமிழ்நாட்டில் குடியேறியிருக்கலாம்.

2. தசாங்கம் அரசியலுறுப்புக்கள்: அவை பல விதமாகக் கூறப்பட்டிருக்கின்றன. நகரம், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி என்றும், யானை, நாடு, ஊர், ஆறு, மலை, குதிரை, செங்கோல், முரசு, தார், கொடி என்றும் கூறப்படுகிறது.

3. கறுப்பாறு காவலவன் இதன் விவரம் தெரியவில்லை.

4. செம்பிநன்னாடு செம்பிநாடு இவை சம்பா நாட்டைக் குறிக்கும். சம்பா என்பது கம்போடியா, இந்தோ-சைனா பிரதேசத்தைஅடுத்துள்ள நாடு. சீதக்காதிபுகழ் எண்டிசையிலும் பரவியிருந்தது; சம்பாநாட்டிலும் அவர் பெருமை விளங்கியது என்று புலவர் பாராட்டுகிறார்.

5. வச்ர நன்னாடன், வச்ர நாடு பஸரா பிரதேசத்தைக் குறிக்கும். இது பஸரா, கூபா நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு முஸ்லிம்கள் குடியேறியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பதுடன், சீதக்காதி சிறப்பாகப் போற்றப்பட்டிக்கிறார் என்பதையும் தெரிவிக்கிறது.

6. முககலனை இதன் பொருள் தெரியவில்லை.

7. மகளிர் விசேட காலங்களில் நாவாற் குழறி இடும் மகிழ்ச்சி யொலி.

8. மணவாளன் கையால் மாங்கல்யம் கட்டும் வழக்கம் தமிழ் நாட்டில் சில பாகங்களில் முஸ்லிம்களுக்கிடையே வழங்கி வந்தது என்பது இந்நூலினால் தெரிகிறது.

9. மணமகளுக்கு வரிசை கொடுத்தல் தமிழ்நாட்டுப் பழக்கம். க்லியாண காலங்களில் மாமன்வரிசை மிகமுக்கியமானது.

10. வாழ்த்து: நூலின் இறுதியில் மங்களம் சொல்வது தமிழ் மரபு. இங்கு இஸ்லாமிய முறைப்படி வாழ்த்துச் சொல்லப் பட்டிருகிறது.

## அரும்பதவுரை

அரிகேதனன் - சிங்கக் கொடி உடையவன்
அரிவை - 19 முதல் 25 வயசு வரை உள்ளவள்
அல் - இரவு, இருள்
அளி - வண்டு
அனந்தர் - நித்திரை மயக்கம்
ஆசானுபாகன் - முழங்கால் வரை நீண்டுள்ள கை உடையவன்
ஆர் - ஆத்திப்பூ
ஆழி - கடல், மோதிரம்
ஆள்நாகரிகன் - நாகரிகம் உள்ளவன்
இக்குவேள் - கரும்பை வில்லாக வுடைய மன்மதன்
உதரபந்தனம் - அரைப்பட்டிகை
உரகம் - நாகமல்லிகை ; வெற்றிலை
உலாந்தா - 'ஹாலண்டு' தேசம்
ஒன்னார் தளம் - பகைவர் சேனை
ககனம் - ஆகாயம்
கங்குல் - இரவு
கசம் - யானை
கஞ்சமுத்து - தாமரை மணி
கந்தரம் - கழுத்து
கம்மியர் - கம்மாளர்
கரபந்தனம் - கையில் அணியக் கூடிய ஆபரணம்
கருனை - ஒருவகை வாத்தியம்
கருப்பு - கரும்பு
கலணை - சேணம் ; இங்கு யானை மேல் அம்பாரிக்கு வந்துளது
கலி - வறுமை, துன்பம்
கவடி - ஒருவகை விளையாட்டு
காசறை - கஸ்தூரி
காநாடு - கற்பகம் உள்ள தேசம் ; தேவலோகம்
காளாஞ்சி - தம்பலம் துப்புங் கலம்
குஞ்சம் - பூங்கொத்து
குப்பாயம் - சட்டை
குரகதம் - குதிரை
குளிற - ஒலிக்க
கூடற்பதி வடிவேலான், பாண்டியன்
கொட்டுக்கூடை - பாத்திர வகை
கொண்டல் - மேகம்
கோகனகை - லக்ஷ்மி
கோட்டால் - உச்சியினால், சிகரத்தால்
சங்க்ராமம் - போர்
சரோருகம் - தாமரை
சாளரம் - ஜன்னல்
சித்தசன் - மன்மதன்
சிரம் - தலை
சிராசனம் - ஓர் ஆசனம்
சீனச்சுருட்டு - சீனதேசத்துப் பட்டுவகை
சுரபி - காமதேனு
சுரிகை - உடைவாள்
சுரும்பு - வண்டு
சுலுப்பு - கப்பல்
சுளிகை - ஒருவகை அணி
சூடகம் - கை வளை
செங்கமலை, லட்சுமி
செச்சை - தங்கியிருக்குமிடம்
சேனைக்க்ால் - குடதீபத்தை வைக்கும் கால்
ஞாலம் - பூமி
டம்மானம் - டமாரம்
தண்டிகை - பல்லக்கு

தந்தி முத்து - யானைக் கொம்பின் முத்து
தமரத்தம்பழம் - ஒருவகை மரத்தின் பழம்
தாளம் - முத்து
தழுவணை - திண்டு
தாபநித்தோன் - நிலைநாட்டியவன்
திரு - பழைய தலையணி வகை
திருச்சூளியம் - அணிவகை
திரை - அலை
துகில் - வெண்பட்டு; துகிற்கொடி
தெம்முனை - பகைவர் முனை; போர் செய்யுமிடம்
தெரிவை 25 முதல் 30 வயசு வரை உள்ளவள்
தென்னன் - பரண்டியன்
தொங்கல் - மாலை
தொடையல் - மாலை
நமரி - எக்காள வகை
நராதிபதி - அரசன்
நித்திலம் - முத்து
நிதக்கத்து உள்ளார் - தினமும் (துன்பத்தால்) கத்து தலை நினைக்காதவர்களாகிய
நேமம் - நியமம்; விதி
நேரிசம் - எறிபடை
பதலை - ஒருகண் பறை
பந்தி - வரிசை
பலகணி - ஜன்னல்
பள்ளயம் - உண்கலம்
பாடகம் - மகளிர் காலணி
பாத்த - பரவிய
பாவடி - அங்கவடி
பிரசம் - தேன்
பிரசமலர் மான், லக்ஷ்மி; லக்ஷ்மி போன்றவள்
புரிசை - மதில்
பூகமுத்து - கமுகின்முத்து
பெதும்பை - 9 முதல் 11 வயசு வரை உள்ளவள்
பேதை - 7 முதல் 9 வயசுவரை உள்ள பெண்
பேரிளம் பெண் - 30 முதல் 40 வயசு வரை உள்ளவள்
மகபதி - இந்திரன்
மங்கை - 11 முதல் 13 வயசு வரை உள்ளவள்
மடந்தை - 13 முதல் 19 வயசு வரை உள்ளவள்
மந்தாரதாரு - கற்பக விருக்ஷங்களுள் ஒன்று
மருவார் - பகைவர்
மல்லாரி - ஒரு வகைப் பறை
மாகம் - ஆகாயம்
மாற்றலர் - பகைவர்
மாறன் - பாண்டியன்
மாறுஅடங்கார் - பகைவர்
மீனவன் - பாண்டியன்
முதாரி - முன்கை வளைகளுள் ஒருவகை
முன்றிலான் - முற்றத்தையுடையவன்
மேவலர் - பகைவர்
மேவார் - பகைவர்
மை - கருமேகம்
மோகாரம் மோகரம் - பேரொலி
வங்கம் - கப்பல்
வச்ராங்கி - வச்சிரச்சட்டை
வடவை - வடவாமுக அக்கினி
வந்து - காற்று
சந்தாடவி - சந்தனக்காடு
வழுதி - பாண்டியன்
வன்னி - நெருப்பு
வாகுவலயம் - தோள்வளை
வட்டா - வாய் அகலமான பாத்திரம்
வாரி - சமுத்திரம்
வாவி - தடாகம்
விதானம் - மேற் க்ட்டி; மேலே விரித்துக் கட்டப்பட்டது
வீராணம் - ஒருவகைப் பெரிய பறை
வீறு - மேம்பாடு

# செய்தக்காதி நொண்டி நாடகம்

பதிப்பாளர்

S. முஹம்மது ஹுஸைன் நயினார்
பி. ஏ. (மதராஸ்), எம். ஏ., எல் எல். பி. (அலிகார்), பிஹெச். டி. (லண்டன்)

பேராசிரியர், அறபி, பார்ஸி, உறுது பகுதியின் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்

வெளியிட்டவர்

Mrs. சுல்தானா அப்துல்லாஹ், எம். ஏ., பி. டி.

95, சான்தோம் பெரியசாலை

மயிலாப்பூர், மதராஸ்-4

பதிப்புரிமை] 1953 ¤ ¤ ¤ ¤

முதற் பதிப்பு 1953

நூறி பிரஸ்
54, மெயின் ரோடு
இராயபுரம், மதராஸ்

புத்தகம் கிடைக்கும் இடம்

எஸ். வாஸன் கம்பெனி

மயிலாப்பூர், மதராஸ்

# செய்தக்காதி நொண்டி நாடகம்

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| நூலாராய்ச்சி | ... | i—xvi |
| நூல் | .... | 1—42 |
| கடவுள் வணக்கம் | ... | 1—3 |
| நொண்டியின் சிறப்பு | ... | 4—6 |
| நொண்டியின் வரலாறு | ... | 7—15 |
| அவ்றங்கு செய்கு சாகிபுவின் சேனை செஞ்சியிற் பாளையம் இறங்கியது | ... | 16—18 |
| மக்களின் பதற்றம் | ... | 19—20 |
| நொண்டி பாசறை சேர்தல் | ... | 21—22 |
| நொண்டி குதிரையைக் கோடல் | ... | 23—24 |
| நொண்டியின் முயற்சி வறிதாதல் | ... | 25—26 |
| நொண்டி சிறைபடல் | ... | 27—28 |
| நொண்டி தண்டனைக்குள்ளாதல் | ... | 29—30 |
| மாமுநயினர் நொண்டியைக் காணுதல் | ... | 31—32 |
| நொண்டி இராமநாதபுரம் போதல் | ... | 33—34 |
| கீழக்கரையில் செய்தக்காதி கொலு வீற்றிருத்தல் | ... | 35—38 |
| நொண்டி இஸ்லாத்தைத் தழுவுதல் | ... | 39—40 |
| நொண்டியின் வேண்டுதல் | ... | 41—42 |
| பிழை திருத்தம் | ... | 43 |
| சீதக்காதிபேரில் தனிப்பாடல்கள் | ... | 44—47 |
| குறிப்புரை | ... | 49 |
| அரிய வழக்குச் சொற்கள் | ... | 50 |

## திருமணவாழ்த்து, நொண்டிநாடகம்
## இந் நூல்களில் வந்துள்ள


அறபி, பார்ஸி, ஹிந்தி பதங்கட்குப் பொருள் ... 51—54

அறபிப் பெயர்களின் குறிப்புரை ... 55—58

தமிழ்ப் பெயர்களின் குறிப்புரை,
இடப்பெயர்கள் அகராதி ... 59—60


# செய்தக்காதி நொண்டி நாடகம்

## நூலாராய்ச்சி

அவ்ரங்குசேபு ஆலம்கீர் பாத்ஷாஹ் முகலாயப்பேரரசர் தென்னாடு முழுமையும் ஒரு குடையின்கீழ்க் கொண்டு வர எண்ணி, பீஜப்பூர், கோல்கொண்டா முதலிய நாடுகளின் மீது படையெடுத்தார். முகலாயச் சேனைகள் அடுத்தடுத்து இந் நாடுகளைத் தாக்கின. அதனால், பீஜப்பூர் ராஜ்யம் விழ்ந்தது. கி. பி. 1687-ஆம் ஆண்டில் கோல்கொண்டா பிடிபட்டதும், தக்ஷிணத்தில் அவர் வேலை மிக்க வெற்றியுடன் நிறைவேறியது. அக்பர் பாத்ஷாஹ் காலமுதல் முகலாயப்பேரரசர்கள் கண்ட பேராசைக் கனவு உண்மையாயிற்று. தக்ஷிணத்தில் முகலாயருக்கு விரோதமாக எந்த முஸ்லிம் அரசும் இல்லை. தென்கோடி தவிர இந்தியா முழுவதும் முகலாயத் தனிக்குடையின்கீழ் வந்தது, என்று அவ்ரங்குசேபு நினைத்தார்.

அவையெல்லாம் உண்மையாயிருப்பினும், மராட்டியரால் விளையக் கூடிய துன்பத்தை அவ்ரங்குசேபு சக்ரவர்த்தி சரியாகக் கணக்கிட்டு அறிந்துகொள்ள முடியவில்லை. மராட்டியர் தலைநகரம் தம்வசமானதனாலும், அரச வமிசத்தார் பலரையும் தாம் சிறைப்படுத்தியதனாலும், மராட்டிய அரசே விழ்ந்து விட்டது என அவர் தீர்மானித்தார் போலும்! ஆனால், எதிரியின் முழுவன்மையையும் அவர் மேலும் உணர வேண்டியவராய் இருந்தார்.

கி. பி. 1689-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பாத்ஷாஹ் அவர்களின் கட்டளைப்படி சாம்பாஜி தூக்கிலிடப் பட்டார். அச்சமயம் மற்ற முக்கியமான மராட்டியத் தலைவர் அனைவரும் ராஜகட்டத்திற்குச் சென்றனர்; அங்குச் சாம்பாஜியின் மனைவியான எஸ்ஸூபாய் என்பவளுடன் ஆலோசனை செய்து, அவளுடைய ஆறுவயதுள்ள மைந்தனை ஸாஹூ என்னும் பெயருள்ளவனுக்குப் பட்டம் சூட்டி, அவனுக்குப் பிரதி

நிதியாய் இராமராயர் என்பவர் அரசாளுமாறு ஏற்பாடு செய்தனர்.

இராமராயர் ஓரிடத்திலும் நிலைத்து வசிக்காமல், ராஜகட்டத்திலிருந்து விசால கட்டம் வரையிலுள்ள கோட்டை ஒவ்வொன்றிலும் சில சில காலம் தங்கினார். அவ்வாறு செய்து முகலாயர்கவனத்தை ஒருநிலையில் நில்லாதபடி சிதறச் செய்ய வேண்டும் என்பதே அவர்நோக்கம். ஆனால், முகலாயர் ராஜகட்டத்தை வெகு சீக்கிரத்தில் கைப்பற்றினர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் இராமராயர் செஞ்சிக் கோட்டைக்கு விரைந்து செல்ல வேண்டுமென்று மராட்டியத் தலைவர்களும் மந்திரிகளும் ஆலோசனை கூறினார்கள். ஆகவே, 1689-ஆம் ஆண்டின் இறுதியில் இராமராயர் பகைவரிடம் அகப்படாமல், தந்திரமாகச் செஞ்சிக்கோட்டையை அடைந்தார்.

இராமராயர் செஞ்சியை அடைந்த பிறகு, அரசாங்கத்தை அங்கு ஏற்படுத்தியதனால், பலர் அந்நகருக்கு வரலாயினர். பின்னர், செஞ்சி மராட்டியரின் செல்வாக்குள்ள புதியதொரு தலைநகரமாய் விளங்கிற்று. அதனால், புனா ராஜ்யத்தின் மீது நோக்கம் வைத்திருந்த முகலாயப் படைகள் தங்கள் நோக்கத்தை விட்டு, செஞ்சி நகரத்தின் மீது கருத்தைச் செலுத்தின. இராமராயர் தாம் சிறந்த சூழ்ச்சி செய்ததாகக் கருதினார். முகலாயப் படைகள் செஞ்சிக்கு வந்தால், தாம் மற்ற இந்து நாயக்கர்களின் உதவியைப் பெற்று ஒரு பெரும் படையைத் திரட்டிக் கோல்கொண்டா, பீஜப்பூர் என்னும் நாடுகளைக் கைப்பற்றலாம் என்று அவர் எண்ணியிருந்தார்.

செஞ்சியில் தங்கிய இராமராயருக்கு மிகுந்த பொருள் தேவையாயிருந்தது. அப்பொழுது தென்னிந்தியாவின் கிழக்குக் கரையிலிருந்த ஐரோப்பியக் கம்பெனிகளிடமிருந்து கடன் வாங்குவது உத்தமம் என்ற யோசனை அவருக்குத் தோன்றியது. 1689-ஆம் ஆண்டில் நடந்த சம்பவங்களைக் கூறும் ஆங்கிலேயர் தினக்குறிப்பில் கூனிமேடு என்ற இடத்தில் நிறுவப்பட்டிருந்த இங்க்லீஷ் பாக்டரியின் தலைவர், ஆங்கிலேயர் கூனிமேட்டிலிருப்பதற்கு உரிமை பெற, மூவாயிரம் வராகன் முன்பணமாகவோ, கடனாகவோ கொடுக்க வேண்டுமென்று செஞ்சிச் சுபேதார் வற்புறுத்தியதாகவும் அவ்வாறே செஞ்சியின் எல்லைக்குள்ளிருந்த பிரெஞ்சு, டச்சு பாக்டரிகளின் தலைவர்களிடமிருந்தும் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இவை தவிர, உள்நாட்டு வியாபாரிகளிடமிருந்தும் வற்புறுத்திப் பணம் பெற்றதாகவும் அத் தினக்குறிப்பில் எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பெற்ற பொருளும் செலவுக்குப் போதாமையால், மராட்டியர், தேவனாம் கோட்டையையும் அதைச் சுற்றி, வெடி குண்டு பாயக்கூடிய விஸ்தீரணம் உள்ள இடத்தையும், ஐரோப்பியக் கம்பெனியார்களுள் யார் பெருந்தொகை கொடுக்க முன்வருகின்றாரோ அவருக்கு விற்பதாகத் தெரிவித்தனர். பிரெஞ்சுக் காரரும் டச்சுக்காரரும் தாமே விலைக்கு வாங்கிக் கொள்ளத் தீர்மானித்து, ஆங்கிலேயர் வாங்காமலிருப்பதற்காக அவர்களிடம் அந்த இடத்தின் மதிப்பைக் குறைத்து வஞ்சகமாகப் பேசிவந்தனர். ஆனால், ஆங்கிலக் கம்பெனியார், தேவனாம் கோட்டை தம் வசத்தில் இருப்பதனால், தமக்கு மிக்க இலாபமும், அதிக உபயோகமும் ஏற்படுமென்று கருதிப் பல நாள் பேரம் பேசிக் கடைசியில் இலட்சத்து எண்ணாயிரத்து நூற்றைம்பது ரூபாய் மதிப்புள்ள 51,500 சக்கரம் (இரண்டே கால் ரூபாய் மதிப்புள்ள தங்கநாணயம்) விலையாகக் கொடுக்கத் தீர்மானித்தனர்.

உடனே கூனிமேட்டின் சுபேதாராகிய சந்தர் பல்லாஜி என்பவர், இராமராயரின் பிரதிநிதியாகச் சென்னைக்குச் சென்று மேற்படி கோட்டையையும் அதைச் சுற்றியுள்ள இடத்தையும் விற்பதற்கு ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டார். பிறகு ஆங்கிலேயர் தம் பிரதிநிதிகளாகத் தாமஸ் ஏல், சார்ல்ஸ் பார்வெல் என்னும் பெயருள்ள இருவரை இராமராயரிடம் அனுப்பி, முறைப்படி பர்வானாவைப் பெற்றுவரச் செய்தனர். இராமராயர் 1690-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதக் கடைசியில், பர்வானாவை ஆங்கிலேயருக்கு அளித்தார். அதன்படி தேவனாம் கோட்டையும அதைச் சுற்றிலுமுள்ள இடமும் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயின. அவற்

றெடு அவ்வெல்லைக்குள், கம்பெனியாரின் சட்டதிட்டங்கள் பழக்கவழக்கங்கள் நிலவி வரக்கூடிய அரசியல் நடைபெறவும், அவர்களின் நாணயங்கள் செலாவணியாகவும் உரிமை உண்டாயிற்று.

இராமராயர் செஞ்சிக்கு வந்த பிறகு ஒரு பக்கம் ஐரோப்பியர்களுக்கிடையே பரபரப்பும் கிளர்ச்சியும் உண்டாயின. மற்றொரு பக்கம், முகலாயர்களுக்கு எதிராக மராட்டியரின் செல்வாக்கு நிறைந்த புதிய தலைநகரமொன்று உண்டாயிற்று. இதை உணர்ந்த அவ்ரங்குசேபு ராஜகட்டத்திலிருந்து திரும்பி வந்த துல்பகார் கான் என்ற தளகர்த்தரை 1690-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கீழ்த்திசையிலுள்ள மராட்டிய மன்னரை வென்று வரும்படி கட்டளையிட்டு அனுப்பினர்.

துல்பகார் கான் வருகையைப் பற்றி 1690-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்து நிகழ்ச்சியைக் குறிக்கும் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியாருடைய தினக் குறிப்பில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

"முகலாயப் படைகளின் தளகர்த்தராகிய துல்பகார் கான் இடமிருந்து நமக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் முகல் மன்னரின் மந்திரியாராகிய ஆசப் கான் என்பவரின் குமாரர். அவர் செஞ்சிக் கோட்டையை முகலாயப் படையுடன் முற்றுகை செய்கிறார். அவர் எழுதிய கடிதத்தில் பல விஷயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஆங்கிலக் கம்பெனியார் அவருக்கு இருநூறு மணங்கு வெடிமருந்தும், ஐந்நூறு போர் வீரர்களும் அனுப்பவேண்டுமென்று அவர் பெரிதும் வேண்டிக்கொண்டு எழுதியிருக்கிறார். அவ்வேண்டுகோளுக்கு இணங்காவிடின் நாம் இராமராயர் கட்சியைச் சேர்ந்தவர் என்று நம்மீது குற்றஞ்சாட்டி முகல்சக்கரவர்த்திக்கு அறிவித்துவிடுவார். அதனால், இந்த நாட்டில் சமாதானமாக நிலைத்து வாழும் நம் வாழ்வுக்கு இடையூறும், நம் கடல்கடந்த வாணிகத்திற்குக் கெடுதலும் ஏற்படும். ஆகலின் துல்பகார்கானுடன் நேசத்தோடு இருக்கக் கருதி இருநூறு மணங்கு வெடிமருந்து மட்டுமே அனுப்பிவிட்டு, போர்வீரர்களை அனுப்ப இயலவில்லை என அறிவித்துவிட்டோம்."



ஆங்கிலேயர் வெடிமருந்து கொடுத்து உதவியதற்குக் கைம்மாறாக, துல்பகார் கான் அவர்களுக்கு 1691-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கவுல் கொடுத்தார். அதன்படி ஆங்கிலேயர் அதுகாறும் அனுபவித்த சுதந்தரங்களைப் பின்னும் அனுபவிக்கும் உரிமையைப் பெற்றனர்.

துல்பகார் கான் படையெடுப்பை அறிந்த இராமராயர் தம் படைகளையும் தம் நேசக் கட்சியினரான தஞ்சாவூர்த் திரியம்பக ராவ் எச்ச நாயக்கன் படைகளையும் சேர்த்துக் கர்நாடகப் பீடபூமியின் வட திசையில் அனுப்பி, முஸ்லீம் தளகர்த்தரைக் கீழ்ப்பிரதேசத்தில் வரவொட்டாமல் தடுக்க எத்தனித்தார். ஆனால், இராமராயர் அனுப்பிய அப்படை துல்பகார் கான் பெயரைக் கேட்டதாலேற்பட்ட அச்ச மிகுதி காரணமாக ஒன்றும் செய்யாமல் திரும்பி வந்தது. ஏனெனில் துல்பகார் கான் ராஜகட்டத்தில் மராட்டியர்களை முறியடித்த வீரர்; சாம்பாஜியையும் அவர் குடும்பத்தாரையும் சிறைப்படுத்திய தீரர்; கடப்பை, ஆர்க்காடு முதலிய பகுதிகளில் தொடர்ச்சியாகப் போர் செய்துவெற்றி கொண்ட சூரர். இக்காரணங்களால், துல்பகார்கானுடைய பிரசித்திபெற்ற பெயரும், பெருமையும், அவரிடத்திற் பகைவர் கொண்டிருந்த அச்சமும், செஞ்சிப் பிரதேசம் முழுவதும் பரவி, பெரிய கலக்கத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்கின.

இராமராயர் செஞ்சிக் கோட்டையினின்றும் நீங்கித் தம் நண்பராகிய தஞ்சாவூர் அரசருடைய உதவியையும், தேவனும்பட்டினத்திலுள்ள ஆங்கிலேயர் உதவியையும் எளிதாகப் பெறுவதற்கு அனுகூலமாயிருக்கும் ஓரிடத்தை நாடிச் சென்றார். அப்பொழுது முகலாயச் சேனையை முன்னேறவொட்டாது, தடுப்பதற்குத் தஞ்சாவூர் அரசர் பொருளும் சேனையும் இராமராயருக்கு அனுப்பிவைத்தார்.

1690-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இராமராயர், எலிஹு-யேல் என்ற பெயரையுடைய சென்னைக் கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதி, அதில் தாம் செயின்ட் டேவிட் கோட்டையைக் கட்டுவதற்கு உதவியாக அளித்த பர்வானவை மறவாமல், தமக்கு வேண்டும் போது உதவி செய்ய வேண்டினர்.

மேற்படி ஆண்டு அக்டோபர் மாதத்தில் இராமராயர் ஆங்கிலக் கப்பலில் ஏறிக் கடல் வழியே தப்பி ஓடக் கூடு மென்பதை துல்பகார்கான் அறிந்து அவ்வாறு அவர் தப்பி ஓடுவதைத் தடுக்கும்படி பிரஞ்சுக்காரருக்கு எழுதினார்.

செஞ்சியிலிருந்து கடல்வரையிலுமுள்ள பிரதேசம் முழுவதும் மராட்டியர்-முகலாயர், ஆகிய இருகட்சியாருடைய போர் வீரர்களாலும் கொள்ளையடித்துப் பாழாக்கப் பட்டு வந்தது. மக்கள் தெற்கே தஞ்சாவூர்ப் பிரதேசத்திற்கும், ஐரோப்பியத் தொழிற்சாலைகளைச் சூழ்ந்திருக்கும் பிரதேசத்திற்கும் ஓட ஆரம்பித்தார்கள். அதன் பயனாகப் புதுச்சேரியின் மக்கள் தொகை முன்னிருந்த அளவினும் இரு மடங்கு பெருகி அறுபதினாயிரம் பேர் வரை ஆயிற்று.

1691-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதக் கடைசிக்குள், முகலாயர்கள் ஒரு பெரும் படையையும் அதற்குரிய தள வாடங்களையும் அமைத்துக்கொண்டு, அவற்றுடன் செஞ்சிக் கோட்டைக்கு எதிரே வந்து தங்கியவுடன், ‘கூடிய சீக்கிரத்தில் இக்கோட்டை முறியடிக்கப் படும்,’ எனச் சுற்றுப் புறத்திலுள்ள மக்கள் எண்ணிவிட்டார்கள். செஞ்சிக்கோட்டை மிக்க உறுதி வாய்ந்ததாய் மலை யுச்சியிற் கட்டப் பட்டிருந்தது. அதனால், முகலாயர் கருதியபடி கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை.

1690-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், மூன்று மராட்டியத் தலைவர்கள் 2000 குதிரைகளடங்கிய படையுடன் இராமராயருக்கு உதவியாய் வந்து கீழ்க்கோட்டையில் உள்ள சக்ரக் குளப் பகுதியில் முகலாயரை எதிர்க்கும் முயற்சியில் தீவிரமாய் இருந்தார்கள். அடுத்த ஆண்டு பிப்ரவரியில் இராமராயர் செஞ்சிக் கோட்டைக்குத் திரும்பி வந்து முகலாயரோடு நீண்ட காலம் போர் செய்தார். தஞ்சாவூர் அரசர், இராமராயரிடமிருந்து சில நாடுகளைப் பெற்றதனாலும், தான் அவருக்கு உறவினர் ஆதலாலும், பொன்னும், பொருளும், போர் வீரரும் செஞ்சிக்கு அனுப்பி முற்றுகைக் காலம் முழுவதும் உதவி புரிந்தார்.



‘முத்தலம் புகழும் செஞ்சி முது நகர்க்’ கோட்டையின் முற்றுகை எட்டு ஆண்டுவரையில் (1689-1697) நீடித் திருந்தமையால், தென்னிந்திய வரலாற்றில் இஃது ஒரு முக்கியமான சம்பவமாயிற்று. ஜனங்கள் அதை ஒட்டிய பல நிகழ்ச்சிகளையும் விவரங்களையும் பேசி வந்தார்கள். தவிர, தென்னாட்டில் முதன்முதல் முகலாயர்கள் பெரும்படையுடன் வந்து தங்கி ஒரு கோட்டையை நீண்டகாலம் முற்றுகையிட்டது ஒரு புதுமையாகும். முகல்படைகள் எட்டுவருடம் இப் பகுதியில் தங்கியிருந்தமையால், அவர்களுடைய பழக்க வழக்கம், நடையுடை பாவனை, முதலியவை மக்களிடை கவர்ச்சியை உண்டாக்கியதனோடு, அவர்களைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்ள வேண்டு மென்ற ஆர்வமும், மனக்கிளர்ச்சியும் மக்களுக்கு ஏற்பட்டன. மேற்கூறியவற்றால், செஞ்சிக் கோட்டையின் முற்றுகை அக்காலத்துமக்களுக்கு மிக்க பிரசித்தமாயிற்று. எங்கும், எப்போதும், எல்லாரிடையேயும் இதுவே பேச்சாய் இருந்தது. ஆகலின், நொண்டிநாடகத்தை இயற்றியவர், அப் பிரசித்தி வாய்ந்த நிகழ்ச்சியையும் சேர்த்து எழுதினால் தம் நூலுக்குப் பெருமையும், பலரும் விரும்பிப்படிக்கும் சிறப்பும் உண்டாகலாம் எனக் கருதினார்போலும்! இது பற்றியே அவர் நாடக பாத்திரமான நொண்டியைச் செஞ்சிக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிகிறது. ஆசிரியர் தமது நூலுக்குச் சிறப்புப் பெறக் கருதியது ஒரு புறமிருக்க, அக்காலத்திய சரித்திர ஆராய்ச்சிக்குரிய பயனுள்ள சில விஷயங்கள் இந் நூலினால் நமக்குக் கிடைப்பது பாராட்டிப் போற்றத் தக்கதே.

## நொண்டி நாடகம்

தமிழ் இலக்கணத்தில் பிரபந்தங்களுக்கு இலக்கணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, குறவஞ்சி நாடகத்தில் நாயகன்மீது காதல் கொண்ட ஒரு நாயகியின் வரலாறு கூறப்படும். அந்த நாயகன் அரசனாகவாவது, பிரபுவாகவாவது, தேவனாகவாவது இருக்கலாம். குறத்தி தோன்றி நாயகியின் கைரேகையைப் பார்த்து அவள்எண்ணம் நிறைவேறு மென்று குறி கூறிச் செல்வாள். இறுதியில் நாயகியின் எண்ணம் முற்றுப் பெற்று, கதையும் மங்களகரமாக முடியும்.

குற்றாலக் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி முதலியவை குறவஞ்சி நாடகத்துக்கு உதாரணங்களாகும்.

அதைப் போன்று நொண்டிநாடகத்துக்கும் ஒரு கதைப் போக்கு ஏற்பட்டுளது. அந் நாடகத்தில் நொண்டி ஒருவனே கதாபாத்திரன் ஆவான். அவன் பாடும் சந்தச்சீரும் அவன் பெயருக்கேற்றவாறு தடைபடுவதுபோல (விட்டிசைத்தல்) அமைந்திருக்கும்.

இவ்வகை நாடகத்தின் ஆசிரியர் காப்பும், கடவுள் வாழ்த்தும், பெரியார்வாழ்த்தும் முதலில் அமைப்பர். பின்னர், பாட்டுடைத் தலைவன்புகழ் பாடப்படும். கதாநாயகன் நொண்டி என்பதற்கு ஏற்றபடி களரியில் தோன்றுவான். தன் காமத் துயரைப் பற்றியும், மாதர் கூட்டுறவால் தனக்கு விளைந்த பொருட் கேட்டைப் பற்றியும், வறுமையைப் பற்றியும் கேட்பவர்மனங் கசியும்படி பாடுவான். அவன்வறுமை அவனைத் தீய வழியில் பொருள் தேடச் செய்கின்றது. அவன் ஒரு குதிரையைக் களவு செய்கிறான். களவு செய்கையில் பிடிபட்டுத் தன் காலும் கையும் துணிக்கப்படுகின்றான். கடைசியில் தெய்வசத்தியின் துணையால் இழந்த உறுப்புக்களை மீண்டும் பெறுகின்றான்.

பொதுவாக நொண்டி நாடகங்களெல்லாம் இம்முறையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், சிலவற்றில் தெய்வ சத்தியாலாகும் நிகழ்ச்சியைக் குறிக்கும் பகுதிகள் வேறுபடுகின்றன.

இவ்வகை நாடகம், இலக்கண வரம்புக்குட்பட்ட இலக்கியங்களுள் இடம் பெறவில்லையாயினும், கிராமத்தில் வசிப்பவர்க்கிடையே பெரிதும் பரவி வந்துளது. நொண்டிநாடகம் இனிய சந்தச் சுவையும் எளிதில் விளங்கும் சொற்களும் கொண்டிருத்தலால், யாவரும் கேட்டு மகிழக் கூடியது. இக் காலத்திலும் கிராமங்களில் இவ்வகை நாடகம் மூங்கிலாலும் தென்னங்கீற்றாலும் அமைத்த மேடையில் நடிக்கப் படுகின்றது.



நொண்டி நாடகம் ஒரு கேயப்பிரபந்தம் (இசைப்பாட்டு) ஆகும். இதிலுள்ள சிந்துகளெல்லாம் பாடுவதற்காகவே ஏற்பட்டவை. சந்தத்தின் அமைப்பு முதலிலாயினும், ஈற்றிலாயினும் சொற்கட்டுக்களின் மூலமாக விளக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சிந்திலும் நொண்டியான சீர், முதல்வரியிலாயினும், இரண்டாம்வரியிலாயினும், அல்லது ஈற்று வரியிலாயினும் காணப்படும். நொண்டிச்சீரின் காலஅளவிற்கு முந்தின சுரத்தின் இசையே பாடப்படும்.

நாட்டுமக்களுக்கு நொண்டி நாடகம் ஒரு உல்லாசமான பொழுதுபோக்கை அளிக்கும். மாலைவேளையிலோ, இரவிலோ, இனிய குரலுடைய ஒருவன் சபையோர்முன் நொண்டி-நாடகத்தை உற்சாகமாகப் பாடுவான். ஒரே வர்ணமெட்டில் பல சிந்துகள் பாடப்படினும், கதை சுவைமேம்பட அமைந்துள்ளதனால் சலிப்பில்லாமல் எல்லாரும் கேட்பார்கள். ஹாஸ்யச் சுவை கதையில் கலந்திருப்பதனாலும், சுருதி, தாள, பக்க மேளங்களுடன் சிந்துகள் பாடப்படுவதனாலும், நொண்டி நாடகம் கேட்பதற்கு இனிமையாக இருக்கும்.

சீதக்காதி நொண்டிநாடகத்தில் பூபாளம், நாதநாமக் கிரியை, மோகனம் என்னும் மூன்று ராகங்கள் காணப்படுகின்றன. இவை மனோரம்மியமான ராகங்கள். பாட்டுக்கள் ஆதி தாளத்தில் அமைக்கப்பட்டிருப்பது மிக்க பொருத்தமாகும். இந் நாடகத்தின் நூற்றெண்பத்தாறுவது கண்ணியில் தம்புரு, மத்தளம் முதலிய இசைக்கருவிகள் கூறப்பட்டிருக்கின்றன. இவை கவனிக்கத்தக்கவை.

செஞ்சிக்கோட்டை முற்றுகை வரலாற்றுடன் சேர்த்து அமைக்கப்பட்டுள்ள நொண்டிநாடகம், சீதக்காதியைப் பற்றியது. இதில் சீதக்காதியின் புகழை நொண்டி பாடுகிறான். இந்நூலை இயற்றியவர்பெயர் தெரியாவிடினும், இவர் புதிய முஸ்லிம் என்பது தெரிகிறது. இதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. இஸ்லாமியக் கலைப்பயிற்சி, நாகரிகம் முதலியவற்றை ஒரு சிறந்த முஸ்லிம் அறிவிப்பது போலச் செம்மையுற இவர் அறிவிக்கவில்லை. கடவுள்வாழ்த்து, திருநபி

யவர்களின் துதி இவற்றுக்குப் பின்னர், பெரியார்களைப் போற்றும் வரிசையில், கலீபா உமறு அவர்களைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள விவரங்கள், சரித்திரத்துடன் பொருந்துவனவாயில்லை. கலீபா உமறு அவர்கள், முறை தவறி நடந்த தம் மகனையும் தம் சிறிய தந்தையையும் வதைத்தார் என்று சொல்லியிருக்கின்றார். ஆனால், அவ்வாறு சொல்லியவர், அவர்கள் அத்தகைய கொடூரமான தண்டனையை அடைவதற்குச் செய்த குற்றம் இன்னதென்பதைக் குறிப்பிடவில்லை. சரித்திரத்தில், கலீபா உமறு அவர்கள் எவருக்கும் அவ்வாறு தண்டனை விதித்ததாகச் சொல்லப்படவில்லை. எனினும், கட்குடி முதலிய ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்தவர்களுக்கு மார்க்கசட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள தண்டனையை அளிப்பதில் அவர் எள்ளளவும் பின்வாங்குவதில்லை. அக் கலீபாவினால், இஸ்லாமிய ராஜ்யத்தில் ஆங்காங்கு மாகாணக் கவர்னர்களாய் நியமிக்கப்பட்டிருந்தவர்களும் மதுபானம் செய்த காரணத்தினால் கவர்னர்கள் பதவியினின்றும் நீக்கப்பட்டிருக்கின்றார்கள். தம் மகனும், உரிமைத் தோழர்களும் சாராயம் குடித்ததற்காகச் சவுக்கடி பெறவேண்டுமென்று கட்டளையிடக் கலீபா சற்றும் தயங்கவில்லை. ஒருவாறு சவுக்கடியால் மகனார் இறந்துவிட்டதாகக் கருதி நூல்ஆசிரியர் குறிப்பிட்டிருக்கவுங் கூடும்.

மேலும், அபூபக்கர், உதுமான், அலியென்னும் கலீபாக்களைப் போற்றிப் புகழும் வரிசையில் கூறப்பட்டுள்ளவை இஸ்லாத்திற் பிறந்து வளர்ந்து, மரபறிந்த ஒரு புலவர் சொல்லும் வகையில் அமைக்கப்படவில்லை. இந்து மதம், கலைப்பயிற்சி, நாகரிகம் முதலியவற்றோடு சம்பந்தப்பட்ட செய்திகளைக் கூறும்போது, அவை கற்றறிந்த தமிழ்ப் புலவர் எழுதுகிற முறையிற் காணப்படுகிறது. ஆதலின் இந் நூலாசிரியர் இஸ்லாம் மதத்தைத் தழுவு முன்னர், இந்துமத நூல்களில் மிக்க பயிற்சி பெற்றவர் என்பது ஆங்காங்குள்ள சொற்பிரயோகங்களாலும், உவமைகளாலும் விளங்குகிறது.

கடவுள்வாழ்த்தும், பெரியார்வணக்கமும், குருவணக்கமும் தொடக்கத்திற் செய்து நூலை எழுதுவது தமிழ்மரபு. இதைப் பின்பற்றியே பண்டைத் தமிழ்முஸ்லிம் புலவர்களும்



தங்கள் நூலை இயற்றிவந்திருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் இந்துநூல்களிற் கண்ட கருத்துக்களைக் கையாண்டார்கள். ஆனால், இக்கால முஸ்லிம்புலவர்களிடையே இம் முறைகளைக் காண்பது அரிதாயுளது.

இந்த நாடகத்தில் காணப்படும் நொண்டி, ஈமான்கொண்டு இஸ்லாத்தைத் தழுவி ஹஜ்யாத்திரை செய்து மதினா சென்று அங்குத் தூங்கி யெழுந்ததும், வெட்டப்பட்ட கை கால்கள் வளர்ந்தன என்று சொல்கிறான். தென்னிந்தியாவில் தொன்றுதொட்டு இஸ்லாமியப்பிரசாரம் சமாதான முறையிலேயே, கற்றுமுதிர்ந்த பெரியோர்களால் செய்யப்பட்டு வந்தது; அங்ஙனம் எவ்விதப் பலவந்தமும் இல்லாமல் மார்க்கத்திற் சேர்ந்தவர்கள் நன்னெறி பூண்டு தம் வாழ்நாளைக் கழித்ததுமல்லாமல், சாத்விக முறையிலேயே மார்க்கத்தைப் பரவச் செய்துவந்திருக்கிறார்கள். நூல்கள்மூலமாகவும் அப் பிரசாரம் நடந்தது என்பதற்கு இந்தச் 'செய்தக்காதி நொண்டி நாடகம்' என்ற நூலே சான்றாகும். ஏனெனில், இஸ்லாத்தைத் தழுவுவதனால் உண்டாகும் அதிசயநன்மைகள் இதிற் கூறப்படுகின்றன. ஆகவே, இதை ஓர் இஸ்லாமியப் பிரசார நூல் எனக் கொள்ளுவதற்கு இடமிருக்கிறது.

## நொண்டி கூறும் வரலாறு

நான் அழகர் மலைக் கள்வன். என் பெயர் ஒடுங்காப்புலி என்பது. என் தந்தை, 'கல்லாவிற் பால் கறப்போன்'. அவன்பெயர் வணங்காப்புலி என்பது. நான் குலவித்தைகள் பலவற்றையும் வகையாய்த் தெரிந்தபின்பு, சொக்கரைச் சேவிக்க மதுரை சென்றேன். அங்கு ஒரு தாசிவலையி லகப்பட்டு, இருந்த பொருளையெல்லாம் பறிகொடுத்தேன். பின்னர் அவள் 'சின்னச் சிறை' வேணுமெனச் சொன்னாள். அதற்குடன்பட்டு, மதுரையைவிட்டு வெளியேறித் திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி என்னும் ஊர்களைக் கடந்து சீரங்கம் சென்றேன். அங்கு வேறொரு கள்ளனும் வந்து சேர்ந்தான். இருவரும் கூடிப் பேசினோம். நான் ஒரு தாசிவீட்டில் நுழைந்து, அவள் தூங்கும்போது அவள்நகைகளையெல்லாம் கழற்றிக்

கொண்டு ஓடி வந்தேன் ; பிறகு மற்றொரு கள்ளனையும் மயக்கி ஏமாற்றி விட்டு, கண்ணனூர் வழியாகச் செஞ்சிக்கோட்டைக்குச் சென்றேன்.

அச் சமயம், முகலாயப் பேரரசர் அவ்ரங்குசேபு உத்தரவுப் படி துல்பகார்கான், இஸ்மாயீல்கான் முதலிய புகழ் பெற்ற படைத்தலைவர்களின்கீழ் முகலாயச்சேனை அக்கோட்டையை முற்றுகையிட்டு முன்னேறிக்கொண்டிருந்தது. மேருமலையும் கண்டு மருளும் அப்படைகளுக்கு முன்நிற்பவர் எவருமில்லை. வேலூர், வந்தவாசி என்னும் இடங்கள் அடிபணிந்தன. சந்தாவைரோஜி கோர்ப்பரே என்பவர் தலைமை தாங்கி நடத்திய மராட்டியசேனையும் புறமுதுகு காட்டி ஓடியது. இவ்வாறு வாகை சூடிய முகலாயப்படை முன்னேறிச் சென்று செஞ்சிக் கோட்டையைச் சுற்றித் தங்கியது.

தென்னாட்டுக்கு முகலாயச்சேனை முதன்முறையாக இப்போதுதான் வந்தது. பேச்சறியாத்துலுக்கருடைய சேனையின் வலிமையையும் பெருமையையும்பற்றித் தென்னாட்டினர் கேள்விப்பட்டிருந்தனர். அதனால், அவர்களுக்குப் பயம் உண்டாயிற்று. அவர்கள், தங்கள் வீடுவாசல்களை விட்டு ஓடிக் காடுகளில் ஒளிந்தார்கள் ; சொந்தமாயிருந்த சொத்துக்களையும் பொருட்படுத்தாது விட்டுவிட்டு வேற்றூர்களுக்குச் சென்றார்கள். பலர் குழந்தைகுட்டிகளையும் பரிதவிக்க விட்டு உயிர்தப்பினர். எங்கும் ஒரே அச்சம் நிறைந்திருந்தது. ஊர்களெல்லாம் பாழாயின; வாழ்க்கையின் சின்னங்கள் மறைந்தன; வீடுகள் வெற்று மனைகளாயின.

இவ்வாறு பாழ்பட்ட வீடுஒன்றில் நான் புலியின் குகையில் எலி நுழைவது போல நுழைந்து பார்த்தேன். எனக்குப் பொருள் ஒன்றும் அகப்படவில்லை. துல்பகார்கான்பாளையத்தில் ஒருகுதிரையைத் திருடவேண்டும் என்னும் ஆசையால் ஒரு துடுக்கான எண்ணம் உண்டாயிற்று. ஒரு பிச்சைக்காரனைப் போல வேடம் தரித்துக் கொண்டு பாளையத்துக்குள் சென்றேன். கூடாரவாயிலில் பல பக்கிரிகள் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு என் வணக்



கத்தைத் தெரிவிக்கவே, அவர்கள் மனம் மகிழ்ந்து, கறிகளும் ரொட்டிகளும் அவரவர் கையார மெய்வழக்கம் செய்தார்கள். நானும் வயிறு புடைக்கத் தின்று, பின்பு கூசாமல் வங்கிப்புகையும் பிடித்தேன். உண்ட மயக்கத்தால் பொழுது சாயும்மட்டும் உறங்கினேன். இரவிலும் எனக்கு நல்ல உணவு கிடைத்தது.

மறுநாள், பாளையத்தில் உள்ள பல விஷயங்களையும் அறிந்துகொண்டேன். குதிரைப் பாஷையும் தெரிந்து கொண்டேன். இவ்வாறு பதினைந்துநாட்கள் கழிந்த பின்னர், அமாவாசையிருட்டில், பாளையக்காரரெல்லாரும் ஆழ்ந்ததூக்கத்திலிருக்கும் சமயம் பார்த்து, மாயமாய் ஒண்டி ஒண்டிப்போய், மரகதமலைதனையே உருச்செய்து வைத்துக் கடைந்தெடுத்த சித்திரம் போன்ற குதிரையொன்றைத் திருடி மெள்ள வெளியேறிக் கொண்டிருந்தேன்.

அப்போது என் தலைவிதிவசமாகச் சோணங்கி நாயொன்று குரைத்தது. உடனே காவற்காரர்கள் விழித்துக் குதிரையைத் தேடிக்கொண்டு சுற்றுமுற்றும் ஓடினார்கள். ஆபத்து வந்ததென்று எண்ணி உடனே தண்ணீர் எடுக்கும் தோற்பைக்குள் நுழைந்து ஒளிந்துகொண்டேன். காவலாளிகளோ, பந்தமும் தீவட்டியும் கொண்டு வெகு சுறுசுறுப்பாகத் தேடலானார்கள். துருத்திக்குள்ளிருப்பது பாதுகாப்பன்று என்று தோன்றவே, நான் விறகுக்கட்டுக்களின் நடுவே போய்ப் பதுங்கினேன். அப்போது என்னைத் தேள் கொட்டியது. வலி பொறுக்கமுடியவில்லை ; புத்தியோ தடுமாறியது ; கண்ணீர் பெருகியது ; ஆனால், வாய்விட்டு அழமுடியுமா? 'பாப்பாத்தி உப்புக்கண்டம் போக்கடித்த ஒப்புப் போலே! வாய்விட்டு யாதும் சொல்லமுடியாத நிலையில் வருந்தினேன். தேள் கொட்டினால் உட்கொள்ளக் கூடிய மருந்து என்னிடமிருந்துங்கூட உட்கொள்ள எனக்குப் புத்தி தோன்றவில்லை ; அவ்வளவு மனக்கலக்கம் எனக்கு உண்டாயிற்று.

காவலாளிகள் அவ்விடத்திற்கும் வந்துவிடுவார்கள் என்று அஞ்சி வேறொரு பக்கத்திற்கு உருண்டு சென்றேன்.

நெருஞ்சில்முள் உடம்புமுழுவதும் குத்தினது. அதையும் பொறுத்துக்கொண்டு உருண்டு செல்லும்பொழுது ஒரு சேற்றுக்குழியில் திடீரென்று சொதுக்கென விழுந்தேன். அங்குத் துலைக்குழிக்கழுதைபோற் கிடந்தேன்.

நான் விழுந்த சத்தத்தைக் கேட்ட காவலாளிகள் என்னைச் சூழ்ந்தார்கள்; பலவாறு திட்டினார்கள். பின்னர் நான் சேற்றுக்குழியினின்றும் தூக்கிவிடப்பட்டேன். என் உடலை நான் கழுவிக்கொண்டபின்னர்க் காவலாளிகள் என்னைத் தலையாரிமுன் கொண்டுபோனார்கள்; அத் தலையாரியின் கட்டளைப்படி சுந்தர மகராயன் துரையின் சமுகத்துக்கென்னை அழைத்துச்சென்றார்கள். நான் செய்த குற்றத்திற்கு என் கால் கைகள் துணிக்கப்படவேண்டுமென்னும் தண்டனை எனக்கு விதிக்கப்பட்டது. என்னைப் பலவித அவமானத்துக்காளாக்கினார்கள். பின்னர், என் கை கால்கள் துணிக்கப்பட்டன. ஆக்கினைக் களரிக்குள்ளே அயர்ந்து களை தாங்கி மூச்சொடுங்கி, நாக்கொடு வாய் குழறி நடுங்கிப் பதைபதைத் தொடுங்கிவிட்டேன்.

அச்சமயம், என்னைப் பலரும் பார்க்க வந்தனர். அவர்களுள் விசயரகுநாதப் பெரியதம்பியின் இளைய சகோதரர் 'மந்தரத்திண்புயத்தான் கனதுரை மாமு நயினார்ப் பிள்ளை' யும் ஒருவர். அவர் சென்னபட்டினத்திலிருந்து அங்கு வந்திருந்தார். அவர் எனது வரலாற்றைக் கேட்டு மனமிரங்கி வைத்தியச்செலவுக்குப் பொருள் கொடுத்து உதவியது மன்றி, சுகமடைந்தபின் கீழக்கரைக்கு வந்தால் என் வறுமை தீரும் என்று சொன்னார்.

சில நாட்களுக்குள் என் உடலிலிருந்த காயங்கள் ஆறின. மாமு நயினார்ப்பிள்ளை கொடுத்த பணத்தைக் கொண்டு ஒரு குதிரை வாங்கி, அதன்மீதேறிக் கீழக்கரைக்குப் பிரயாண மாகி அவ்வூருக்கருகில் செல்லும்போது சிங்காரத்தோப்பு, ஏகாந்தர் மடம், பள்ளிவாசல் முதலியன கம்பீரமாகக் காட்சியளித்தன. பின்னர், விசய ரகுநாதப் பெரியதம்பியின் வீட்டை அடைந்தேன். செஞ்சியில் என்னை ஆதரித்த மாமு நயினார்ப்பிள்ளை



அங்கிருக்கக் கண்டவுடன் என் மனம் பூரித்தது. பின்னர்ச் சீதக்காதி மரக்காயர்சமுகத்தில் நான் கொண்டுபோய் விடப்பட்டேன்.

அப்போது, 'கானுலாவிய கொடையான் செய்தக்காதி' கொலுவீற்றிருந்தார். மீராப்பிள்ளை மரக்காயர், குட்டியாலிப் பிள்ளை, மாமு நயினார்ப்பிள்ளை, சேகுக்கன்று முதலிய சுற்றத்தினர் அவரைச் சூழ்ந்திருந்தனர். அங்குச் சந்த முத்தமிழ் தேறுங் கல்வித் தலைவர் மகிழ் உமறுப்புலவரும் செந்தமிழ்க் கந்தசாமிப் புலவரும் இருந்தனர். கரணிகர் வாய் புதைத்துக் காரியஞ் சொல்ல, வர்த்தகர் உத்தரஞ் சொல்ல, குச்சலியர் நகைகள் கொண்டுவந்து தெண்டனிட்டுக் கண்டு வணங்க, மத்தளம் முழங்க, தாள மியங்க, தம்பூருவாத்தியங்கள் கொண்டு பலர் கீர்த்தனம் பாட, முதுதமிழ்க் கவிராசர் பத மிசைக்க, சங்கநிதி பதுமநிதி போல நிதிவாரிச் சடையாமல் இருகையுங் கொடுக்க, சிறந்த சிங்காசனமொன்றில் செய்தக்காதி சிலைமதனைப்போலக் கொலுவீற்றிருந்தார்.

இவற்றையெலாம் பார்த்த யான், அடைக்கலங்காத்த பெருமான், மன்னவர்க்கரசு நிலைநிறுத்துஞ் செய்தக்காதிக்குத் தண்டனிட்டு வணங்கி நின்றேன். அவர் பண்டு பழகினவர் போல் அடியேன் கிலேசம் நீங்க நல்வாசகஞ் சொன்னதுடன் என்னை முஸ்லிம் ஆக்கக் கருதி, என் கையில் ஆயிரம் பொன் கொடுத்தார். நானும், பேரான ஸதக்கத்துல்லா முன்பாகப் பேதமில்லாக் கலிமா ஓதினேன். பின்னர் 'ஹஜ்' செய்யும்படி எனக்குச் சொல்லினர். நானும் ஸதக்கத்துல்லாவுடன் 'சலாம்' சொல்லிக்கொண்டு, 'சற்குண நிதியனையான் செய்தக்காதி தாமரைத்தாளுக்கும் சலாம் உரைத்து,' மக்காவுக்குப் பிரயாணமானேன்.

கடற்றுறைவழியே சென்று கடந்து, இறங்கி, மக்காவும் கஃபத்துல்லாவுங் கண்டேன். அங்கு லெப்பைமார், சறீபுகள், அறபிகள், சைய்யிதுகள், ஷைகுகள், மோதின்கள் பலருங் கூடியிருந்தனர். அவர்களுக்கு என் வணக்கத்தைச் செலுத்தியபடியே அடியேன் மேலோனைத் தொழு தொருபா விருந்

தேன். மதீனுநகரம் சென்று அவ்வாறே, மேலோனைத் தொழுது, பின்னர் வரிசைநபி முகம்மது றசூலுல்லாவைப் போற்றித் தோத்திரம் செய்து, என் குறைக்கு இரங்கித் துவா ஓதியதும் புத்திமயங்கி நித்திரை செய்தேன். இறைவன் அருளால் எனது வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டு எனக்கு முன்னிருந்த கை கால்கள் வளர்ந்திருந்தன. இவ்வாறு நம்பிக் கையுடன் ஈமான் கொண்ட பலன் கைமேல் கிடைத்தது. என் மேன்மைக்குக் காரணமாயிருந்த காயலின் மகராசன் செய்தக் காதியை வணங்க அவரிருக்கும் திசைநோக்கிக் கையெடுத் தேன்; தாயென உபசரித்த மாமு நயினார்ப்பிள்ளையை நினைந்தே தாழ்ச்சி செய்தேன். எதை மறந்தாலும் ஒருவர்செய்த நன் மையை மறக்கலாமோ!

சென்னை
15-4-53 } S. முஹம்மது ஹுஸைன் நயினார்

## BIBLIOGRAPHY

*al-Faruq*, Shamsul-Ulama Shibli Numani

English Introduction to *Seydak-kadi Nondi Natakam* Edited by Dr. S. M. H. Nainar, *Annals of Oriental Research*, Vol. IV, Part I, 1939. Madras University.

*History of Awrangzeb*, Vol. V. Jadunath Sarkar

*History of the Nayaks of Madura*, R. Sathianathaiyar

*Madras Diary and Consultation Book*, 1689, 1690.

*Muntakhab-al-Lubāb*, Khāfi Khān.

*Peruntokai*, Rao Sahib M. Raghava Aiyangar.

*Ramnad Manual.*

*South Arcot District Gazetteer, Vol. I.*

*South Arcot District Manual.*

*The Journal of Oriental Research*, Vol. III. P. T. Srinivasa Aiyangar.

# செய்தக்காதி நொண்டி நாடகம்[1]

## காப்பு

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

கார்கொண்ட கரதலத்தான் வகுதைச் செய்தக்
காதி[2]மனு நீதிமன்னன் புகழ்கொண் டாடச்
சீர்கொண்ட முழுமதுரச் செழுஞ்சொற் பாவாற்
சிறக்குநொண்டி நாடகத்தைத் தெரிந்து பாட
நேர்கொண்ட கரிய கொண்டல் கவித்த கோலின்
நிழல்கொண்ட முத்தொளிவை நீதி வாழ்வை
ஏர்கொண்ட தோழமைக்கொண் டவனே காப்பன்
எம்பிரா னெவ்வுயிர்க்குந் தம்பி ரானே.

## கடவுள் வணக்கம்

தரு: இராகம்: பூபாளத்தோங்கல்: தாளம்: ஆதி

1 திருவு லாவிய வகுதை நகர்வரு
கருணை வாருதி தருமகு ணநிதிச்
செய்தக் காதியென் றெந்தக் காமினி
யே.........கொண் டாடிடவே
உருவ மேயெனி லருவ மலனல
வருவ மேயெனில் அருவ மலனெனும்
ஒருவ னேதுணை ஒருவ னேதுணை
யே.........என் நாயகனே.

## நபிநாயகம்° வணக்கம்

2 நகுல னென்கிற சுகில னெண் கொடை
முகிலெ னுங்கரன் பெரிய தம்பி°
னாதிபன் செய்தக் காதி தன்புக
ழே.........கொண் டாடிடவே
முகில்க விந்திடு கவிகை கொண்டருள்
°முகம்ம தென்றிடு நபி*ச ரண்களை
முழுது மன்பொடு தொழுதி றைஞ்சுவ
னே.........எங் நாயகனே,

## அபூபக்று° வணக்கம்

3 காவிற் புதுமலர் வாவிக் கரைகயல்
தாவிக் குலவிய காயற் றுரை செய்தக்
காதிக் கினியசொல் லோதித் துதிசெய
வே.........கொண் டாடிடவே
பூவிற் றிருமகள் போலத் தருமக
ளாரை[3]த் திருநபி நாதர்க் குதவும
பூபக் கரையிசை நாவி னிற்புகழ்
வே.........னெங் நாயகனே,

## உமறு கத்தாப்° வணக்கம்

4 தருவி சயரகு நாத பெரிய
தம்பி° யையபிய லிசைக ளாகவே
தருசெ ழுந்தமி ழுதனி லன்பொடு
தான்.........கொண் டாடிடவே



அருமை மகனொடு தாதைக் கிழவனை
முறைமை தவறின தாலெ வெட்டிய[4]
வரசரு மறையென் னுவி னிற்புகழ்
வே.........னெங் நாயகனே.

## உதுமான்° வணக்கம்

5 திக்கி லெழுபா ருக்குள் வளர்கா
ரிக்குள் வளர்பூ ரிக்க மால்கிகர்
செய்தக் காதியென் றெய்தக் காமனை
யே.........கொண் டாடிடவே
மிக்க மறைநூ லைத்தி ரட்டினோர்*
தக்க விசுலா மிற்ற லைமைசெய்
வெற்றி சேருது மானை யும்புகழ்
வே.........னெங் நாயகனே.

## அலி° வணக்கம்

6 காயல் நகரன் பாய குலனு
பாய னெமதுச காய னுயர் செய்தக்
காதிக் கினியசொல் லோதித் துதிசெய
வே.........கொண் டாடிடவே
வாயு வெனுமதி வேக மார்துல்துல்*
வான்ப ரியொரு வாளு* முடையவர்
வலிமை கொண்டிடு மலிசா ண்டுவினை
யே.........யெங் நாயகனே.

## ஹஸன் ஹுஸைன்° வணக்கம்

7 அதிக குணவான் மதுர மொழியர்கள்
அழகு தருமத வேள்வி சயனே
யான ரகுநாத பெரிய தம்பியை
யன்பிற்.........கொண் டாடிடவே
மதின நகர்வாழ் புலியலி யருள்
மைந்த ரெனவரு மசனை யுசைனையென்
மனதி லன்பொடு தொழுதி றைஞ்சுவ
னே.........யென் நாயகனே.

## முஹியித்தீன்° வணக்கம்

8 மருமலர்ப்புசன் றரும சற்குண
வள்ள் லாகிய தெள்ளு மாமணி
வகுதை யூர்செய்தக் காதி மன்புகழ்
வாழ்த்திக் கொண் டாடிடவே
குருவி னுத்தம சருவ சற்சனக்
கோன்மு கியித் தீன்ச ரணகளைக்
குறியி னேடுகண் சிரசில் வைத்துக்கொண்
டே.........னென் நாயகனே.

---

## தொண்டியின் சிறப்பு

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

தன்மமும் பொறையுங் கொண்ட சற்குண னிதிபோல் வந்த
மன்மதன் வச்ர நாடன் வகுதைவாழ் செய்தக் காதி
பொன்மகள் கீர்த்த மாடப் பூமகள் புகழ்கொண் டாட
நன்மைசேர் கொலுவி னெண்டி நயத்தொடுந் தோன்றி னானே.



### தரு—இராகம்: மோகனம்—தாளம்: ஆதி

1 இந்நி லம்புகழ்ப்ர தாபன் விசய
இரகுநாத பெரிய தம்பி மகிபன்
கன்னவு தாரனையன் புகழ்பாடி கொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே

2 அந்தமார் சருபக் து*ங்கட்டி மெய்யி
லகலாத்து*ச் சகலாத்து* டகலாவுங் கட்டிக்
கந்தக்குப் பாயமுங் கட்டி கொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே

3 பரிசையொடு பெரியகத்தி கொண்டு கொண்டி
பாசிப் பருவமுள்ள மீசையுந் திருத்திக்
கருதலர் வாயடங்கக குத்தி கொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே

4 கண்ணாடி போற்பரிசை பதித்து கொண்டி
கால்வீசி வட்டமிட்டு மேன்மீசை யுந்திருத்தி
சுண்ணாம்புக் கல்லுப்பல்லுக் காட்டி கொண்டி
தொந்தோமென்றாடிக் கொள்ளத் துசங்கட்டி னானே

5 மெய்யிற்குங் குமவாடை பூசி கொண்டி
விருதான வழிக்கெல்லாம் மகத்துவம் பேசி
கையிற்குஞ் சமுமெடுத்து வீசி கொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே

6 புதுமலர்க்குங் குமத்தார் சூடி யருள்கொடைப்
பேர்சன் செய்தக்காதி புகழைக் கொண்டாடிக்
கதையொடு காவியங் கள்பாடி கொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே

7 ஆலித்த வீரதண்டை கட்டி நொண்டி
யதற் கண்டையிற் பலகறை வெண்டய முங்கட்டிக்
காலுக்குப் பணையமுங் கட்டி நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே

8 ஆணைமாறாட்டஞ் செய்யுந் தீரன் இசுலா
மானவ*ர்க் கெல்லாமொரு வருமைக் குமாரன்
கானிறை குங்குமப் பூந்தாரன் நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே

9 குபிரான* நொண்டிகளை நகுவேன் என்றும்
கோதற்ற தீனவர்கள்* பாதத்திற் புகுவேன்
அபிராம மற்றுநெறி பறைவேன் நசு
றாணிகள்* மார்பில்முளை யாணிக ளறைவேன்

10 வாதாடும் பேர்களைத் தடுப்பேன் எதிர்
மாற்றலர் மூக்கிற்றும்பைச் சாற்றையே விடுப்பேன்
வேதாந்த குருவைக்கை யெடுப்பேன் கள்ள
விச்சைக்குப் பத்திரட்டிப் பிச்சையுங் கொடுப்பேன்

11 வல்லாண்மை மந்த்ரவித்தைக் குள்ளன் எங்கும்
வலைபுகுந்த நரிபோல வந்திருக்கு முள்ளன்
கல்லிலே நாருரிக்குங் கள்ளன் நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே

12 எத்தலமு மெச்சுபிர சண்டன் வீர
தீரர்பட் டாணிகள்* ராவுத்தர்* கண்டன்
கர்த்தனைத் தொழுவோர்க்குத் தொண்டன் நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே



13 தேச மெழுகடலுஞ் செல்வேன் என்றுந்
திண்டுமுண்டு கொண்ட நொண்டிகளைக் கொல்வேன்
பாச மறுசமயம் வெல்வேன் செல்வப்
பார்த்திபன் செய்தக்காதி கீர்த்தியைச் சொல்வேன்

14 கன்னன் செய்தக்காதி புகழ்துதிப்பேன் அவன்
காலைக் கும்பிடாரை நொண்டிக்காலினா லுதைப்பேன்
என்னைவணங் கினபேரைத் துதிப்பேன் விரு
திட்டுச்சண்டை யிடுவார்மு னெட்டிக் குதிப்பேன்.

---

தனதன தனன—தான—தானன தானன தத்தன

## நொண்டியின் வரலாறு

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்

உரைப்பரும் தமிழ்ப்பா வாணர் உரையையுங் காத்து நீண்ட
திருப்பெரும் புவனங் காத்துத் தீனவர் குலமுங் காத்த
வரைப்பெரும் புயத்தன் காயல் மன்னவன் செய்தக் காதி
துரைப்பெருஞ் செல்வம் பாடித் துதித்திடு நொண்டி நானே.

தரு—இராகம்—நாதநாமக்கிரியை—தாளம்—ஆதி

15 மாலைக்க றுப்பழ கர்சொக்கர்○
மச்சின னாகிய அச்சுதவேள்
சோலைக்கிரி தனி லேகன்னத்
துங்கனெனுஞ்சேமன் வங்கிசத்தில்○

16 இல்வாழ்க்கைகொண்டபி ரான்கள்ளர்க்
கெல்லாந்தலைமைசெய் வல்லாளன்
கல்லாவிற்பால்கறப் போன்வணங்
காப்புலிசேயொடுங் காப்புலிநான்

17 நானாவிதக்கள வுமாய
நஞ்சங்களாகிய வஞ்சனையு
மானாபரன்சே மன்கற்று
வைத்துப்பதுக்கிய புத்தகமும்

18 அகலாத வித்தையெல் லாம்படித்
தாளானேனா னெல்லாக் கோளாறும்
வகையாய்த்தெரிந்தபின்பு நம்மை
வாழ்விக்குஞ்சொக்கரைச் சேவிக்கவே

19 வேணுமெனக்கரு தித்தமிழ்
மீனவன்கூடலி°ற் போனபின்பு
தாணுதிரியம்பக னே நீதான்
தம்பமென்றேகொடிக் கம்பமுன்னே

20 முன்னோனைத் தெண்டனிட் டேனந்த
மூவர்பிரான்° கோயிற் றேவடியாள்
பொன்னாரும் பூண்முலை யாள்கஞ்சப்
போதலர்சண்பகக் கோதையுடன்

21 கோதையபிராமி முத்துக்
குங்குமக் கோதையாள் சங்குமுத்துச்
சீதைசிவகாமி பொன்னின்
சின்னச்சவுந்தரி யன்னமுத்து

22 முத்துமாலை மீனாட்சியவள்
முன்னடந்தாள்நான் பின்னடந்தேன்
கத்தூரிவாணுதலா ளென்னைக்
கண்டாள்திருமணி மண்டபத்தில்



23 பத்திசேருந் தூணருகே நின்று
பார்த்தா ணமக்கிவள் வாய்த்தாளென்றே
கொத்துலாவும் பூங்குழ லாளந்தக்
குங்குமக் கோதைம ருங்கிற்சென்றேன்

24 சென்றேனைக் கைப்பிடித் தாளெந்தத்
தேசமு மக்கென்று பேசிக்கொண்டாள்
நன்றாச் செனமகிழ்ந்தேயென் தன்
நாட்டைச் சொன்னேன்வாரும் வீட்டுக்கென்றாள்

25 என்றா ளருந்துமென் றாள்கையி
லாகுந்தந் தாளிலைப் பாகுந்தந்தாள்
மன்றா ரறிந்திட வேயிறு
மாப்புட னேமனை போய்ப்புகுந்தேன்

26 புகுந்தேனை யாதரித் தாள்தங்கள்
பூருவசி நேகம் போல் சோறுந்தந்தாள்
மிகுந்த பரிமளமு முடல்
மீதினிற் பூசச் சவ் வாதுந்தந்தாள்

27 தாளத்து ணைமுலை யாள்வாயிற்
றம்பலந் தந்தாள்க ரும்பது போல்
அருமைய தென் சொலு வேன்குளி
ராட்டிக் கொண் டேமச்சு வீட்டிற்சென்றேன்

28 வீட்டிற் பரிமளமுங் கட்டின்
மெத்தையுஞ் சுற்றினிற் சித்திரமும்
பூட்டுந்தி ரைத்துகி லுஞ் சொக்கப்
பொற்கட்டி யாற்கட்டு மேற்கட்டியும்

29 கட்டுவி தானங்க ளுமெல்லாங்
கண்டிருந் தேன் மனங் கொண்டிருந்தேன்
பட்டுர விக்கைக் குள்ளேவைத்த
பச்சிள நீர்தந்தா ளுச்சிதமாய்

30 உச்சின கம் பதித் தேயித
முண்டுகொண் டேன்சுகம் கண்டுகொண்டேன்
மெச்சிச்ச பாசென வேகட்டி
மேவிக்கொண்டாள் குரற் கூவிக்கொண்டாள்

31 கொண்டாடி முத்தமிட் டாள் மிகக்
கொஞ்சிச் சரசத்தின் மிஞ்சிக் கொண்டாள்
கண்டாசை கொண்டவர் போலெனைக்
கைகலந்தாளதின் மெய்ம்மறந்தேன்

32 மெய்வேர்வை மாறுமுன்னே பாக்கு
வெற்றிலையும் புகைச் சுற்றுந் தந்தாள்
கைவேர்வையும் மருந்தும் பல
காரத்துடன் கூட்டிச் சேரத்தந்தாள்

33 தந்தம ருந்தாலேமிகத்
தள்ளாடித் தள்ளாடி யுள்ளாகிச்
சிந்தை தடுமா றியொட்டுச்
சிட்டுப்போல் நானகப் பட்டுக் கொண்டேன்

34 கொண்ட பயல்போ லக்கூடற்
கொங்கையுள் வைத்தெனைச் சிங்கிக்கொண்டாள்
உண்ட மருந்தா லேகையி
லுள்ள தெல்லாங் கள்ளி கொள்ளை கொண்டாள்



35 கொள்ளைகொ டுத்தவர்போல் நானுங்
கோப்புக்கெட் டேனொடுங் காப்புலிநான்
தள்ளத் தள்ளத் திரிந்தே னவள்
தாய்ப்புலிக் குள்ளானேன் ஈப்புலி போல்

36 புலிபோல வீறிடு வாள் வாடா
போருக்கென்பாள் போடா வூருக்கென்பாள்
கலியோ விதிப்படி யோ சொக்கர்
கற்பனை யோமாமி சற்பனையோ

37 சர்ப்பமுங் கீரியும்போல் மாமி
சன்னமிட்டா ளுரிற் கன்னமிட்டேன்
பொற்பூ டணம்புடவை கண்ட
பொன்னையெல்லாங் கொண்டு முன்னார்வைத்தேன்

38 வைத்தேன் மனங்குளிர வெறு
வாய்க்கிலையுங் கெட்ட தாய்க்கிழவி
அத்தை வகைக்காரி பின்னு
மாதரித்தாளதி லேதரித்தேன்

39 தரித்தே னொருமாத மங்கு
சஞ்சரித் தேன்வல்லி பஞ்சரித்தாள்
சிரித்தே முகம்பார்த்தா ளொரு
சின்னச் சிறைவேண்டு மென்னச்சொன்னாள்

40 சொன்ன வயணமெல்லா மவன்
தேர்த்திரமாச்சொன்ன மாத்திரத்தே
பொன்னேம டமயிலே மிதோ
போறேன் சிறைகொடு வாரே னென் றேன்

41 கொண்டுவாரே னென்றெழுந்தேன் மயில்
கூச்செறிந்தாள் பெரு மூச்செறிந்தாள்
பெண்டுபோலக் கண்ணீர் சொரிந்தா ளென்மேற்
பேதலித்தாள் மனங் காதலித்தாள்

42 காதல் கொண்டாரெனவே யென்னைக்
கட்டிச் சிணுங்கிக்கும் பிட்டுக்கொண்டாள்
பேதைமு கம்வாடி யொரு
பேச்சும்விட்டாள் பெரு மூச்சும் விட்டாள்

43 தொழுது கடன்கழித் தாளவள்
தோத்திர மாகின்ற மாத்திரத்தே
பொழுது விடிந்தது பின்னீரும்
போய்வாரு மென்றவள் தாயுஞ் சொன்னாள்

44 சொன்னபடி துணிந்தே யீசர்
சொக்கரையும் பணிந் தக்கணமே
பின்னற் கருங்குழலா ளாசை
பின்னிழுக்க விதி முன்னிழுக்க

45 இழுக்கொன்றும் பாராமற் காக
மேவினதுங் குயிற் கூவினது
மொழுக்க மென்றேநினைந்தே சென்றே
ஒல்லைவிட்டே திண்டுக் கல்லில்° வந்தேன்

46 வந்தேன் கடைத்தெரு விலங்கு
வங்கணமாக்கண்டேன் சிங்கணனைச்
சந்தோஷ மாச்சுதென் றே சோறுந்
தண்ணீருந் தந்தவ னுண்ணு மென்றான்.



47 உண்டேன் பசிதீர்ந் தேனவ
னாத்தாசை யாலங்கு நித்திரையுங்
கொண்டே னெழுந்திருந்தேன் கோழி
கூப்பிடு முன்வேளை வாய்ப்பெனவே

48 வேறொன்றும் பாரா மற்போனேன்
வெற்றிச்சிறகிட மொன்றிச் சென்றேன்
ஏறொன்று வெம்பரி யார்செவ்வந்
தீசனைக்° கும்பிட்டுப் பூசை செய்தேன்

49 செய்யாருங்காவேரி யாடிச்
சீரங்கமா°னம காரங்கத்தி
லையர் பதந்தொழுதேன் தொழு
தஞ்சாறு நாளங்கு சஞ்சரித்தேன்

50 சரித்திர மெல்லாங் கேட்டே யென்னைச்
சந்தித்துப் பேசவுஞ் சிந்தித்துக் கொண்
டொருத்தன் றிருப்பதி யானந்த
வூரில்வந்தா னவன் பேருஞ் சொன்னான்

51 போரான கள்ளனென் றானவன்
பேச்சுக் கண் டென் றனை யாச்சுதென்றே
ஈராரெனப்பகர்ந் தானந்த
கோத்தி லென்வழி சேரச் சொன்னேன்

52 சொற்கேட்டகமகிழ்ந் தானொரு
சோடா விருவருங் கூடிக்கொண்டே
பொற்கோ புரவா யிலங்கு
போயதிற் சத்தியம் செய்து கொண்டோம்

53 கொண்ட திருவரங் கரிசை
கோவடி மைத்தொழிற் றேவடியாள்
தண்டா மரைமுகத் தாளெனுஞ்
சந்திர கலாவல்லி சிந்தாமணி

54 சிந்தகளி கூர ரொக்கஞ்
செங்கையி லேபண யங்கொடுத்தோம்
அந்திப்பொழுது தனிற் சென்றுங்
காளுக்கோர் தேவடியாளைத் தொட்டோம்

55 தொட்டகலவியி லேயென்னைத்
தோய்ந்தவள் கண்டூங்கிச் சாய்ந்துவிட்டாள்
நிட்டூரமாகினேந் தேகடு
நித்திரையிற் சொக்குப் பொடித்தூவினேன்

56 தூவியன்ன மென்னடையா ளிட்ட
தோடுஞ்ச வடியும் பாடகமுங்
கோவை முத்து மாலையுடன் முத்துக்
குச்சுவச்ரக் கொப்புக் கச்சுடனே

57 உடைமைகளுள்ள தெல்லாங் கட்டி
யொக்கச் சுருட்டிய டக்கிக் கொண்டே
திடமா வெழுந்திருந்தே னந்தத்
திருப்பதிக் கள்ள னிருப்பிடத்தே

58 இருபேருங் கைகலந்தே யதி
லேங்கிக்கலங்கிக் கண் டூங்கிவிட்டான்
சரிசாம வேளையிலே யவன்
றன்னையு முச்ச வென்றந் நேரம்



59 மேலான சொக்குப்பொடிப் போட்டு
விட்டுக்க பாடத்துப் பூட்டும் விட்டு
நாலா வகையணியு மந்த
நள்ளிருட் சாமத்திற் கொள்ளை கொண்டேன்

60 கொள்ளையணிக ளெல்லாங் கட்டிக்
கூட்டிமேன் மாராப்புப் போட்டுக் கொண்டேன்
மெள்ளவெழுந்திருந்தே னந்த
வீதிவிட்டேன் செஞ்சிப் பாதையிற் போய்

61 போனேனிராவழியே கள்ளர்
போர்கடந் தேன்கண்ண னூர்கடந்தேன்
கூனுமதிதவழுஞ் செஞ்சிக்
கோட்டைகண் டேன் வாசற் பேட்டை கண்டேன்

62 கண்டேன் பலதெருவு மந்தக்
காவணமும் வீதியாவணமுங்
கொண்டாடு மாரியம்மன் கோயிற்
கோசிகன் போல்வந்த பூசிகனை

63 கனமாயுறவுகொண் டேன் தோளிற்
கட்டிக்கொடுவந்த பொட்டணத்தை
மனதார்திடமறிந்தே வைத்து
வைத்தங்குசோறு மமர்த்திக் கொண்டேன்

64 மத்தியபானங்கொடுப் பான்சோறும்
வாய்ப்புடனேதரச் சாப்பிடுவேன்
நித்தியகால முஞ்சுகித் தேனவ
னிச்சித்தபிள்ளைபோல் வைத்துக் கொண்டான்

---

தனனு—தனதனனு—தன—தானன தானன தானுன

## அவ்றங்கு செய்கு சாகிபுவின் சேனை செஞ்சியிற் பாளயமிறங்கியது

## நொண்டியின் நடத்தை

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

வைத்தவ னிருகண் போல வளர்த்தெனைக் காக்குநாளில்
முத்தலம் புகழும் செஞ்சி முதுநக ராமு ராயன்○
அத்தல மிழந்த வாறு மவ்றங்கு செய்கு சாகிப்○
கைத்தலம் பரிமாக் கொண்டு கலந்ததும் விளம்பு வேனே.

தரு—இராகம்—மோகனம்—தாளம்—ஆதி

65 கசரத துரகதத் தான் காயலில்
விசயரகுநாத பெரியதம்பி
புசபல ரணசூரன் புகழ்வளர்
நசைமிகு செஞ்சி நகர்தனிலே

66 மாருட்டத் துறைகளிலே மதகரி
ஏறுன சி கோஜி○ ராயன் மைந்தன்
தேருர்கள் பணிசரணன் றிசையெங்கும்
வீறுன நகரெங்கும் விளங்கும்பிரான்

67 செகமண்ட லீகர்கண்டன் செவ்விமதி
முகமண்ட லசுகந்த மோகமதன்
மகிபதி சுகலளி தன்வாதாடு மிக
மருவலர்புலி ராமுராயன்

68 வெங்கோப வாரணத் தான் விகசித
பங்கேருகப் பெண்வளர் பாக்கியவான்
சங்கிராம கெம்பீ ரன்றரையினிற்
செங்கோல் மனுநெறி செலுத்தும்பிரான்



69 துரைமுகில் சுலூபு கான்○ சிங்கத்
துரைபதியானமக்கா விசுமாயில் கான்○
நரபதிதாவூது கானே○சப்ப
நாயக்கன்○ நாதிறுகா○ னப்பாசுகான்○

70 தத்துலுகான்○ சவ்வாசு கான்○லாடமனத்
தாடாளி சற்றுருசிங் காராவுடன்
சுத்தவீர ரணசூ ரன்மகவுலு○
சுமுகரித்திமிசு சமுசேருகான்○

71 அதிசூர னிகுத்தாறு கான்○பூலேகான்○
அதிதீர னிமாமு கான்○ அலிமருகான்○
மதியூகி நவ்வாசு கான்○கானுகான்○
மலுக்குசம்மந்தருகான்○ முகம்மது கான்○

72 ஆகரை○ நகர்புரக் குமனுமதி
யவரங்கு செய்குசாகிப் அருட்படியோர்
சேகரமாக்கூடி யொசிறுகன்*
தெச்சணுதி திசைமுற்றுந் திறைகொள்ளவே

73 அடல்மத கரியுட னேயறுபதி
னுயிரங்குதிரையும் பொக்தலியரும்*
வடவரை இடுகிடென வடையலர்
மலங்கிடவே கெற்பங் கலங்கிடவே

74 வந்திறங்கி வேலூரு டனணிவந்த
வாசியுங்கொண்டாசந்த வாசியாலே
சந்தோஷிவயிரோ யிகோர்ப்பரே○
தளத்தைத்துரத்திரண களத்தில்வென்று

75 குறுகலர் திறையிட வேகடந்தொரு
கூட்டத்துடனே செஞ்சிக் கோட்டையின்மேல்
கறைபடிவேலர சர்பேரிகை
கறங்கிடப்பாளைய மிறங்கினரே

76 தாடாண்மையுடனேவந் துசெஞ்சியிற்
றலைவரைச் சுற்றுமட்ட குலவரைபோற்
கூடாரமும்மடித் தேபடங்குகள்
கோட்டினர் நிசானிகளு* காட்டினரே

77 கடகரித் திரள்களெல் லாநிரை நிரை
கருங்கிரியென்னச் சுற்றி நெருங்கிடவே
மிடைதரு செடியற வேகாடுகள்
வெட்டினர் குதிரையுங் கட்டினரே

78 ஒட்டகைத்திரளுட னேசுமையெடுத்
தொருதிரளாகவந்த வெருதுகளுங்
கட்டினரணியணியாத் திசையெட்டிற்
காவல் வைத்தார்கள்கள்ளச் சேவருக்காய்

79 வடுகருங் கன்னடருஞ் சோலைதொறு
மடங்கடொறு மிருந்தாரிடம் பெறவே
தொடுகடல் வளைந்தது போற்பாளையந்
தொகுத்தனராசரும் வகுத்தனரே

80 நரபதி தளமல்லவே யொட்டிரட்டி○
நால்கொண்ட○ கோல்கொண்ட○ தளமல்லவே
பெருகிய கடலதுபோல் வந்தோரெல்லாம்
பேச்சறியாத்துலுக்க ராச்சு*தென்றே



81 சூழ்ச்சமதாத்துலுக்க ரினிப்போர்
துடிப்பார் சிறைகளும் பிடிப்பாரென்
றுட்சிமனம் வெறுத்ததென்றே யிருந்தம
ராடினரென் றுகுடி யோடினரே

82 வீட்டையும் பாரா மறக்கச்சு கட்டின்
மெத்தையுந்தலையணை குத்துவிளக்கு
மாட்டையும் பாரா மல்நடந்தோடி
வாராதமக்களையும் பாராமலே

83 காட்டினிற் புகுவாரும் வாஞ்சித்த
கைக்குழந்தை ஒக்கலை இடுக்குவாருந்
தேட்டத்திலிச்சையுடனே மனதினிற்
றிடப்படப் பதுங்கியே கிடப்பாரும்

84 அருமைக்குழந்தைகளை யேதப்பவிட்
டலைவாரை யெண்ணவுந்தான் றொலையாதே
பொருமிப்பொருமியழுதே யங்கங்கே
போவாருமனமிகவே நோவாரும்

85 அலைந்திடும் பட்சி போலே காட்டினிற்சென்
றடைவாரும் பசியினு லிடைவாருந்
தலைவிதியிதுவென வேமடங்களிற்
றரிப்பாருந் தூங்கமுந்தி விரிப்பாரும்

86 தப்பவகை யில்லா மலகப்பட்டுத்
தவிப்பாருஞ்செங்கைகளைக் குவிப்பாரும்
இப்படிச் சனங்களெல்லா மனதுநொந்
தேங்கிக் குடிவலசை வாங்கினரே

87 போனவரகந் தோறும் போய்ப்பார்த்தேன்
புலியில்லாமனையினி லெலியதுபோல்
நானதெல்லா மறிந்தே விடுதிக்குள்
நண்ணினேன் மனதிலொன் றெண்ணினேனே

88 கால விசேடத்தினால் நமக்கினிக்
கைக்கான சிறையொன்றுஞ் சிக்காதென்றே
சுலூபுகான் ராசன் பாளையத்திற்
றூரக மொன்றுகொண்டு வரநினைந்தேன்

89 கோதடிதானெடுத்தேன் கஞ்சாக்
குடுக்கையொடு படுக்குந் தடுக்குடனே
மாதடிகோடாலி குண்டா
மயிற்பீலி விருதங்கி சக்கரமுடன்

90 கம்பளிக்கயிறுடனே யிடுப்பினிற்
கந்தையுங்கமர்பந்துங்* கட்டிக் கொண்டேன்
வெம்புலிபோற் சினந்தேன் றவசிகள்
வேடம்போல் வெண்ணீறையும் பூசிக் கொண்டேன்

91 ஆண்டிகள் வேடங்கொண்டேன் எண்ணாமல்
அடர்ந்தேறிப் பாளையத்தில் நடந்தேனே
வேண்டிய வீதிகண்டே னவரவர்
விடுதிகளையுங் கண்டேன் சடுதியிலே

92 கடைத்தலைவீதியி லேமணியக்
காரியக் காரர்தலை யாரிகளுந்
திடத்தொடு மிருக்கக் கண்டேன் துரைகள்ஒ
சீறு*களிருக்குங்கூ டாரங்கண்டேன்



93 நலம்புனை சுலூபுகான் கூடாரத்
தாசார வாசலதுவுங்கண்டேன்
ஈடற்ற படைநெருங்கும் வங்கார
ஏசப்ப நாயக்கன் வாசல் கண்டேன்

94 கூடாரவாயிலி லேலாடர்கள்*
கூட்டமும் பக்கீருக்* கூட்டங்களுஞ்
சோடாக விருக்கக் கண்டேன் மனதினிற்
சூழ்ச்சியொடு கையெடுத்துத் தாழ்ச்சி செய்தேன்

95 ஆவுரே கான்சே ஆயெ வென்றார் சாகிபுநான்
ஆபுலக்கா புலத்தெ ஆயெவென்றேன்
காவுரே கானவென்று ரிதுநல்ல
கருமமென்றேசென் றருகிருந்தேன்*

96 கடைபடு கஞ்சாத் தண்ணீர் பாத்திரத்திற்
கட்டளையிட்டார்பிரமன் கட்டளையென்றே
யிடையூறு பேசாமல் மண்டிபோட்
டிருந்து பிசுமிச்சொல்லி* யருந்தினனே

97 கறிகளும் ரொட்டிகளும் அவரவர்
கைதோறு மெய்வழக்கஞ் செய்தார்களே
அறிவுள்ள பெரியவர் போல் நானுமதை
ஆசாரத்தோடு கொண்டேன் கூசாமலே

98 கலங்கிய பங்கிவெறி யால் கண்சிவப்புங்
கலந்திடநாவும் பல்லும் உலர்ந்திடவே
மயங்கிடுதியக்க மொடு காலுங்கையு
மடக்கியொருபுறத்தில் முடங்கினனே

99 கிறு கிறென்றே மயங்கிக் கோதடியிற்
கிடந்தேன் சூரியனு மடைந்தானே
நறைமலர்த் தொடைமார்பன் ஏசப்ப
நாயக்கன் புண்ணியச காயத்தினால்

100 போசனக் காரர்வந்து வண்டகம்
போஞ்செய ஆவுரேயென்றார்* வாஞ்சையுடன்
ஏசிலாதுடனெழுந் தேன் பாத்திர
மெடுத்தேன் பந்தியிற்சென் றடுத்தேனே

101 கூண்டிருந்த சனஞ்செய் தேன் பசியினிற்
குறைந்திடும் வயிறது நிறைந்திடவே
வேண்டிய சோற்றையுண்டேன் அதில் வயிறு
வீங்கின கண்களுந் தூங்கினனே

102 விடிந்தபின் னெழுந்திருந் தேன் பாளைய
வீதியுமவரவர் சேதிகளும்
உடந்தையாப்பார்த்தறிந் தேனங்கங்
குறவுகொண்டவரவர் துறவுகண்டேன்

103 கோப்புகள் தனையுங்கண்டேன் பட்டாணிக்
கூட்டமுநாட்டமுங் குறியுங்கண்டேன்
காப்புகள் தனையுங்கண்டேன் றலையாரிக்
காவலும்படுக்கையுங் களமுங்கண்டேன்

104 அறிந்திடும் பழையவர் போ லானொடும்
ஆளாகப்பதினைந்து நாள்திரிந்தேன்
மறந்திகழ் சுலூரபுகா னேறிய
வாசியி லுத்தமத் தேசிதனை



105 காத்திருந் தேவல்செய்யும் பயல்கள்வங்
கணமாச்செ னக்கதுவுங் குணமாச்சே
சூத்திர மாக்குதிரைப் பாஷையுந்
தொழிலையுங் கிரகித்தேன் வழிவசமாய்

106 வாசியைக் களவுசெ யவின்றமா
வாசையிருட்டுவந்து வாச்சுதென்றே
ஈசலைப் போலொடுங்கித் தனித்தோ
ரிடத்தினிற்சென்று நான் படுத்தேனே

107 ஒளித்துப் படுத்திருந்தே பேசாம
லூமனைப் போலநடுச் சாமத்திலே
விழித்தே யெழுந்திருந்தே கச்சைக்கட்டை
மெல்லவிறுக்கிக் கொண்டேன் சல்லடத்தை

108 கண்ணுக்குத் தெரியாத குளிகையுங்
கட்டிக்கொண்டேன்திலத மிட்டுக் கொண்டேன்
எண்ணிக்கை யினிலில்லாப் பாளைய
மிறங்கின பேரெல்லாம் முறங்கக் கண்டேன்

109 மாயமா யொன்றியொன்றிப் போயிது நல்ல
வாய்ப்பென்று கூடாரம் போய்ப்புகுந்தேன்
தேயத்திற் கிடையாத வுத்தமத்
தேசியைப் பிடிக்கவு பாயமிட்டேன்

110 மரகத மலைதனை யேயுருச்செய்து
வைத்துக் கடைந்தெடுத்த சித்திரமொத்த
குரகதத்தருகுசென் றேன்காலைத் தொட்டுக்
கும்பிட்டேன் மேலிற்றொட்டு முகந்தடவித்

111 திரள்மணிக்கடிவாளம் வாயினிற்
செறித்தேன் வெள்ளநுரை தெறித்திடவே
குரலுக்கு மேலான தலைவிட்டுக்
குறிப்பாகக் கழுத்துறு தெறிப்பும்விட்டேன்

112 முறுக்கிட்ட பாளா சுதனைவிட்டு
முறுக்குப்போட்டுச்சுறு சுறுக்குடனே
சறுக்காமல் முழிப்போடு குசைக்கச்சை
தாங்கி வெளியின் மெள்ள வாங்கினேனே

113 வெளிவந்த குதிரையின் மேலடியேன்
மேற்கொள்ளவேண்டுமென் றுக்ரமித்தேன்
கழிக்கம்புச் சோணங்கிநாய் விழித்தென்னைக்
கலைத்திட மிகுசத்தங் குலைத்திடவே

114 சடுதில் நாய் குலைத்ததென்றே யுறங்கிய
சாணிப்பயல்களும்* பட்டாணிகளுந்
திடுதிடென்றோடிவந்து குதிரையைத்
தேடினார் சுற்றும்பிற்று மோடினாரே

115 தக்காது குதிரையென்றே விட்டொளிக்கத்
தலமற்று நடக்கவும் பலமற்றுப்போய்ப்
*பக்காழிப் பொதியடக்குந் துருத்திக்குட்
பதுங்கிக் கொண்டொருபுற மொதுங்கினனே

116 பறிபட்டுத்தேடினவர் முறுக்கிட்டுப்
பாயும்புரவிநின்ற சாயல்கண்டு
தெறிபட்ட கள்ளனையே பதனமாத்
தேடும்வழிக்குக்காவற் போடுமென்றார்



117 பந்தமும்பகல்வத்தி யுந்தீவட்டியும்
பார்த்ததிசைதொறுங்கண் பூத்திடவே
யந்தவல்லிருட்டையெல் லாம்பட்டப்பக
லாக்கினார்திசையெங்கும் நோக்கினரே

118 தெற்றிய குடிசைகளும் புல்லுக்கட்டும்
திரைகளும் காணக்கொப் பரைகளுடன்
சுற்றிய விடுதிகளும் இடம்பெறச்
சோதித்தா ரென்றுமனம் பேதித்தேனே

119 துருத்திக்குட் பதுங்கிக் கொண் டுகிடப்பது
துறையல்லதப்புவது முறையெனவே
பொருத்தமுற்றெழுந்திருந் தேயோடிப்போய்ப்
பொடுபொடெனவிறகு கடுவொளித்தேன்

120 துணிவுடனிருக்கையி லேசாய்ந்திடுந்
தோட்கட்டிலொருகருந் தேட்கொட்டின
அணிகெட்டுத்தடுமா றித்தேள்விடம்
ஆற்றாமல்மதியையுந் தோற்றேனே

121 எரித்திடுங்கடுப்பத னுற்படபடென்
றீரல்றுடித்திடக்கண் ணீர்சொரிந்தேன்
ஒருத்தனு மலைத்திருந் தேன்பார்ப்பாத்தி
உப்புக்கண்டம் போக்கடித்த வொப்புப் போல

122 மறுமொழி பேசா மற் கச்சைக்குள்ளே
மருந்திருந்ததையெடுத் தருந்தாமல்
குறு குறென்றே விழித் தேன் கள்ளனைத்தேள்
கொட்டின தென்பதென் மட்டுமாச்சே

123 கறுப்புக் கண்டால்வரு வார்துலுக்கர்*
கபடரென்றெனைத் தவிடம்விட்டே
சுறுக்குடன் கிடந்துருண்டேன் நான்செய்த
துர்ச்சனத்துக்கானகர்ம லட்சணம்போல்

124 ஐயையோ நெருஞ்சிமுள் ளுழுனைக்கல்லும்
அழுத்தி முதுகினெஞ்சிற் கிழித்திடவே
கையொடுகால்பத றியுருண்டிடும்
கலக்கத்திலே விழுந்தேன் சலக்கத்திலே

125 தாழ்ந்துருண்டோடிவந் தேயேதுங்கெட்ட
சதுக்கான குழியினிற் சொதுக்கெனவே
வீழ்ந்தவன் கள்ளனென் றேகாரியம்
வெற்றிதானென்று வந்து சுற்றினாரே

126 சுற்றிலே வளைந்துகொண் டுதுலுக்கருந்
தொடுகட லென்னவந்த வடுகருடன்
பற்றுவார் தொங்கசிக்கிறோ அரேயொக்க
பட்டு பட்டு கட்டுவேசு கொய்டு கொட்டென்பார்*

127 சோரேபக்கடேயென் பார் அரேபேட்டிச்
சோதுமதுத்திரு வாதியென்பார்*
ஏலாதகளவு செய்த கள்ளனிவன்
எந்தநர கத்தழுந்த வந்தவனென்பார்

128 உச்சிசூழ்மகனிவனுங் குதிரையை
யுச்சிக் கொள்ளவந்தானென்று கச்சிப்பிச்சென்பார்
எச்சிப் போய்க்கிடக்கிறானென் பா ரினிக்கரை
யேற்றுமென்பார் பொறு காற்ற மென்பார்



129 மூக்கைச் சுழித்துக்கொள் வார்முகமாறி
மூச்செறிந்திவனுக்கு வாச்சுதென்பார்
காக்கைகழுகும் பொருந் தாநாற்றத்தைக்
கண்டுமிவன் பொருந்திக் கொண்டானென்பார்

130 தொடக்கென்றும் பாரா மலடியேன்
தொலைக் குழிக்கழுதைபோற் சலக்கத்திலே
கிடக்கிற சமயத்தி லேமயிர் தொட்டுக்
கேக்கையிட்டொருபயல் தூக்கினானே

131 முட்டுக்கண்டவர்போ லத்தீண்டாமல்
முழுகச் சொன்னாருடற் கழுவிக்கொண்டேன
கட்டித்தானென்னைக் கொடுபோய் நான் செய்த
காரியஞ்சொல்லித்தலை யாரிமுன்னே

132 விட்டிவன் பதனமென் றூரவனொரு
வீட்டிற்குள்ளேயடைத்துப் போட்டுவைத்தான்
கட்டினிற்கிடந்து ருண்டேன் விடிந்திடுங்
காலைக்குள் வந்துசிறைச் சாலைக்குள்ளே

133 பெரியார்பெருந்தலை யாரில்லாமற்
பேயுநாயுமாவென்னைப் பிடித்திழுத்துத்
தரியாதென்னைநடத் திக்கொடுபோய்த்
தாவூதுகான்முன்ன மேவிடுத்தார்

134 பட்டாணிராவுத்தமார் துரைமக்கள்
பாளையக்காரர்க ளனைவோரும்
அட்டாள தேசத்திலுண்டோ கள்ளனிவன்
அடக்கமு மொடுக்கமும் பாருமென்பார்

135 எல்லோருமொருமுக மாக் கூடிவந்
திருக்கிற சமுகத்தி னெருக்கத்திலே
நில்லாமல் துரத்துமென் பார்கன் மஞ்செய்
நெறிகேடன் முதுகினி லறையுமென்பார்

136 வெட்டவாளுறைவிடு வார் கோபித்து
மிதிப்பார் சவுக்கெடுத்து வீசுமென்பார்
கிட்டவா வெனச் சொல்லு வாரேதென்று
கேட்பார் நல்ல பலன் கிடைத்த தென்பார்

137 ஆரிவன் காணுமென் ப்பார் நேற்றெல்லாம்
ஆண்டியாய்த்திரிந்தவன் காணு மென்பார்
பாரிவன் துணிவையென் பாரளவிட்டுப்
பார்க்கப்படாதிவன்றன் மார்க்கமென்பார்

138 உடைந்தையாய்த்திரிந்தானென் பாருளவறிந்
தொட்டைக்காட்டின் முழுக்கொம்பு வெட்டு
வானென்பார்
திடந்தனைப்பாருமென் பார் மணலையுந்
திரிப்பான் கல்லினு ருரிப்பானென்பார்

139 களவுசெய் பாதக னைத் துரைமக்கள்
கண்ணுரப் பார்க்கவுந்தா னுண்ணுதென்பார்
பிளவு செய்தெறியுமென் பார் கோபிக்கும்
பேரைப் பொறுபொறென் றேயுரைத்து

140 மரகதமலையதி பன்தாலூதுகான்
மறுமொழிபேசாமல் முறுவல் செய்து
நரபதிசுலூபு கான்ச முகத்தில்
நடத்து மிவனையப்பாற் கடத்துமென்றூர்



141 சுந்தர மகராசன் சுலூபுகான்
சுமுகன் கொலுவருகின் சமுகத்திலே
சந்தடிதனைவிலக்கி யெனையங்கு
தடுக்காமற் கொண்டுபோய் விடுத்தாரே

142 கொண்டுபோய் முன்னில்விட் டுகான்செய்த
கோலத்தையுந் திருட்டுச் சாலத்தையும்
பண்டுபார்த் ததைபோ லப்படிப் படி
படித்தாரவர் பார்த்து கொடித்தாரே

143 கோன் ரேஜாத்து* வென் றூர்சாகிபு நீர்
கோபஞ்செய்யா தையுகான் காபரெ*ன்றேன்
ஏன்தானே சிரித்துக் கொண் டாரிருந்தவ
ரெவ்வெவரு மெனைப்பார்த்துச் சவ்வாசெ*ன்றூர்

144 சிரித்துத் தலையசைக்க வேகான்மனதின்
சிவனுக் கழிவில்லை யெனநினைந்து
தரித்துத்திடமா னின் றேன் காலிமார்*
தனையழைத்திவனுக்கென் குக்குமெ*ன்றூர்

145 காதி*மாரனை வோரும் புறுக்கானில்*
தக்கான முறைமை கடக்காமலே
கோதிலா தறிவுணர்ந்தே யிவன்றனைக்
குறிப்புடன் காலுங் கையுந் தறித்திடென்றூர்*

146 சொலுமொழி தனைக்கேட் டேசுலூபுகான்
துரைதம் முத்திரைமோ திரந்தனையே
தலையாரிகையிற் கொடுத் தேயிவன்றனைச்
சாகாமற் காலுங்கையுந் தறித்திடென்றூர்

147 சொன்ன கட்டளைப்படியே யடியேனைத்
துடித்திடக் கையைக்கட்டிப் பிடித்துக் கொண்டு
முன்னும் பின்னுமாகவே சவுக்கடி
மூட்டிக் கடைத்தெருவிற் கூட்டிவந்து

148 காதின் முகத்தினி லறைந்து காதுக்குங்
கழுத்துக்கு மெருக்கிலை மாலையிட்டு
வீதிகடோறுநடத்தியே கண்ணிற்கண்டோர்
விலக்கவுங் கேளாம லலக்கழித்து

149 கோட்டைக்கப்புற நடத்தி யவரவர்
குழுவுங்கடைத் தெருவும் வழியும்விட்டுப்
பேட்டைத்தெருவிலிருத் தியம் பட்டப்
பிரமனை யழைப்பித்தா ரண்மனை யார்

150 கருவி பிரமனெடுத் துக் கூர்மையைக்
காட்டிக்கைச் சாணையிற் றீட்டிக் கொண்டு
வரையுங் குறியுங் குறித்தே சுறுக்கினில்
வலக்காலு மிடக்கையும் வாங்கினனே

151 ஆக்கினைக் களரிக்குள்ளே யங்ஙனே
யயர்ந்து களைத்தேனங்கு மூர்ச்சை வந்து
நாக்கொடு வாய்குள றியுடலும்
நடுங்கிப் பதை பதைத்துள் ளொடுங்கி விட்டேன்

152 துலங்கிய சோலை மலைதனிலுள்ள
தோழரு டனிருந்து வாழாமல்
அலங்கித மதுரையிற் போய்ச் சொக்கரை
யடுத்த பலனமக்குக் கிடைத்ததென்றே



153 அழுது புலம்பிப் புலம்பி விதிப்படி
யாச்சுதென் றேபெரு மூச்செறிந்து
பொழுது புகுமளவும் வேதனையாய்ப்
புரண்டு புழுதிமண்ணி லுருண்டுருண்டு

154 விதியால் மதிமயங்கிக் கிடக்கின்ற
வேளை தனிலேயந்தப் பாளையத்திற்
பதியா யிருக்கின்ற பேரெனை வந்து
பார்ப்பாரு மேதென்று கேட்பாரும்

155 ஈனக் கள்ளனிவன் காலுங்கையும்
இழந்தா னிதுதிரு வுளந்தானென்
றதிசயம் பார்க்கவந்தே சுற்றிச்சுற்றி
யலைவாரை யெண்ணவுந் தான் றொலையாதே

156 அந்தநல்ல சமயத்தி லேவகுதையில்வாழ்
அப்துல் காதிறுப்பிள்ளை புத்ரனுனோன்
மந்தர திண்புயத் தான் கனகதுரை
மாமு நயினார்ப்பிள்ளை * மகிபாலன்

157 வெம்பிய மதகரி யான் காயலில்
விசயரகுநாதப் பெரியதம்பி
தம்பித் துணையென வாழ் குங்குமத்
தாமமிலங்கும்புய மாமுநயினன்

158 சென்னப் பட்டண மிருந்து செஞ்சியிற்
செருக்குடனேவக் திருக்கையிலே
அந்நகர் தனிலடி யேன் களவுசெய்
தாக்கினைப் பட்டவெனைப் பார்க்கவந்தார்

159 வந்துநின்றேதெனவே யெனையந்த
மண்டலாதிபதி கண்டிரங்கி
யெந்தவூரெந்தத் தேயம் நீயாரென்
றியம்பினார் வார்த்தையெல்லா நயம்பெறவே

160 வார்த்தையெல்லாங் கேட்டே வளச்சோலை
மலைக்கள்ளனென்று நான் தலத்தைச் சொன்னேன்
பார்த்தவர் சவ்வாசென் றேயெலுமிச்சம்
பழத்துக்கு மெண்ணெய்க்கும் பணங்கொடுத்தார்

161 ஏதுமற்ற பரதேசி யிவனைக்கை
யேற்றுப் பரிகரித்துப் பார்த்திடென்றே
தீதற்ற பண்டிதற் குநூறுபொன்
றிட்டமாச் சம்பளமுங் கட்டளையிட்டே

162 காயத்தை யாற்றிக்கொண்டே கீழக்
கரையிற் பெரியதம்பி மரைக்காயன்
வாயலத் தலத்தில் வந்தா லுன்னுடைய
வறுமை தெளிந்திடுமென் றுறுதி சொல்லி

163 கனதுரை மாமுநயினா னென்மேற்
கருணைபுரிந்தெழுந் தருளியபின்
அனைவோருங் கூண்டிருந்தே யெண்ணெய் காய்ச்சி
யாயசத்ரத் தொத்தவிட்டுக் காயமுங்கட்டி

164 பத்தியந் தவறுமற் போசனமும்
பசியறிந்தே கொடுத்தார் ருசி பெறவே
முத்திரைப் பதமா கக்கெடுவிட்டு
மூன்று நாளைக்குள்ளாக் கடுப்பகற்றி



165 காயமு நாளுக்கு நாளுலர்ந்திடக்
கருந்தழும் பேறவே மருந்துங் கட்டி
தாயெனவுபசரித்து நோய்தீர்த்துத்
தற்காத்து ரட்சித்தார் மிக்காக வே

166 நடுத்தலம் புகழ்மத வேள் மாமு
நயினான் மகிபதி கையினாலே
கொடுத்திடும் பணத்தாலே நானொரு
குதிரையும் வாங்கிக்கொண்டேன் சதிருட னே*

167 ஆளொன்று கூட்டிக் கொண்டேன் செஞ்சியில்வந்
தலைந்தபாவ மெல்லாந் தொலைந்த தென்றே
நாளொன்று கேட்டுக் கொண்டேன் சீக்கிரத்தில்
நடந்தேன் தொலைவழி கடந்தே னே

168 வாலிகொண்ட புரங்கடந்தே யரியலூர்
வழியும் புதுக்கோட்டை வெளியும் விட்டுச்
சோலியொன்றுஞ் செய்யாமற் றிருமெயத்
தூருங்கடந்து தொண்டி யூரில் வந்தேன்

169 கோதற்ற தொண்டி கடந்து நல்ல மணற்
குடியுந்திருப்பாலைக் குடியும் விட்டுப்
பாதைக்குள் வாடியும் விட்டுத் தேவி
பட்டணமும் வந்து கண்டே னிட்டமுட னே

170 இருந்தலர் பணிபா தன்னரபதி
செகபதி சேதுபதி ரகுநாதன்
பொருந்தமனு முறை செய்யும் ராமநாத
புரத்தில் வந்தன் றிரவு தரித்தே னே

171 வர்த்தக ரேர்மணி யான் பெரிய தம்பி
மரக்காய ராசரவர் வாயலில் வந்து
சுத்தவீரரண சூரன் செய்தக் காதி
துரையெங்கே யென்றேன் கீழக் கரையிலென்றார்

172 அத்தலந்தனைக் கடந் துகண்மாயும்
அளத்தையுங் கண்டுதிருக் குளத்தில் வந்து
வைத்த பனைமரத்துக்குங் காலுக்கும்
வாருக் கட்டிக்கொண்டேனந்த மோருக் குளத்தில்

173 கணத்தினி லெழுந்திருந் தேன்பாலையாறுங்
கடந்தே னொண்டி நொண்டி நடந்தேனே
மணவச்சேரி வந்ததனைக் கண்டேன் சாலையும்
வாய்ப்பான சிங்காரத் தோப்புங் கண்டேன்

174 கொடிக்கால் மணலுங்கண் டேன் செம்பொன்
குடம்வைத்த வேகாந்தர் மடமுங் கண்டேன்
கடைத்தலை வீதிகண்டேன் லெப்பை மார்*
*காலிமாரோதும் பள்ளி வாயல் கண்டேன்

175 விருதுமன்னியர் கண் டன்காயலில்
விசயரகுநாதப் பெரிய தம்பி
கருதலர் திறையளக்கும் வாயிலைக்
கண்டேன் மனங்களி கொண்டேனே

176 சந்திக்க வந்திருக் குந்துரை மக்கள்
தானா பதியான ஞானாதிகளும்
மந்திரிப் பிள்ளைமாரும் வில்வரும்
வடுகரு மிடுகரும் வன்னிய ரும்



177 நிறைந்திடு மாசாரத் தில் நானுமந்த
நெருக்கத்தி லொருபுற மிருக்கச் செய்தே
சிறந்திடு சமயத்தி லேரட்சித்த
சீமான் அப்துல் காதிர் மாமுநயினான்

178 வரக்கண்டெழுந்திருந் தே கும்பிட்டு
மார்க்கண்டன் போல்வீரென்று வாழ்த்திக்கொண்டே
இரக்கஞ் செய்தெனை நோக்கி யேன்பிள்ளாய்
எப்போவந்தா யென்றா ரிப்போதென் றேன்

179 செங்கை முகில் மாமு நயினான் நல்லதென் று
சேகுக் கன்று °மன்னவன்முன் பாகச் சென்று
தங்களிலிரு பேரு மென்கருமந்
தனைப்பேசி மரக்காயர் சமுகத்தி லே

180 சேகுக்கன்று மகிபாலன் என் செய்தி
செய்தக் காதி தன்றிருக் காதிலுரைத்தான்
ஆகட்டென்று முடிதுளக்கி யவனையிங்
கழையு மென்றாட்களை யனுப்பினனே

## கீழக்கரையில் செய்தக்காதி கொலு வீற்றிருத்தல்

181 ஆனவர்கள் வந்து சொல வே நமக்கினி
யட்ட யோகங்கிட்டுமினித் திட்டமென வே
கானுலாவிய கொடை யான் செய்தக்காதி
கதிர்ப்ரபை தங்குந்தங்கச் சவுக்கையின் மேல்

182 பிறைநுதலார்மத வேள் மீராப்
பிள்ளைமரக்காயன்° வள்ளலுடன்
திறமுடனடுத்திருந்தே பலபல
செய்திகள் யோசனை செய்திட வே

183 வரிசைச்செய்யிது நயினான்°சிருஷ்டித்த
வாலமன்மதனொரு பாலிருக்க
அரசர்க டொழுசரணன் குட்டி
யாலிப் பிள்ளை°யொரு பாலிருக்க

184 மாதர்கள் மதரூ பனெனவரு
மாப்பிள்ளை மாமுநயி னார்ப்பிள்ளை யும்
பூதலம்புகழ் சயிலன் சேகுக் கன்றுப்
பூபதி யுடனொரு புறத்திருக் க

185 சந்தமுத்தமிழ் தெரி யுங்கல்வித்
தலைவர் மகிழ்உமறுப் °புலவருடன்
செந்தமிழ்க் கந்தசுவாமிப்° புலவனுஞ்
சீராட்டு நற்றமிழ்ப் பாராட்ட வே

186 மத்தளமுங் கைத்தாள முந் தம்பூரும்*
வாத்தியங்கள் கொண்டு சிலர் கீர்த்த னஞ்செய
முத்தமிழ்க் கவிவா ணர் சிலர்திசை
முதுதமிழ்க் கவிஞர்கள் பதமிசைக் க

187 இலங்கிய நில மக ளுந்தனசம்பத்
திலட்சுமியும் வீரமுய ரிலட்சுமியுங்
கலைமக ளொடுமிவர் கள் சுவாமியெங்
கத்தனெனப் புகழ்ந்து நித்தமு நிற் க

188 துரைமக்களருகிருக்க மறுமன்யர்
சூழ்ந்துகை வாய்புதைத்துத் தாழ்ந்து நிற்கத்
திரைசுற்று மணித்தவிசில் சருவந்து
சிறந்திட லினை வந்து நிறைந்திருக் க



189 கரணிகர் நிறைந்து நின்றே அருட்கடைக்
கண்பார்த்து வாய்புதைத்துக் காரியஞ்சொல்லச்
சரணிற் சலாமு*ரைத்தே தீவாந்தச்
சத்திரரும் வர்த்தகரு முத்திரஞ்சொல் ல

190 சங்கநிதி பத்மநிதிபோல் நிதிவாரிச்
சடையாமலிருகையுங் கொடைகொடுக்க
இங்கித சௌந்தரிய மின்னார் 'ஆலாத்தி
யேந்தி யிருபுறமுஞ் சேர்ந்து நிற் க

191 எச்சரிக்கை சாமியென் றே பக்கத்தில்
இராசியக்காரர் நின் று வாசகஞ் சொல்லக்
குச்சலியர் வச்ரமணி யும் நகைகளுங்
கொண்டுகளி கூர்ந்து நல் தெண்டமிட வும்

192 தருப்போற்கொடை கொடுக்கும் வட்டாவுந்
தாம்பூல முந்துகிலுந் தாங்கி நிற்க
விருப்பொடு முத்து ரத்தி னப் பரீட்சையர்
மேன்மையொடுதானிருக்க வான்சபை யில்

193 நிறைந்த கலைமதி வந்தே சமுகத்தில்
நின்றதென்ன வெள்ளை வட்டமொன் று நிழற்றச்
சிறந்த சிங்காசன த் தில் செய்தக்காதி
சிலைமதனைப் போலக் கொலுவிருந்தான்

194 இருந்த சமுகத்திற் சென்றேன் உடல்பூரித்
திளகி மனநன்றாய்த் தள தளத்துக்
கருந் தடங்கண்ணியர்வேள் செய்தக் காதி
கன்னவ தாரனைப் போலிருந்தான்

195 விஞ்சையற் கனுகூலன் காயலில்.
விசயரகுநாதப் பெரியதம்பிக்
கஞ்சமலர்ப்பாதத் தைக் கண்ணாரக்
கண்டுகளி கூர்ந்து நான் தெண்டனிட் டேன்

196 அடைக்கலங் காத்த பெருமான் மன்னவர்க்
கரசு நிலை நிறுத்துஞ் செய்தக் காதி
கடைக்கண்ணாலருட் பார்வையைக் கண்ணாரக்
கண்டு களிகூர்ந்து தெண்டனிட் டேன்

197 தெண்டனிட்டு வணங்கிநிற் கச் செய்தக்காதி
திருமுக மலர்ந்தரு ளகங்குளிர்ந் து
பண்டுபழகினவர் போல அடியேன்
பாட்டையுஞ் செவிதாழ்த்திக் கேட்டன னே

198 கேட்டுமன மதிலிரங் கி யென்னுடைய
கிலேசந்தவிர நல்ல வாசகஞ் சொல்லி
நாட்டிற் றிரிந்து பிழைப் பா னிவன்றனை
நாமிசுலாத்திலாக்கு வோமெனவே

199 தாராள மாகினேந் தே யடியேன்
தன்கையி லாயிரம் பொன்கொடுத் துப்
பேரானசதக்கத்துல்லா முன்பாகப்
பேதமில்லாக் கலிமா வோதச்சொல் லி

200 பரிவுசெய்தனுப் பினன் பின் குத்துபாப்
பள்ளிவாயிலிற் சென் றுட்புகுந்தே
எரிகதிர் மணித்தவிசில் ஆலிம்கள்
எல்லாருடன் சதக்கத்துல் லாவைக் கண் டேன்



201 கண்டு தொழு திறைஞ்சி நின் றேன் இசுலா
மாக்கு மெனையென்றொரு வாக்குச் சொன்னேன்
சடுதியில் சதக்கத்துல் லா கலிமாத்
தானுஞ் சொன்னாரதை நானுஞ் சொன் னேன்

202 அடைவொடு கலிமா வின் பொருள்கள்
அனைத்தையுஞ் சொன்னாரென் றன் மனத்திருத் தி
... ... ... ...
... ... ... ... ...

203 படித்துப் *பறலு சுன்னத்து* நவிலுடன்*
*பாத்திகாவோதிசல் வாத்த* றிந்து
முடித்துக் கலா* தொழு தே னிவனல்ல
முசிலிமெனச் சொன்ன ரிசுலாமானோர்

204 தொழுகையு நோன்பையு மே* சக்காத்தையு*ந்
தொகுத்தபடி முடித்து நடத்திடென் றார்
பழுதறு கஜ்ஜு செயவே போவென்றார்
பக்கத்திலிருந்தோர்கள் மக்கமதற்கு

205 சொற்படி செலமன மாய்ச் சதக்கத்
துல்லாவுடன் சலாமுஞ் சொல்லிக்கொண்டேன்
சற்குணநிதியனை யான் செய்தக்காதி
தாமரைத் தாளுக்குஞ் சலாஞ் செய்தேன்

206 கன்னுவ தாரனையா செய்தக்காதி
காரியக் காரர்கள் விரிய மாய்ப்
பொன்னுருஞ் சரக்கேற் றித் தொழிற்செயப்
போரபத்தாசினி லேறிக் கொண்டேன்

207 அணிபெறு பத்தாசி லே துணைவரும்
ஆட்களுடன் பொன்போல் வாழ்க்கையிற்சென்றேன்
திணிசுற்றி விளங்கிடுஞ் சீர் கோழிக்கூட்டி*ற்
செப்பமுடன் சென்றுமறு கப்பலேறி

208 கடற்கரை வழிகடந் தே யிறங்கிமக்
காவுங்கருபத்துல் லாவுங்*கண்டேன்
இடத்தினி லெப்பைமாரு* மெவருக்குமு
ரீதுகள்* கொடுக்குஞ் சரீபுகளும்*

209 அறபிகள் செய்யிது*க ளுமூமின்*க
ளாலிங்க ளோடு*பள்ளி மோதின் களுங்*
திறமுட னிருக்கக் கண் டேன் அந்தந்தத்
தேசந்தனி லேயுள்ள ராசர்க ளும்

210 மக்கமுங்* கருபா* வுங் கண்டந்த
வரிசைத்தலங்கள்கண் டதிசயித்தேன்
மிக்கபுறுக்கான்*படி யே யடியேன்
மேலோனைத் தொழுதொரு பாலிருந் தேன்

211 அததலந் தனிலிருந் தே வரிசையா
யருந்தவம் புரிந்தங்கே யிருந்ததற் பின்
மைதவழ் முகிற்குடை யார் அரசு செய்
மதினா தனக்கிரு பது நா ளில்

212 போனேன் மதினா விற் போயவ்வூர்ப்
புரிசையெல்லாங் கண்டேன் வரிசையுடன்
தானேமகிழ்ந்து நபி திருவடி
சாய்த்த தலத்தைத் தொட்டுச் சேர்ந்தே னே



213 செல்லைக்குடைதரித் தோர்[1] மதினாச்
செகம்புகழ் நபிமுகம் மதுநபி னார்
எல்லைத்தலமாக வாழ்ந்திருந்
திலங்குமாளிகையை வலஞ்சுற்றி னேன்

214 சூகைமுலையருந்தி னோர்[2]மதினாச்
சுகம்பெறு நபிமுகம் மதுநபி னார்
ஏகனைத்தொழுதிறைஞ் சி வாழ்ந்திருந்
திலங்குமாளிகையை வலஞ்சுற்றி னேன்

215 சுற்றிவந் ததிரே நின்றேன் அவிடத்தில்
துய்யோன் மறைபோதுஞ் செய்துகள்*முன்னே
வெற்றிச் சலாமுரைத்தேன்* அவிடத்தில்
மேலோனைத் தொழுதொரு பாலிருந்தேன்

216 வரிசை நபியிற சூல் முகம்மது
மந்தார முகிற்குடைக் கொந்தாலத்தை
அருகிலே சென்றுநபியைப் போற்றி
ஆத்திரந் தீர்ந்திடத் தோத்திரஞ்செய்தேன்

217 படியேழ் புகழ்நபி யைஅவுதுல்லா○
பாலக ராமிற சூல்நபியை
அடியேன் மனக்குறை யும் போகவென்
ஆத்திரந் தீர்ந்திடத் தோத்திரஞ்செய் தேன்

218 மதினை யழைத்தந பி[1] கஸ்தூரி
வாசம்பொருந்திவந்த கோசாலத்தை
நதியையழைத்தநபி யிடத்திற்கையுங்
காலும் வளர்ந்திடது வாவிரந்தேன்

219 போற்றித்துவாவோத வே பரவசமாய்ப்
புத்திமயங்கி யொரு நித்திரை செய்தேன்
ஏத்துந்துவாக்கபூலா யெனக்குமுன்
னிருந்தகாலுங்கையும் வளர்ந்தன வே

220 சுறுக்குட னெழுந்திருந் தேன்* சுபுகா
னல்லாவென்றிறையைச் சுக்கூறு*செய்தேன்
குறிப்புடனதிசயித் தேன் ஈமான்*
கொண்டபலன் கைம்மேலே கண்டோமென் றே

221 காயலின்மகரா சன் செய்தக்
காதியைத்திசை நோக்கிக் கையெடுத் தேன்
தாயெனவுபசரித்த மாமு நயினார்ப்பிள்ளை
தன்னையு நினைந்தே தாழ்ச்சிசெய் தேன்,

222 அறபுக்கரையுமக்க மு மரச
ரவர்வழி யவர்குல முறைவா ழி
குறைசிக்கிளையும்* வாழி செய்யிதுக்
கூட்டமும்வாழி புறுக்கான்வாழி

223 ஆழிசூழ் புவிவா ழி செருவி
லரியதுரைச்சேது பதி*வாழி
கீழக்க ரைவா ழி சிங்கக்
கேசச் சதக்கத்துல் லாவாழி

224 தீனவர் குலம்வா ழி செய்தக்காதி
செல்வமுங் கல்வியும் தினம்வாழி
ஆனமதி மூன் று மழை பெய்தே
அனைவோரும் வாழிறப்பில் ஆலமீ னே.*

தந்தன நந்தனந தனந தானன தானன தானன

செய்தக்காதி நொண்டி நாடகம்

முற்றிற்று

## செய்தக்காதி நொண்டி நாடகம்

## பிழை திருத்தம்

| கண்ணி | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 30 | உச்சினகம் | உச்சிநகம் |
| 41 | மயில் | மயிர்க் |
| 62 | பூசிகனை | பூசிதனை |
| 68 | வெங்கோப | வெங்கோப |
| 121 | றுடித்திட | துடித்திட |

# சீதக்காதி பேரில் தனிப்பாடல்கள்

### சீதக்காதியைப் படிக்காசுப்புலவர் பாடியவை

1 நேசித்து வந்த கவிராசர் தங்கட்கு நித்தநித்தம்
பூசிக்கு நின்கைப் பொருளொன் றுமேமற்றைப் புல்லர்பொருள்
வேசிக்குஞ் சந்து நடப்பார்க்கும் வேசிக்கு வேலைசெய்யுந்
தாசிக்கு மாகுங்கண் டாய்சீதக் காதி தயாநிதியே.

2 ஓர்தட்டி லேபொன்னு மோர்தட்டி லேநெல்லு மொக்கவிற்குங்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.

3 ஈயாத புல்ல ரிருந்தென்ன போயென்ன எட்டிமரங்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் மால்சீதக் காதி யொருவனுமே.

4 காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண் டொலைவில்பன்னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்ச மனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதி யிருகரமே.

5 என்னனைக் கன்று முத்தனை குனிக்கு
மிறையனை யளைக்குமே யன்று
மன்னனைக் கன்றிப்பின்னனைக் குதவா
வன்புளால் வருந்திவா டுவனோ
முன்னனைக் கொன்று பின்னனைப் புரந்த
முதுபகை யவன்பிதா வுருமற்
கன்னனைக் கொன்றுவிசயனைப் புரந்த
கவுத்துவா க்ரயலா திபனே.



### சீதக்காதி இறந்தபோது படிக்காசுப்புலவர் பாடிய கையறம்

6 மறந்தா கிலுமரைக் காசுங்கொ டாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன இருந்தாவ தென்ன இறந்துவிண்போய்ச்
சிறந்தானுங் காயற் றுரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தா லொழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே.

7 விண்ணுக்கு மண்ணுக்கும் பேராய் விளங்குதே வேந்ரனெனுங்
கண்ணுக் கினிய துரைசீதக் காதி கமலநிகர்
தண்ணுக் கிசைந்த வதனசந்த் ரோதய சாமியிந்த
மண்ணுக்கு ளேயொளித் தான்புல வோர்முகம் வாடியதே.

8 தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத் தான்றமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி யவர்கடம் வாயி லொருபிடிமண்
போட்டான் அவனு மொளித்தான் சமாதிக் குழிபுகுந்தே.

9 *பூமா திருந்தென் புவிமா திருந்தெனிப் பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னாவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடையிருந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.

### சீதக்காதி வள்ளலை நமச்சிவாயப்புலவர் பாடியவை

10 மைப்போ தகமும் வளநாடுஞ் செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக் காதியைக் காத்திருந்த
அப்போ தறிந்திலம் இப்பாழ்ம் பணத்தின் அருமையெல்லாம்
இப்போ தறிந்தனம் ஈயாத லோப ரிடத்திற்சென்றே.

11 தடக்கும்ப கிம்புரிக் கொம்ப சலப்பெருந் தந்திபட
நடக்குந் துரங்கத் துரைசீதக் காதிநன் னாட்டினல
வடக்குங் குமக்கொங்கை மின்னே யவன்றெரு வாயிலிலே
கிடக்குங் கவியும் பராராச ரத்ன கிரீடமுமே.

*இப்பாட்டு நமச்சிவாயப் புலவர் பாடியதென்பர்

தாய் சோதிடரை நிந்தித்துரைத்தல்

12 மாகத்தத் தும்புக ழான்பகை வேந்தர் மகுடம்பொடி
யாகத்தத் தும்பரி யான்சீதக் காதி யணிமலரின்
ஏகத்தத் தும்பி யிசைபாடு மார்பனி லென்மகட்கோர்
மோகத்தத் துண்டென்று சொன்னா ரிலைமுன் மொழிந்தவரே.

பாலனைப் பழித்தல்

13 வேளா மழகன் றுரைசீதக் காதியென் வீட்டிலொரு
நாளா கிலும்வரக் காண்கில னேயெந்த நாளுமவன்
தோளா லணையுஞ் சுகவாலி பத்தைத் துணிக்கவொரு
வாளாய்ப் பிறந்தனை யேமக னேயென்ன வாயுனக்கே.

சீதக்காதி பேரில் தாசி பாடியது

14 இனங்கொடுக்குங் கொடையானே[1]
தென்காயற் பதியானே சீதக் காதி[2]
இனங்கொடுத்த வுடைமையல்ல[3]
[4]தாய்கொடுத்த வுடைமையல்ல எளியா ளாசை[5]
மனங்கொடுத்து மிதழ்கொடுத்து
மபிமானந் தனைக்கொடுத்தும்[6] மருவி ரண்டு
[7]தனங்கொடுத்தும் தேடுதனங்
கள்ளர்கையிற் பறிகொடுத்துத் தவிக்கின் றேனே

தலைவன் பொருளீட்டற்குக் கப்பலேறிப் போயினனாக,
தலைவி அவன் பிரிவாற்றாது வருந்திக்கூறல்

15 தரைகண்ட மட்டும் படர்ந்தண்ட கோளமுந் தாவியெங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறுஞ்சீதக் காதி யுலகினில்வெண்
டிரைகண் டெழுங்கடன் மீதேதன் வங்கத்தைச் செல்லவிட்டுக்
கரைகண் டவனினங் காணுனென் றுசைக் கடற்கரையே.

1. கையானே 2. செய்தக்காதி 3. தனமல்ல 4. ஆய்கொடுத்ததனமுமல்ல 5. எளியேனித்தம் 6. வரைக்கும்ப 7. தனக்கொடுத்த உடைமையெல்லாம் பறி கொடுத்தே இப்படியான்



16 கதுங்கிக் கிடக்குமை வேள்சீதக் காதிக்குக் கற்பகட்டா
தொதுங்கிக் கிடக்கும் பராசர் போலொளிர் கச்சுவிம்மிப்
பிதுங்கிக் கிடக்கு மலைத்தனத் தாளுயிர் பிச்சித்தின்னப்
பதுங்கிக் கிடக்குஞ் செழுஞ்சா ளரத்தென் றற் பாய்புலியே.

17 பத்தாய மீதுங் கடாரங்க டோறும் பணத்தைவைத்துச்
செத்தா ரவர்நரர் தாமல்ல வேசெய்தக் காதியென்போன்
உத்தாய மீதுந்தன் கையா லிறைத்தும் ஒருபணமும்
வைத்தா னிலையென்றும் வைத்தான்றன் கீர்த்தியை மாத்திரமே.

18 காவொன்று கைத்தலத் தண்ணல்செல் லூரன் கனிந்துநம்மை
வாவென் றழைத்திட்ட மோதிர மேவண்மை யான தமிழ்ப்
பாவொன்றும் சற்றும் அறியாத புல்லர்தம் பக்கலிற்போய்த்
தாவென்று யாதொன்றும் கேட்காம லிட்ட தடையிதுவே.

19 பண்ணுக் கினிய தமிழ்ப்புல வோர்க்குப்
பகிர்ந்துபகிர்ந்
தெண்ணுக்கு ளாகிய பொன்னையெல் லாமள்ளி
யெண்ணி யெண்ணிக்
கண்ணுக் கினிய துரைசீதக் காதி
கடைந்தெடுத்த
மண்ணுக்கு த்யாகங் கொடுத்தான் சரீரத்தை
வைத்திருந்தே.

20 காரார் குமணன் கொடையரைக் கால்கன்னன்
கார்க்கொடைகால்
மோரான் கொடையரை யேன்கொடுத் தான் வெள்ளை
நூற்சடையன்
சீரான மாவலி முக்கான் முழுக்கொடை
செய்யவென்றே
பேரான ராசேந்த்ரன் மால்சீதக் காதி
பிறந்தனலே.

# செய்தக்காதி நொண்டி நாடகம்

## குறிப்புரை

1. நொண்டி நாடகத்தின் இலக்கணம் முதலிய விவரங்களை நொண்டி நாடகம் நூலாராய்ச்சி 7-9 பக்கங்கங்களில் காண்க.

2. வகுதைச் செய்தக்காதி, இதன் விவரத்தைத் திருமண வாழ்த்துக்குறிப்பில் பார்க்க.

3. தருமகளார் கலீபா அபூபக்று அவர்களின் திருமகள் ஆயிஷா நாயகம்.

4. கலீபா உமறு அவர்களின்மகன் அபூஷஹ்மா மதுபானம் செய்த குற்றத்திற்காக மார்க்க விதிப்படி தண்டிக்கப் பட்டதால் உயிர் துறந்தார் என்று மௌலானா ஷிப்லி நுஃமானி எழுதுகிறார். *See.* அல்-பாருக் Ed. 1908.

5. செல்லைக் குடைதரித்தோர்—மேகத்தைக்குடைபிடித்தவர்; நபி நாயகம் அவர்கள் வெளியே செல்லும் போது வானத்திலுள்ள மேகம் குடையைப் போல அவர்கள்தலைக்கு மேல் தவழ்ந்துவந்து சூரியவெப்பத்தினின்றும் காப்பாற்றியதைக் குறித்தவாறு.

6. சூகைமுலை யருந்தினோர்: நபிஅவர்கள் திருஅவதாரம் செய்து சிலகாலம் சென்றபின் ஹலீமா என்ற செவிலித்தாயைத் தீர்மானம் செய்து நபியவர்களுக்குப் பால் கொடுக்கும் படி ஏற்பாடாயிற்று. ஹலிமா அவர்களுக்கு ஒருதனம் சூகையாயிருந்தது. நபிஅவர்களுக்குப் பால் கொடுக்க ஏற்பாடானவுடன் சூகையாயிருந்த தனம் பருத்துப் பால் பெருகியது என்ற கதையை விளக்கியபடி.

7. மதியை யழைத்த நபி: இவ் வடிகளால் நபிநாயகம்அவர்கள் திமிஷ்கு தேசத்துஅரசன் ஹபீபு என்பவனது வேண்டுகோளின் படி அமாவாசை அன்று சந்திரன் தோன்றும்படி செய்து, பின்னர்க் காட்டிய அற்புதச் செயலைக் குறிப்பிக்கிறார்.

## அரிய வழக்குச்சொற்கள்

| | |
|---|---|
| ஆக்கினைக்களரி | துலுக்கர் |
| உச்சிக் கொள்ளுதல் | பத்தாசு |
| ஒட்டைக்காடு | பாசாளம் |
| களச்சேவல் | பொந்தலியர் |
| குச்சரியர் | முசிலை |
| கைலாகு | மெய் வழக்கஞ் செய்தல் |
| சலக்கம் | ராசதக்காரர் |
| சவுக்கை | ராவுத்தர் |
| சுக சுறுக்கு | லாடர்கள் |
| சோணங்கி நாய் | வட்டா |
| தக்லா | வருக்கர் |
| துடக்கு | வெள்ளைவட்டம் |

## திருமணவாழ்த்து, நொண்டி நாடகம் இந்நூல்களில் வந்துள்ள அறபி, பார்ஸி, ஹிந்தி பதங்கட்குப் பொருள்

அகலாத், P. [illegible] அக்லியூன் அல்லது அகிலூன். இது திமிஷ்க் பட்டணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஏழுவருணப் பட்டாடை; செடி கொடிகளின் உருவம் போட்டு நெய்யப்பட்டது.

அசருப்பூத்தொடையல் - P. اشرفی + பூத்தொடையல். அஷ்றபி ஒரு தங்க நாணயத்தின் பெயர்; கல்கத்தாவில் சுமார் பதினாறு ரூபாய் மதிப்புள்ளது; அஷ்றபியால் தொடுக்கப்பட்ட மாலை என்பது பொருள்.

(அஞ்சு) வக்து - இஸ்லாம் சமயத்தில் தொழுகை இரண்டாவது கடமையாகும். ஒவ்வொரு முஸ்லிமும் ஐந்து நேரம் தொழ வேண்டும். ஐந்து நேரங்களாவன : 1. பஜ்று நேரம், فجر கிழக்கு வெளுத்த பின் சூரியன் உதயமாகு முன்; 2. ளுஹறு நேரம், ظهر பகலில் சூரியன் அடி சாய்ந்த பின்; 3. அஸறு நேரம், عصر சூரியன் அடைவதற்கு ஒன்றே கால் மணிக்கு முன்; 4 மக்ரிபு. நேரம், مغرب சூரியன் அடைந்த வுடன், 5. இஷா நேரம், عشا சூரியன் அடைந்து ஒரு மணி நேரத்துக்குப் பின்.

அம்பர் - A. عنبر அம்பர்; வாசனைத்திரவியம்.

அல்லா- الله அல்லாஹு; எல்லாப்பொருள்களையும்படைத்துக் காக்கின்ற கடவுள்.

ஆசுரு நோன்பு - عاشورا + நோன்பு, முஹற்றம் மாதம் பத்தாம் நாள் இருக்கிற உபவாசம்.

ஆலிம் - A. عالم அறிந்தவர்.

ஆலிங்கள் - ஆலிம்கள்

ஆவுரே-...... ادرو کهاں سے آئے, வாடா, எங்கிருந்து வருகிறாய்? آپ کھاے بلاے آپ தாங்கள் கூப்பிட்டீர்கள்; நான் வந்தேன். کھاے کھاے சாப்பிட டா சோறு. இவை உறுது வசனங்கள்; இவற்றைத் தமிழுடன் சேர்த்துப் பாடியிருக்கிறார்.

இசுலாமானவர் - اسلام + ஆனவர், இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்தவர்.

ஈமான் - A. ایمان நம்பிக்கை.

உலமா - A. علماء ஆலிம் என்ற பதத்தின் பன்மை.

ஒசிறு - P. وزیر, வஜீர், மந்திரி.

ஒசீறு - See ஒசிறு.

ஒலி - A. ولی வலி; அல்லாஹு-வின் நண்பர், அல்லாஹு-வின் நட்பைப் பெற்றவர்.

கருபா - See கருபதுல்லா.

கருபதுல்லா - A. كعبة الله கஃபதுல்லா மக்காவில் இருக்கிற புராதனப் பள்ளிவாசல்.

கமர் பந்து - P. کمربند அரைக் கச்சு.

கபாய் - A. قباء சட்டைக்கு மேல் அணியும் நீளமான மேல்சட்டை. அதற்குப் பொத்தான் இருக்காது.

கலா - A. قضا கடன் தொழுகையை நிறைவேற்றுதல். விவரம் தெரிந்த வயதிலிருந்து அநுதினமும் ஐந்து நேரம் தொழுவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை. இவ்விதம் செய்யாதவர்கள், தங்கள் வாழ்நாளில் எச்சமயத்திலேனும் மார்க்கக் கிரியைகளைச் சரிவர நடத்த வேண்டுமென்ற மனவுறுதியுடன் ஐந்து வேளைத் தொழுகையைக் கடைப்பிடித்தால், முன் செல்லாக வேண்டிய தொழுகைக்காக அநுதினமும் கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கடன்தொழுகையை நிறைவேற்றுதல்

கலிமா - A. كلمة இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துகொள்ளுகிறவர் சொல்ல வேண்டிய விசுவாசப்பிரமாண வாசகம். லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மது அல் - றசூலுல்லாஹி. لا اله الا الله محمد الرسول الله (அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுளில்லை. முஹம்மது அல்லாஹ்வின் திருத்தூதர்).

காகான் - خاقان (துருக்கிப் பதம்) பேரரசர்.

காதிமார் - A. قاضي காலி + T. மார் ; See காலியார்

காபர் - A. كافر காபிர், முஸ்லிம் அல்லாதவர்.

காலிமார் - A. قاضي காலி + T. மார்; See காலியார்.

காலியார் - A قاضي காலி + T. ஆர்: முஸ்லிம் நியாயாதிபதி; ஸிவில், கிரிமினல்முதலிய வழக்குக்களையெல்லாம் விசாரணை செய்து தீர்ப்புச் சொல்லுகிறவர்.

குக்கும் - A. حكم ஹுக்கும் உத்தரவு, சட்டம்.

குபிறர் - See குபிரானபேர்,

குபிரான பேர் - முஸ்லிம்அல்லாதவர். A. كفر

குறைசிக்கிளை - A قريش குறைஷி + T. கிளை - நபிநாயகம் அவர்களின் குலத்தின் பெயர்.

கொத்துவா பள்ளிவாசல் A. خطبة குத்பா + T. பள்ளிவாசல் - அஞ்சு வேளைத் தொழுகையும், வெள்ளிக்கிழமை பகல்நேரம் ஜும்ஆத் தொழுகையும் ஈதுப் பெருநாட்கள் தொழுகையும் செய்வதற் கேற்பட்ட பள்ளிவாசல்.

கோன் ரே - [illegible] நீ என்ன ஜாதி?

சக்காத்து - A. زكاة ஜகாத் - ஏழைவரி.

சகலாத்து - (سقلاط) (சகில்லாத், சகிலாத், சகல்லாத்). சிவப்பு நிறமான துணி, சிவந்த ஆடை. இதைச் சிலர் துருக்கி வார்த்தை என்று கருதுகின்றனர்.

சதிர் - A. ستري ஸத்றி - சட்டைக்கு மேல் அணியப் படுகிற அரைச்சட்டை.

சறீபு - A. شريف ஷறீபு - தலைமைக்காரர்.

சறுபந்து - P. سر بند தலைக் கவசம்.

சறுவந்து - See சறுபந்து.

சலவாத்து - A. صلوات ஸலவாத்; நபிநாயகம்மீது ஓதப்படும் துஆ.

சலாம் - A. سلام சலாம்

சவ்வாசு - P. شاباش ஷாபாஷ்! சவாசு.

சவாது - A. جواد ஜவாது; வாசனைப் பண்டவகை.



சானிப் பயல்கள் H. سائل ஸானி (யாசகன்) + T. பயல்கள்; முகலாயர்சேனையில் இராணுவசேவகர்களேயன்றிப் பிறரும் கூடியிருப்பது வழக்கம். வணிகர் தம் பண்டம் படிகளுடனும், குடியானவர் தானிய தவசங்களுடனும் படைகள் செல்லும் இடமெல்லாம் செல்வார்கள்; இராணுவ சேவகர்களுக்குப் படி அளக்க முகலாயசர்க்காரால் நியமிக்கப் பட்ட தானிய வியாபாரிகளும் இருப்பார்கள். இன்னும் ஹகீம்களும், மாந்திரிகர்களும் கூடவே செல்வார்கள். இவர்கள் எல்லோரும் தத்தம் தொழிலில் கவனமாயிருப்பார்கள். இவர்களை அண்டிப்பிழைக்க யாசகர் பலர் செல்வார்கள். இவர்கள் தேகவலிமை யுடையவர்களாய்த் தம் வாழ்நாளெல்லாம் குடும்பத்தோடு படைகளுடனே கழிப்பார்கள்.

க்கூறு - A. شكر ஷுக்று - வந்தனம்.

புகானல்லா - A. سبحان الله ஸுப்ஹானல்லாஹ்; அல்லாஹு தூய்மை யானவன்; எல்லாப் புகழும் பெருமையும் அவனுக்கே உரியவை.

ன்னத்து - A. سنة சுன்னத்; நபிகள்பிரான் நடந்து காட்டிய முறைகளைப் பின்பற்றுதல்.

செய்யிதுகள் - A. سيد சைய்யிது; நபிகள்பிரானின் திருப்புதல்வி பாத்திமா நாயகத்தின் பின்சந்ததியார்.

சோரே - [illegible] திருடனைப்பிடி. மக்களே ! விட்டுவிட வேண்டாம்.

டகலா - H. دگلا பருத்திப்பஞ்சை ஊட்டிச் செய்யப்பட்ட அங்கி வகை.

தாலா - H. تالا பூட்டு.

தீனவர் - A. دين தீன் + T. அவர்; See தீனோர்.

தீனோர் - A. دين தீன் + T. ஓர்: இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியவர். A. தீன் - மார்க்கம்

துரு - P. طره துற்றஹ் - தலைப் பாகையில் அணியும் ஆபரணம ; அலங்கரிககப்பட்ட குஞ்சம்.

துருய் - See துரு.

துல்துல் - دلدل நபிநாயகம் அவர்களின் குதிரையின் பெயர். இக்குதிரையை நபிகள் பிரான் அலியாருக்குக் கொடுத்தார்.

துவா - A. دعا துஆ - பிரார்த்தனை, வேண்டுதல், துதித்தல்.

துனியா - A. دنيا துன்யா; உலகம், பிரபஞ்சம்.

நசுறானிகள் - A. نصراني கிறிஸ்தவர்.

நபி - نبي தீர்க்கதரிசி; அறிவிக்கிறவர்.

நபுல் நோன்பு - See நவில்.

நவில் - A, نفل நபுல் - மிகுந்த புண்ணியம் கிட்டவேண்டுமென்ற கருத்துடன் செய்கிற கிரியைகள்: உதாரணமாக, தொழுகை நோன்பு முதலிய கிரியைகள்

நிக்காஹ் - A. نكاح நிகாஹ் - முஸ்லிம் கலியாணம்.

நிசார் - P. ازار இஜார்; நீண்ட கால்சட்டை.

நிசானிகள் - P. نشانی நிஷானி ; அடையாளங்கள்.

பக்காழி - H. پکهال பகால்—தண்ணீர் எடுப்பதற்குத் தோலினற் செய்யப்பட்ட பை.

பக்கீர் - A. فقیر பகீர் - ஒரு நாள் உணவு உள்ளவனுக்குப் பகீர் (ஏழை) என்று பெயர். ஒன்றுமில்லாதவனுக்கு A. மிஸ்கீன் (யாது மற்றவன்) என்று பெயர்.

பட்டாணிகள், பட்டான் پٹھان வடமேற்கு எல்லைப்புறத்தில் வசிக்கிற ஜாதியார்; இவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கு 'அப்கான்' என்ற பெயரும் உணடு. இந்தியாவில் ரோஹில்கண்டு பிரதேசத்திலும், மற்றும் சில பாகங்களிலும் இக்கூட்டத்தார் வசிக்கிறார்கள்.

பறலு - A. فرض - அல்லாஹ்வின் கட்டளைப்படி நிறைவேற்றவேண்டிய தொழுகை முதலிய கடமைகள்.

பாத்திகா - A. فاتحه பாதிஹா- தொழுகை முடிந்தபின்னரும், நற்காரியங்கள் செய்யுமுன்னரும், செய்து முடித்த பின்னரும் அல்லாஹுவையும் றசூல் அவர்களையும், பெரியோர்களையும் வேண்டிக்கொள்ளுதல்.

பிசுமிச் சொல்லி - பிஸ்மில்லாஹி அல் - றஹ்மான் அல் றஹீம் بسم الله الرحمن الرحيم என்ற வசனத்தை உச்சரித்தபிறகுதான் முஸ்லிம்கள் எக்காரியத்தையும் தொடங்குவார்கள். அதன் பொருள்: கருணையும் கிருபையும்உடையோனாகிய அல்லாஹுவின் திரு நாமத்தால் காரியத்தைத் தொடங்குகிறேன்.

புறுக்கான்-A. فرقان புறகான- முஸ்லிம்களின் வேத புத்தகமாகிய திருக்குற்ஆனின் மற்றொரு பெயர். பொய்யினின்றும் உண்மையைப் பிரித்தறிவிக்கக் கூடியது என்பது பொருள்.

முறீது-A. مرید முறீது-சிஷரானவர்; மார்க்க விஷயங்களில் சிஷரானவர்.

மூமிங்கள் - A. مومن மூமின் - நம்பிக்கை கொண்டவர்.

மொகரா-P. مهر முஹர்-தங்க நாணயம். இந்தியாவில் இதன் விலை ஒரு பவுன் பதினாறு ஷில்லிங்கு ஆகும்.

மோகரம்-See - மொகரா.

மோதின்கள் - A. موذن முஅத்தின்: பள்ளிவாசலில் நிகழும் ஐந்து வேளைத் தொழுகையில் ஒவ்வொரு வேளையும் தொழுகைக்குக் கூப்பிடுகிறவர்.

றப்பில் ஆலமீன்-A. رب العالمين றப் - அல்-ஆலமீன் - எல்லா உலகங்களையும் காத்தருளும் ஆண்டவன்.

லெப்பைமார் - A لبی + T. மார் முஸ்லிம்களுக்கிடையே மார்க்கக்கிரியை களைச் செய்வதற்கு உதவி செய்கிறவர்.

ஹஜ்ஜு - A. حج புண்ணிய க்ஷேத்திரங்களாகிய மக்கா, மதினா என்னும் இடங்களுக்கு யாத்திரை செய்தல்.

## திருமண வாழ்த்து, நொண்டி நாடகம் இந்நூல்களில் வந்துள்ள அறபிப்பெயர்களின் குறிப்புரை

அசன் - உசைன் See ஹஸன் ஹுஸைன்.

அப்பாசுகான் - عباس خان அப்பாஸ்கான்.

அபூபக்கர்-See அபூபக்று.

அபூபக்று - ابو بكر இஸ்லாமாவதற்குமுன் இவர்பெயர் அப்துல் கஃபா என்பது. அபூபக்கர் என்ற பெயர் நபிகள்பிரானால் இவருக்கு அளிக்கப்பட்டது. இவர் இஸ்லாமிய ஏகாதிபத்தியத்தின் முதல் கலீபாவாய் விளங்கினார்; கி. பி. 632 முதல் 634 வரை அரசு செலுத்தினார். இவர் ஒழுக்கத்தில் மிகச்சிறந்தவர். அல்-ஸித்தீக் (வாய்மையாளர்) என்று இவர் பாராட்டப்படுகிறார்.

அபூவக்கர்-See அபூபக்று

அலி - علی இவர் நான்காம் கலீபா (கி. பி. 656–661). இவர் நபிகள்பிரானின் திருமகள பாத்திமாநாயகத்தை மணஞ்செய்திருந்தார். நபிகள்பிரானின் வபாத்துக்குப்பின்பு அலியாரே கலீபாவாக இருக்கத் தகுதியுடையவரென்பது ஒரு சாரார் கருத்து. இவர்கள் ஷீஆ வகுப்பார் என்று வழங்கப் படுகிறார்கள். அலியார்க்கு அஸதுல்லா (அல்லா(ஹ்) வின் புலி) என்ற பட்டப் பெயரும் உண்டு.

அலிமருகான் - علی مردان خان அலிமர்தான கான் - இவர், காஞ்சிபுரத்தில் பௌஜ்தாராக இருந்தார்; துல்பகார் கான் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலிய பிரதேசங்களில் இருந்த ஜமீன்தார்களிடம் கப்பம் வசூல்செய்யச் சென்றபோது அலிமர்தான் கானும் கூடச் சென்றிருந்தார்.

அலியார் - A. அலி+ T யார் See அலி.

அலியுல்லா - علی الله See அலி.

அவ்றங்கு செய்கு சாகிபு اورنگ زیب صاحب அவ்றங்கு சேபு சாஹிபு முகலாயச் சக்ரவர்த்தி (1658–1707).

அவுதுல்லா - عبدالله அப்துல்லாஹ் ; முகம்மது நபி அவர்களின் தந்தை.

இகுத்தாறுகான் - اختار خان இக்தாறுகான்.

இமாமுகான் - امام خان இமாம் கான்.

ஈசுபு - يوسف نبی ஈசுபுநபி; யஃகூப் நபி அவர்களின் புதல்வர்.

உதுமான் - عثمان கலீபா உமர் அவர்களுக்குப் பின் மூன்றும் கலீபாவானவர் (கி. பி. 644–656). இவர் காலத்தில்தான் திருக்குற்ஆன் இப்பொழுதிருக்கிறபடி தொகுக்கப்பட்டது.

உமர் - عمر உமறு; இவர் அபூபக்றுக்குப்பின் இரண்டாம் கலீபாவானார் (கி. பி. 634—644). இவர்காலத்தில்தான் இஸ்லாமிய ஏகாதிபத்தியம் கிழக்கிலும் மேற்கிலும் பரவிற்று. அபூஉபைதா, காலித் இப்னு வலீத் என்னும் இவர்கள் கிரேக்கர்களை ஸிரியா, பிலிஸ்தியா முதலிய இடங்களில் முறியடித்தனர். ஸஅத் இப்னு அபிவக்காஸ், நுஃமான் முதலிய படைத்தலைவர்கள் இராக் பிரதேசத்தை ஜெயித்துப் பாரசீக ராஜ்யத்தைக் கைப்படுத்தினர். அம்ரு இப்னுல் ஆஸ் எகிப்து பிரதேசத்தை முஸ்லிம் குடையின்கீழ் நிலைநாட்டினர். இன்னும் முஸ்லிம் படைகள் வியக்கத்தக்க முறையில் வெற்றி பெறுவதற்குச சாதனமாய்ச் சில நிலயங்களை ஸ்தாபித்ததனால், உமறு இஸ்லாமிய சரித்திரத்தில் மிகக்கீர்த்திவாய்ந்தவரானார்.

உமறுகத்தாப் - عمر ابن الخطاب உமறு இப்னு அல் கத்தாப் See உமர்.

உமறுப்புலவர் - சீறுப் புராணம் இயற்றியவர்.

கதீஜா خديجة - முகம்மது நபி அவர்களின் முதல் மனைவி.

கானுகான்-خان خان கானேகான்.

குட்டியாலிப்பிள்ளை T. குட்டி + A. ஆலி + T. பிள்ளை-சீதக்காதியின் சபையில் இருந்தவர்.

சதக்கத்துல்லா- صدقة الله ஸதக்கத்துல்லாஹ் - சீதக்காதியின் நெருங்கிய நண்பர்.

சமூசேறுகான் - شمشير خان ஷம்ஷீர்கான்.

சவ்வாசுகான் - شاه باز خان ஷாபாஷ்கான்.

சுஊபுகான் - துல்பகார்கான்; ذوالفقار خان இவர் முகலாய வீரர்களுடன் தக்ஷிணதேசத்தின் மீது படையெடுத்துச் சென்று வெற்றிமாலை சூடிக் கீர்த்தி பெற்ற படைத்தலைவர். இவர் இராஜரீகத்திலும் கைதேர்ந்த நிபுணர். சிவாஜியின் இரண்டாவது குமாரர் ராமராஜா செஞ்சியிலிருந்தபோது அக் கோட்டையை முற்றுகை யிட்டு ஜெயித்தவர். இவருடைய வாழ்க்கையின் வரலாற்றைக் கீழ்க்கண்ட நூல்களில் விரிவாகக் காணலாம்.

J. N. ஸர்க்கார்: அவ்றங்கு சேபு சரித்திரம். வால்யம் 5, பக்கங்கள் 70—109; பீல்: ஓரியண்டல் பயாகிரபிகல் டிக்ஷனரி.

சுலைகா زليخا - ஈசுபு நபி அவர்களின் மனைவி.

சுலைமான்- سليمان சுலைமான் நபி.

செய்யிது நயினான் - சைய்யிது நயினான்.

சேகாலி லெவ்வை - شيخ علي لبي ஷைகு அலிலப்பை

சேகுக்கன்று - A. شيخ ஷைகு + T. கன்று.

தத்துலுகான் - قتلو خان கத்லூகான்.

தாவூதுகான் داود خان தாவூத்கான் பானீ என்னும் பட்டாணி ஆபீஸர். கிலூருகானின் புதல்வர். இவருடைய பெயர், தக்ஷிணதேசத்தில் பல பழங்கதைகள் மூலமாக இந்நாள்வரை நிலவு



கிறது. இவர் அவ்றங்கு சேபு சக்ரவர்த்தியின்கீழ் பல வருஷங்கள் சேவகம் செய்திருக்கிறார். தக்ஷிண தேசத்தின் மீது துல்பகார்கான் படையெடுத்து வந்தபோது அவருக்கு அடுத்தபடியாக தாவூத்கான் படைத்தலைவராக இருந்தார்; பிறகு கர்நாடகப பிரதேசத்தில் நிஜாமாகவும் இருந்தார். இவர் சரிதை விரிவாக 'தூஜக்கெ வாலாஜாஹி'யில் கூறப்பட்டிருக் கிறது. (S. M. H. நயினார், தூஜக்கெ வாலாஜாஹி. இங்க்லிஷ் மொழி பெயர்ப்பு. சென்னை சர்வகலாசாலை மூலமாக 1934-ல் பிரசுரஞ் செய்யப்பட்டது.)

நபிநாயகம் See. முகம்மது றசூல் நபி.

நவ்வாசுகான் - نواز خان - நவாஜ் கான்.

நாதிறுகான் - نادر خان நாதிறு கான்.

நூலைத்திரட்டினோர் See - உதுமான்.

பல்கீசு - بلقيس சுலைமான் நபி அவர்களின் மனைவி.

பாத்து முத்து فاطمة - பாதிமா; முகம்மது நபி அவர்களின் புதல்வி, அலி அவர்களின் மனைவி; ஹஸன், ஹுஸைன் என்பவரின் மாதா.

பெரிய தம்பி See விசயரகுநாதப் பெரிய தம்பி.

பூலேகான்- بهلول خان பஹ்லூல் கான்.

மக்கா இசுமாயீல் கான் مكه اسماعيل خان மக்கா இஸ்மாயீல்கான்— இவர் ஷேர்கான் லோதியின் புதல்வர்களுள் ஒருவர். இவர், ஆதில்ஷா கோல்கொண்டாவில் அரசு செலுத்தியபோது சேனையின தளகர்த்தராக இருந்தார்; பிறகு வாலிகண்டபுரத்திற்குக் கவர்னராகவும் இருந்தார். அவ்றங்கு சேபு சகரவர்த்தி கோல்கொண்டாவை ஜெயித்த பிறகு மக்கா இஸ்மாயீல் கான முகலாயருடன் சேர்ந்துகொண்டார்.

மகம்மது See முகம்மது றசூல் நபி.

மகவுலு مقبول خان மக்பூல்கான்.

மலுக்கு சமந்தறுகான் ملك سمندر خان - மலிக் சுமந்தர் கான்.

மாமூநயினார்பிள்ளை A. مأمون மௌமூன் + T. நயினார்ப் பிள்ளை.

மீராப்பிள்ளை மரக்காயன் P. ميران மீரான் + T. பிள்ளை மரக்காயன்.

முகம்மதுறசூல்நபி- محمد رسول نبى கி.பி. (570—632) அறபு நாட்டில் மக்கா நகரில் அவதரித்தவர். அல்லாஹுவின் தூதர். இஸ்லாம் சமயத்தை ஸ்தாபித்தவர். நபி - அறிவிக்கின்றவர்; றசூல் - தூதர்.

முகம்மது See முகம்மது றசூல் நபி.

முகம்மதுகான் محمد خان -முஹம்மது கான்.

முஹிய்யுத்தீன் محى الدين முஹிய்யுத்தீன் - இவர் திருநாமம் அப்துல் காதிறு ஜீலானி என்பது. இவர்காதிறிய்யாக் கூட்டத்தின் ஸ்தாபகர். இவருக்கு முஹிய்யுத்தீன் (மார்க்

கத்தை உயிர்ப்பிக்கிறவர்) என்ற பட்டப் பெயர் பொருத்தமானதே. இஸ்லாம் மார்க்கத்துக்கு இவர் இணையற்ற கைங்கரியங்கள் செய்திருக்கின்றார். தமிழ் நாட்டில் முஸ்லிம்களிடையே இவர் பெயர் பரவியிருக்கிறது. **முஹியியுத்தீன் மாலை, முஹியியுத்தீன் காரணச் சரித்திரம்** முதலிய நூல்கள் இவர் பெருமையை எடுத்துரைக்கின்றன. இவர் பக்தாத் பட்டணத்தில் ஹிஜ்றி 561-ஆம் ஆண்டில் (1165 A.D.) அடக்கம் செய்யப்பட்டார்.

முகையதீன் - See முஹிய்யுத்தீன்.

முதலியார் லெப்பை - இவர் பெயர் விவரம் தெரியவில்லை.

வாவா - P. بابا பாவா - இவர் பெயர் விவரம் தெரியவில்லை.

ஹஸன் - ஹுஸைன் حسن حسين இவர் இருவரும் அலியார்க்கும், பாத்திமா நாயகத்துக்கும் பிறந்த குழந்தைகள். அலியார்குப் பின் ஹஸன் கலீபாவாகப் பட்டம் பெற்றுச் சிலகாலத்தில் தம் பதவியினின்று நீங்கவே அபூஸுப்யான் குமாரர் முஆவியா கலீபாவானார்.

ஹுஸைன் அவர்கள் ஹிஜ்ரி 61-ம் ஆண்டில் கர்பலாவில் முஆவியாவின் குமாரர் எசீது என்பவரால் ஷஹீது செய்யப்பட்டார். முஹர்றம் மாதம் முதற் பத்துத் தினங்களில் இவருடைய ஷஹாதத்தைப் பற்றி ஷீஆக்களால் துக்கம் கொண்டாடப்படுகிறது.

## திருமண வாழ்த்து, நொண்டி நாடகம் இந்நூல்களில் வந்துள்ள தமிழ்ப்பெயர்களின் குறிப்புரை

ஏசப்பநாயக்கன் - ஏசப்பன்— எச்சப்ப நாயக்கன். இவர், விஜயநகரத்திலிருந்து ஹிந்துராஜ்யத்தைச்சேர்ந்த பிரதானிகளின் வம்சத்தைச் சேர்ந்தவர். இவருடைய முன்னோர்கள் கனோஜிலிருந்து வந்த ராஜபுத்திரர்கள் என்றும் சொல்லிக் கொள்வார்கள். குதுப் ஷாஹி துரைத்தனத்தில் இவர் 'சேனையைச் சேகரம் செய்பவர்களில் ஒரு தலைவராக நியமிக்கப்பட்டார். கோல் கொண்டா பிடிக்கப் பட்ட போது கடப்பை ஜில்லாவில் முஹம்மது சாதிக் என்பவருடன் ஒற்றுமையாய் இருந்து முகலாயர்களை எதிர்த்துப் போர் செய்தார்; அதற்குப்பின் முகலாயருடன் சேர்ந்து உறவாடினார்; பிறகு செஞ்சியில் ராமராஜாவுடன் சேர்ந்துகொண்டார்; பின்னர் ராஜாவிடமிருந்து பிரிந்து தனியாகச் சிலகாலம் இருந்தார். துல்பகார்கான் இவருக்குக் கர்நாடக பிரதேசத்தில் மூன்று லக்ஷம் வராகன் வருமானம் வரக்கூடிய ஜாகிரும் மன்ஸபும் வாங்கிக் கொடுத்து இவரை (எச்சப்ப நாயக்கனை)த் தம் வசப்படுத்திக் கொண்டார். செஞ்சிக் கோட்டையில் முற்றுகை நடந்து கொண்டிருந்த போது முகலாயச் சக்ரவர்த்தி அவ்றங்குசேபு அவர்களுக்கு எச்சப்ப நாயக்கன் ஒரு கடிதம் எழுதினார். அதில் துல்பகார்கான் ராமராஜன் என்ற மஹாராஷ்ட்ர அரசனுடன் கூடிச் சதியாலோசனை செய்வதாக எழுதப்பட்டிருந்தது. இக் கடிதத்தை துல்பகார்கானின் தந்தை அஸத்கான் என்ற பிரதான மந்திரி தடுத்துவிட்டார். பிறகு எச்சப்ப நாயக்கன் தர்பாரில் இருந்தபோது திடீரென்று துல்பகார்கான் அவரைக் கைதிசெய்து ராஜத்துரோகத்திற்காகக் கொலை செய்து விடும்படி கட்டளையிட்டார்.

ஒட்டிரட்டி - ஒட்டர் தேசத்தரசர். (ஒரிஸா மன்னர்) ரெட்டி - ரெட்டி அரசர்கள்.

கந்தசுவாமிப்புலவர் - இவர் திருப்பூவணப் புராணம், திருஆப்பனூர்ப் புராணம் முதலியன பாடியவர்.

காலுங்கையுந் தறித்திடு - "திருடன் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் அவர்கள் கைகளை வெட்டிவிடு." குர்ஆன் 5: 41.

சந்தாயி வயிரோயி கோர்ப்பரே - சந்தா வைரோஜி கோர்பரே மகாராஷ்டிர சேனாதிபதிகளில் ஒருவர்.

சிகோஜி ராயன் - சிவாஜிராஜா.

செவ்வந்திசர்.

44260



சேதுபதி - இராமநாதபுரத்து அரசர்களின் வம்சப் பெயர்.
சேமன் வாங்கிசம்.
சொக்கர்.
முப்பது நோன்பு - றமலான் மாதத்தில் முப்பது நாள் பகலில உபவாச மிருத்தல்.
மூவர் பிரான்.
ராமராயன், ராமுராஜன் - சிவாஜியின் புதல்வர். இவருடைய தாய் இறந்த பிறகு சிவாஜியின் மற்றொரு புதல்வராகிய சாம்பாஜி என்பவர் ராமராஜாவை ராஜகட்டத்தில் சிறை செய்து வைத்திருந்தார். முகலாய சக்ரவர்த்தி அவ்றங்குசேபு அவர்கள் சாம்பாஜியைப் வென்ற பிறகு 1689-ஆம் ஆண்டில் அவருக்குக் கொலைத்தண்டம் விதித்தார். சாம்பாஜி இறந்தபின் 1689-ஆம் ஆண்டின் கடைசியில் ராமராஜா மஹாராஷ்டிரர்களின் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
ராமராஜா முகலாயருக்குப் பயந்து செஞ்சியில் போயிருந்தார். துல்பகார்கான் ஒரு பெரும் படையுடன் வந்து செஞ்சிக் கோட்டையை ஏறக்குறைய எழு வருடங்கள் முற்றுகை செய்து பிடித்தார். ஆனால் ராமராஜா தப்பி ஓடிவிடவே, முகலாயர்எண்ணம் முற்றும் பலிக்கவில்லை.
விசயரகுநாதப் பெரியதம்பி - இது சீதக்காதியின் பட்டப் பெயர்; இப்பெயரின் விவரத்தை சீதக்காதி வரலாற்றில் காண்க.

---

## திருமணவாழ்த்து, தொண்டி நாடகம் இந்நூல்களில் வந்துள்ள இடப்பெயர்கள் அகராதி

அரியலூர்
ஆகரை (ஆக்ரா)
கண்ணனூர்
காயல்
காவேரி
கிழக்கரை
கோல்கொண்டா
கோழிக்கோடு
சிரகிரி
சீரங்கம்
செஞ்சி
சென்னப்பட்டணம்
சோலை மலை (அழகர் மலை)
திண்டுக்கல்
திருமருதூர்
திருப்பாலைக்குடி
தேவிபட்டணம்
தொண்டி
நால்கொண்டா
[illegible]ம்
[illegible]குடி
[illegible]
மது[illegible]
[illegible]டல்
பா[illegible]
புதுக்கோட்டை
ராமனாதபுரம்
[illegible]
[illegible]
[illegible]சி
[illegible]
வாலிகண்டபுரம்
வேலூர்

TAMIL NADU ARCHIVES No. 11044 5 MADRAS
V211,147K
N53